பக்கங்கள்: 20 விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 01 வள்ளுவர் ஆண்டு 2047 மார்கழி 07, வியாழக்கிழமை 22.12.2016 கதிர் 47

மீண்டும் புதுப் பொலிவுடன் சாறிகளின் சாம்ராஜ்ஜியம்

சரவணா ரெக்ஸ்

இல.526,529 பருத்தித்துறை வீதி, நல்லூர்,யாழ்ப்பாணம். தொ.பே.: 0778448045

இல.171, பிரதான வீதி, நெல்லியடி. தொ.பே.: 021 226 2992

# மாகாண சபையில் கேவல அமர்வு!

## நேற்று அரங்கேறியது

யாழ்ப்பாணம், டிசெம்பர் 22

**வடக்கு மாகாண சபையின் மிகக் கேவலமான அமர்வு நேற்று அரங்கேறியது. தூஷண வார்த்தை, ஒருமையில் அழைத்தல் எல்லாம் தாராளமாக இடம் பெற்றன. இந்தக் குத்துவெட்டு எல்லாம் ஆளும் கூட்டமைப்பின் அணிகளுக்கு இடையில் நடந்தேறியமையைப் பார்த்து எதிர்க்கட்சியினரே வாயைப் பிளந்து உட்கார்ந்திருந்தனர்.**

அவ்வளவும் நடந்தேறும் போது முதலமைச்சர் சீ.வி.விக்னேஸ்வரனும், அமைச்சர்களும் அதிர்ச்சியில் உறைந்து பார்த்திருந்தனர்.

சபையை நடத்த முடியாது அவைத் தலைவர் சி.வீ.கே. சிவஞானம் அல்லாடினார்.

ஆளும் தரப்பினர் தமக்கு இடையில் முதலமைச்சர்களுக்கு ஆதரவு அணி, அவருக்கு எதிரான அணி என இரண்டு கன்னையாகப் பிரிந்து மோதிய மையை அவதானிக்க முடிந்தது.

பக்கம் 19

# அவைத் தலைவர் - சிவாஜிலிங்கம் மோதல் நிலைமை வரை முறுகல்!

## தூஷண வார்த்தைகள் கூடப் பிரயோகம்

யாழ்ப்பாணம், டிசெ.22

நேற்றைய மாகாண சபை அமர்வின்போது அவைத் தலைவர் – சிவாஜிலிங்கம் முறுகல் நேரடியாக மோதத் தயாராகும் நிலைவரை முற்றியது.

முதலமைச்சரின் கீழான அமைச்சர்கள்மீதான குழுநிலை விவாதம் நடைபெற்ற போது காரசாரமான விவாதம் முற்றி குழப்ப நிலைமை ஏற்பட்டது.

உறுப்பினர் சயந்தன் முதலமைச்சரின் நடவடிக்கைகளை காரசாரமாக நீண்ட நேரம் விமர்ச்சித்தபோது அவைத்தலைவர் குறுக்கிட்டு இன்றைய விவாதத்துக்குரிய விடயத்தைப் பேசுமாறு கூறினார்.

"ஒட்டு மொத்த மாகாண சபை சார்பில் கருத்துக் கூறும் உரிமை

பக்கம் 19

## தீர்வுத் திட்டத்தை நோக்கி நகரும் இச்சமயத்தில்

# தமிழ்த் தேசிய அரசியலை முதல்வர் இரண்டு கூறுகளாகப் பிரித்துவிட்டார்

## நீதியரசர் விக்னேஸ்வரன் மீது அஸ்மின் தாக்குதல்

கொழும்பு, டிசெ.22

மக்கள் தீர்வுத் திட்டத்தை நோக்கிச் செல்லுகின்ற இவ் வேளையில் முதலமைச்சர் தமிழ்த் தேசிய அரசியலை இரண்டு கூறுகளாகப் பிரித்திருக்கின்றார். இத்தகைய பிரிவுகள் அவசியமற்றவை. அவரைச் சார்ந்து இருப்பவர்கள் அவரைப் பிழையாக வழிநடத்தியிருக்கிறார்கள். அவர் தன்னுடைய பாதையை மீள்பரிசீலனை செய்யவேண்டும் எனவடமாகாண சபையின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த முஸ்லிம் உறுப்பினர் அயுப் அஸ்மின் சாடியுள்ளார்.

வடமாகாண சபையின் 71 ஆவது அமர்வின்போது முதலமைச்சரின் கீழ் உள்ள அமைச்

பக்கம் 02

## தமிழக மீனவர்கள் 12 பேர் கைது!

கொழும்பு, டிசெ.22

தமிழக மீனவர்கள் 12 பேர் எல்லை தாண்டி வந்த குற்றச் சாட்டில் நேற்று கைது செய்யப்பட்டுள்ளனர்.

தலைமன்னார் தெற்கு கடற்பகுதியில் வைத்து இலங்கை கடற்படையினரின் உதவியுடன் கடற்பாதுகாப்பு திணைக்களத்தினர் இவர்களைக் கைது செய்துள்ளனர் எனத் தெரியவந்துள்ளது.

தூத்துக்குடி மற்றும் இராமேஸ்வரத்தைச் சேர்ந்த இந்த மீனவர்களின் இரண்டு படகுகளும் இதன்போது கைப்பற்றப்பட்டுள்ளன.

தமிழகத்தைச் சேர்ந்த ஏழு மீனவர்கள் எல்லைதாண்டினார் எனக்குற்றஞ்சாட்டப்பட்டு நேற்று முன்தினம் கைதுசெய் யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (உ)

## கொழும்பில் புதிய ரகத்தில் போதைவஸ்து!

கொழும்பு, டிசெ.22

இலங்கையில் இதுவரை கைப்பற்றப்பட்டிராத புதிய வகையான விசத் தன்மை கொண்ட போதைப் பொருளுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கட்டுநாயக்கா பிரதேசத்திலுள்ள வீடொன்றில் வைத்து ஆயிரத்து நானூற்று அறுபது கிராம் 'கெனபிஸ் இண்டிகா'

பக்கம் 20

## வெள்ளைச் சீனிக்கான வரி அதிகரிப்பு

கொழும்பு, டிசெ.22

இறக்குமதி செய்யப்படும் வெள்ளைச் சீனிக்கான விசேட பண்ட வரி 6 ரூபாவால் அதிகரிக்கப்படவுள்ளது.

இதன்படி 7 ரூபாவாக இருந்த வெள்ளைச் சீனிக்கான விசேட பண்ட வரி 13 ரூபாவாக அதிகரிக்கப்படும் என நிதியமைச்சு அறிவித்துள்ளது.

எனினும், இந்த வரி அதிகரிப்பால் வெள்ளைச் சீனியின் சில்லறை விலை அதிகரிக்கப்படமாட்டாது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)



## ஓட்டோ கவிழ்ந்து அறுவர் படுகாயம்

மட்டக்களப்பு நகருக்குள் உள்ள வெள்ளைப்பாலத்துக்குள் ஓட்டோ ஒன்று குடை சாய்ந்ததில் அதில் பயணித்த சாரதி, கர்ப்பிணிப்பெண் மற்றும் இரு பெண்கள் உட்பட அறுவர் காயமடைந்தனர். அவர்களில் இருவரின் நிலைமை கவலைக்கிடமாக இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

ஏறாவூரில் இருந்து நேற்று பிற்பகல் மட்டக்களப்பு ஆஸ்பத்திரிக்கு அவர்கள் பயணித்த போதே இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

## கலைஞர் நலம்பெற மைத்திரி வாழ்த்து

கலைஞர் விரைந்து பூரண சுகமடைந்து வீடு திரும்ப வேண்டும் என்று இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கருணாநிதிக்கு சுகநல வாழ்த்துச் செய்தி ஒன்றை அனுப்பியிருக்கின்றார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் இச்செய்தியை தாம் காவேரி ஆஸ்பத்திரிக்கு நேரில் சென்று கலைஞரிடம் தெரிவித்தார் என்று ஊவா மாகாண அமைச்சர் செந்தில் தொண்டமான் ஆஸ்பத்திரி வாசலில் வைத்து நேற்றுக் கூறினார். (உ)

அளப்பு அருணாசலம்



அப்பு... உது மகா மட்ட சபைதான் பாருங்கோ...!

## "அடிப்பன்; பிறகு வெட்டுவன்!" "ஏறியுங்கோ; உடையுங்கோ!!"

### நேற்று சபையில் நையாண்டி உரையாடல்

கொழும்பு, டிசெ.22

வடக்கு மாகாண சபையின் நேற்றைய அமர்வு காலைத் தேனீருக்குப் பின்னர் மீண்டும் சபை கூடிய போதே 'அடிப்பன்; வெட்டுவன்' என்ற நையாண்டியுடன்தான் ஆரம்பமானது.

அழைப்பு மணியுடன் அவைத் தலைவர் ஆசனத்தில் உட்கார்ந்தார் சி.வீ.கே.சிவஞானம்.

"இனி என்னுடைய சொல்வழி கேளாமல் நேரக் கட்டுப்பாட்டை மீறி உரை நிகழ்த்துவோர் தொடர்பில் அடிப்பன், வெட்டுவன்" என்று மணியை அடித்தபடி சிரித்தபடி கூறினார் அவர். "அதாவது மணியை அடிப்பன். அதற்கும் உரையை நிறுத்தாவிட்டால் ஒலிவாங்கியை வெட்டுவன்" என்றார் அவர்.

ஒருநீண்ட உரையாற்றுவதற்கு புள்ளி விவரங்கள், ஆதாரங்கள், ஆவணங்களுடன் ஆவலாகக் காத்திருந்த முல்லைத்தீவு உறுப்பினர் ரவிகரன், சிவஞானத்தின்

பக்கம் 20

## சபைக்குத் தெரிவாகாவிட்டால் நாய்கூட தேடமாட்டாதாம்!

### உறுப்பினர்கள் குறித்து இப்படி விமர்சனம்

யாழ்ப்பாணம், டிசெ.22

"ஏதோ எங்கள் சனம் உங்களை இந்த மாகாண சபைக் குத் தெரிவு செய்து விட்டபடியால் இப்படி இருக்கின்றீர்கள். அதற்காக எந்த நேரமும் 'பிஸி', 'பிஸி' என்று திரியாதீர்கள். இந்தச்

பக்கம் 20

# மயிலிட்டித் துறைமுகத்தை விடுவிக்க அரசு இணக்கம் என்கிறார் மாவை

கொழும்பு, டிசெ.22

மயிலிட்டித் துறைமுகத்தையும் அதனை அண்டிய பிரதேசத்தையும் விடுவிப்பதற்கு ஜனாதிபதி மற்றும் பிரதமர் இணங்கியுள்ளனர் என நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா தெரிவித்துள்ளார்.

வலி.வடக்கு பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று முன்தினம் தெல்லிப்பழை பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது.

வலி.வடக்கில் விடுவிக்கப்பட்ட பகுதிகளில் மீள்குடியேற்றம் நடைபெறும் பொழுது அந்தந்த கிராம சேவகர் பிரிவுக்குட்பட்ட

பக்கம் 20

போரில் இரு கண்களின் பார்வையை இழந்த

# 75 முன்னாள் போராளிகளுக்கு இன்று வெள்ளைப் பிரம்புகள்

யாழ்ப்பாணம். டிச. 22
வன்னியில் இடம்பெற்ற போர் அனர்த்தங்களின் போது இரு கண்களினதும் பார்வையை இழந்த முன்னாள் போராளிகள் 75 பேருக்கு வெள்ளைப் பிரம்புகள் வழங்கும் நிகழ்வு இன்று வியாழக் கிழமை முற்பகல் 10.30 மணிக்கு, யாழ். மானிப்பாய் வீதியிலுள்ள யாழ். வணிகர் கழகப் பணிமனையில் இடம்பெறும்.

வன்னி விழிப்புலனற்றோர் சங்கம் விடுத்த வேண்டுகோளுக்கு இணங்க வணிகர் கழகம் இந்த வெள்ளைப் பிரம்பு வழங்கும் நிகழ்வை ஏற்பாடு செய்துள்ளது. (இ

# நுளம்புப் பெருக்கத்தைத் தவிர்க்க அரசு துரித நடவடிக்கை

கொழும்பு, டிச.22
தனியார் வீடுகள் மற்றும் அரச நிறுவனங்களில் டெங்கு நுளம்பு பெருக இடமளிப்போருக்கு முறையே 5,000 ரூபாவும், 25,000 ரூபாவும் தண்டப் பணமாக விதிக்கப்படும்.

சுகாதார அமைச்சர், டாக்டர் ராஜித சேனரத்ன மேற்படி தகவலை, கடந்த செவ்வாய்க் கிழமை நடைபெற்ற மாநாட்டில் வைத்துத் தெரிவித்துள்ளார்.

நுளம்புப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தும் பணி வீடுகளிலும், பணிமனைகளிலும், வெளியான இடங்களிலும் தவறாது மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் அமைச்சர் அறிவுறுத்தி உள்ளார்.

சுகாதாரத் திணைக்கள அதிகாரிகள், வீடுகளுக்கும் வெற்றுக் காணிகளுக்குள்ளும் உட்சென்று, நுளம்புப் பெருக்கத்தைக் கண்டறிய வசதி செய்ய வேண்டும் என்றும் அவர் உத்தரவிட்டுள்ளார்.

அதன் பொருட்டு, பாதிக்கப்பட்ட பகுதிகளுக்குள் சுகாதாரப் பகுதி அலுவலர்களும் அதிகாரிகளும் உட்செல்லவும் , பாதிப்பைக் கண்டறியவும் அனுமதிக்க வேண்டும் என்றும் அமைச்சர் அறிவுறுத்தி இருக் கின்றார்.

கொழும்பு, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, அம்பாறை, களுத்துறை, காலி, கம்பஹா, புத்தளம், குருநாகல் மாவட்டங்களில் டெங்கு நோய் தீவிரமாகப் பரவும் வாய்ப்பு அதிக அளவில் உள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

நாடளாவிய மட்டத்தில் இது வரை டெங்கு நோயினால் எழுபத்தேழு பேர் இறந்தனர் எனவும், மொத்தம் 47 ஆயிரம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் எனவும் அமைச்சர் உத்தியோகபூர்வமாகப் பிரகடனப்படுத்தி உள்ளார்.

மாகாண மட்டத்தில் இயங்கும் முப்பது சுகாதரப் பணிமனைகளில் டெங்கு நுளம்பு ஒழிப்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளும், பாதிப்புறும் மக்களும் ஒத்துழைத்து ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

# தும்பளை கத்திக்குத்து சம்பவம் சகோதரர்கள் இருவர் கைது!

பருத்தித்துறை தும்பளையில் திங்கள் இரவு இடம்பெற்ற கத்திக்குத்துச் சம்பவத்துடன் தொடர்புடைய இரண்டு சகோதரர்கள் பருத்தித்துறைப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

தும்பளைப் பகுதியில் திங்கள் இரவு சகோதரர்களுக்கு இடையே ஏற்பட்ட தகராறு கத்திக் குத்தில் முடிந்ததில் சிவகுமார் சுவர்ணன் என்ற 20 வயதுடைய இளைஞர் பலியானார்.

இக் கொலைச் சம்பவம் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்ட பருத்தித்துறைப் பொலிஸார் உயிரிழந்த இளைஞரின் சகோதரர்கள் இருவரைக் கைதுசெய்துள்ளனர் எனத் தெரிவித்தனர். (உ- 40)



வடமராட்சி கிழக்கு, உடுத்துறையில் சுனாமி நினைவாலயத் துக்கான முன் வளைவு நேற்று திறந்து வைக்கப்பட்டது. இதற்கான நிதியை நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் ஒதுக்கியிருந்தார். வடமராட்சிகிழக்குப்பிரதேசசெயலர் இ.கனகேஸ்வரன்தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் சிறிதரன் எம்.பி. மற்றும் பலர் கலந்து கொண்டனர். (இ-35)

# சாவகச்சேரி கோர விபத்து: இ.போ.ச சாரதிக்கு பிணை

சாவகச்சேரி சங்கத்தானைப் பகுதியில் கடந்த சனிக்கிழமை ஹயஸ் வானும் இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ்ஸும் நேருக்கு நேர்மோதிவிபத்துக்குள்ளாகின. இந்தவிபத்துச்சம்பவத்தால்தென்னிலங்கை சுற்றுலாப் பயணிகள் 11 பேர் உயிரிழந்திருந்தனர்.

இச் சம்பவத்தில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த போக்குவரத்துசபை பேருந்தின் சாரதியை 50ஆயிரம் ரூபா பெறுமதியான சரீரப் பிணையில் செல்வதற்கு சாவகச்சேரி நீதிவான் செ. கணபதிப்பிள்ளை நேற்று முன்தினம் அனுமதி வழங்கினார்.

இந்த விபத்துத் தொடர்பான வழக்கினை ஜனவரி 19ஆம் திகதிக்கு நீதிவான் ஒத்திவைத்தார். மேலும் விபத்துத் தொடர்பில் கண்கண்ட சாட்சிகள் மூவரின் சாட்சியங்கள் பதில் நீதிவான் முன்னிலையில் பதிவு செய்யப்பட்டன.

# லொத்தர் சீட்டின் விலை ரூ.30 ஆக உயரும்

கொழும்பு, டிச.22
தேசிய லொத்தர் சபையினதும் அபிவிருத்தி லொத்தர் சபையினதும் லொத்தர் சீட்டுக்களின் விலை இருபது ரூபாவிலிருந்து முப்பது ரூபாவாக உயரும்.

லொத்தர் சபைகளுக்கு ஏற்படும் நஷ்டத்தை சமாளிக்கவே இந்த ஏற்பாடு என்று கூறப்பட்டது. லொத்தர் பரிசுத் தொகைகளையும், வெற்றிக்கான வாய்ப்பு எண்ணிக் கைகளையும் அதிகரிக்கவும் தீர்மானிக்கப்பட்டிருப்பதாகக் கூறப்பட்டது. (உ-2)

# இந்தியக் குழு ஜனவரி 2இல் இலங்கை வரும்

கொழும்பு, டிச.22
இலங்கை-இந்திய மீனவர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்காக இந்திய மத்திய அமைச்சர்கள் குழு ஒன்று ஜனவரி 2ஆம் திகதி இலங்கைக்கு வரவுள்ளனர்.

இந்தியாவின் மத்திய இணை அமைச்சர் பொன். இராதாகிருஷ்ணன் நாமக்கல்லுக்குச் சென்றிருந்த வேளை ஊடகவியலாளர்களிடம் இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்-

ஆழ்கடலில் மீன்பிடிப்பதற்கு இரட்டை மடி வலை தடை செய்யப்பட்டுள்ளது. இந்தத்தடையை மீனவர்கள் ஏற்றுக் கொள்வார்கள். ஆழ்கடலில் மீன் பிடிப்பதற்கான பயிற்சி, வலைகையாளும் பயிற்சி போன்றன மீனவர்களுக்கு வழங்கப்பட உள்ளன. இம்மாத இறுதியில் இதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

மீனவர்களின் பிரச்சினைகளைத் தீர்க்க இலங்கை அரசுடன் பேச்சு நடத்த மத்திய அமைச்சர்கள் ஜனவரி 2ஆம் திகதி இலங்கை செல்லவுள்ளனர்.- என்றார்.

# குடத்தனை வயோதிப மாது கொலை; கொலையாளி கைது செய்யப்பட்டார்!

குடத்தனைப்பகுதியில்வயோதிப் பெண் ஒருவரை வெட்டிக் கொலைசெய்து அவர் அணிந்திருந்த தங்கநகைகளைக் கொள்ளையிட்டார் எனச் சந்தேகிக்கப்படுபவர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

பொற்பதி குடத்தனைப் பகுதியில் திங்கள் இரவு தங்கவேல் பரமேஸ்வரி என்ற 62 வயதுப் பெண்ணை வெட்டிக் கொலை செய்துவிட்டு அவர் அணிந்திருந்த தங்கநகைகள் கொள்ளையிடப்பட்டன.

இச்சம்பவம் தொடர்பில் பருத்தித்துறை பொலிஸ் பொறுப்பதிகாரி சமன் ஜெயலத்தின் வழி நடத்தலில் குற்றத் தடுப்புப் பொறுப்பதிகாரி ஆனா் மற்றும் ரமணன் ஆகியோர் புலன் விசாரணைகளை மேற்கொண்டனர்.

இதன்போது கொலை நடந்த வீட்டுக்கு அருகிலிருந்து கொலைக்குப் பயன்படுத்தப்பட்ட கத்தி ஒன்றைப் பொலிஸார் மீட்டனர். அதன் அடிப்படையில் மோப்ப நாயின் உதவியுடன் அதே பகுதியைச் சேர்ந்த 35 வயதுடைய நபர் ஒருவரைப் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

நேற்று முன்தினம் காலை சம்பவ இடத்துக்குச் சென்ற பருத்தித்துறை பதில் நீதிபதி பா.சுப்பிரமணியம் மரண விசாரணைகளை மேற்கொண்டார். யாழ். போதனா வைத்தியசாலையின் சட்ட வைத்திய அதிகாரியினால் மேற்கொள்ளப்பட்ட பிரேத பரிசோதனையில், ஆழமான வெட்டுக் காயத்தால் ஏற்பட்ட குருதிப் பெருக்கே மரணத்துக்குக் காரணம் எனத் தெரிவிக்கப்பட்டது. (உ-40)

# தமிழ்த் தேசிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சுக்களின் நிதி ஒதுக்கீடு தொடர்பாக இரண்டாம் நாளான நேற்று நடைபெற்ற குழுநிலை விவாதத்தின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்திருந்தார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:-

முதலமைச்சர் 2014, 2015, 2016 ஆகிய ஆண்டு காலப் பகுதிகளின் முன்னதாக 14 துறைகளிலும் அதன் பின்னர் 17 துறைகளிலும் அமைச்சுக்களை வழிநடத்துவதற்குள்ளேகள் முன்னால் எழுந்து நின்றார். நாங்களும் அவர்மீதுள்ள அதீத நம்பிக்கையுடன் அந்தப் பயணத்தை ஆரம்பித்தோம்.

முதலமைச்சர் தமது வரவு-செலவுத்திட்டத்தை சமர்ப்பித்து பேசுகின்றபோதும் அதன் பின்னர் அவர் அமைச்சுக்களில் நிதி ஒதுக்கீடு தொடர்பாகப் பேசுகின்றபோதும் அவருடைய உரையைக் கூர்ந்து கவனித்தவன் என்ற வகையில் எவரோ தயாரித்த உரையை முதலமைச்சர் நிகழ்த்துகின்றார் என்று எனக்குப் புலப்பட்டது.

யாரோ சமைத்த உணவை அவர் இங்கு பரிமாறுகிறார் என்ற விடயம் எமக்குப் புலப்பட்டது. அவரது உரையில் ஒரு தொடர்பு இருக்கவில்லை. திணைக்களங்களுக்கும் துறை சார்ந்த விடயத்துக்கும் அவருக்கும் அவர் முன்வைக்கின்ற விடயத்துக்கும் ஓர் இடைத் தொடர்பு இருக்கவில்லை. இவ் விடயம் தொடர்பான அவரது உரை நடுவே நிறுத்தி ஒரு கேள்வி எழுப்பப்பட்டால் அது சார்ந்த விளக்கத்தை நான் பின்னர் தருகிறேன் என்று அவர் மிக இலகுவாகச் சொல்லக் கூடியதாக உள்ளது.

எனவே, முதலமைச்சர் தமது துறைகளோடு நெருங்கிச் செயற்படவேண்டும். அத்தோடு இறுக்கமாகச் செயற்பட்டால் தான் அவரால் அதனை இயக்க முடியும். ஒரு வாகனத்தை ஓட்டுகின்றபோது அல்லது ஏதேனும் ஒரு நடவடிக்கையில் செயற்படுகின்றபொழுது அதிலே காட்டுகின்ற செயற்பாடு தான் ஆளுமையைத்தருகிறது. இந்த நிலைமையை முதலமைச்சரிடம் கண்டு கொள்ள முடியவில்லை.

இது போன்று முதலமைச்சரின் அமைச்சுக்களில் செயற்படுகின்ற அதிகாரிகள் இடத்திலும் இதே மனக்குறைதான் எமக்குள்ளது. நாங்கள் அவர்களின் செயற்பாடுகளைப் பார்த்துத் திருப்திப்படுகிற நிலையில் ஒரு போதும் இல்லை. அது தொழிற்றுறைத் திணைக்களங்களாக இருக்கட்டும் முதலமைச்சரின் உள்ளூராட்சித் திணைக்களங்களாக இருக்கட்டும். அங்குள்ள அதிகாரிகள் ஒட்டியும் ஒட்டாமலும் ஒடும் புளியம் பழமும் போல உள்ளார்கள். எவ்வளவு தூரம் தங்களைத் தற்காத்துக் கொண்டு காலத்தைக் கடத்தும் எண்ணத்தோடுதான் அவர்கள் இருப்பதாக நான் நினைக்கின்றேன்.

எனவேதான், அமைச்சுக்களில் உள்ள ஒவ்வொரு அம்சங்களிலும் குறைபாடுகள் இருக்கின்றமையை நாங்கள் காணுகின்றோம். 2017ஆம் ஆண்டுக்கான மத்திய அரசின் வரவு-செலவுத்திட்டத்திலே அவர்கள் ஒருசில விடயங்களைப் பிரதான விடயங்களாக எடுத்திருக்கிறார்கள். அந்த விடயங்களின் அடிப்படையில் இந்த நாட்டினுடைய பொருளாதார முன்னேற்றம் இருக்க வேண்டுமென்று அவர்கள் கருதுகிறார்கள். அந்த விடயங்கள் எங்களுடைய வரவு-செலவுத்திட்டத்திலே பிரதிபலிக்கவில்லை.

வரவு - செலவுத்திட்டத்திலே முன்வைக்கப்பட்டுள்ள விடயங்களைப் பார்க்கின்றபோது இதனை ஒரு முன்னேற்றகரமான வரவு-செலவுத்திட்டமாகக் கருதமுடியாது. முதலமைச்சரை தவிர அவரைச் சூழ இருக்கின்றவர்களில் உத்தியோகத்தர்களைத் தவிர ஏனையவர்கள் முதலமைச்சரை தவறான வழியிலே வழி நடத்துகிறார்கள் என்றுதான் நான் நம்புகிறேன். அதுதான் சிலவேளைகளில் உண்மையாகவும் இருக்க முடியும்.

2013ஆம்ஆண்டுமுதலமைச்சர்வடக்குக்குமுதலமைச்சராகப் பொறுப்பேற்ற பின்பு மக்களை முன்னேற்றுவார் என்றும் மக்கள் கூட்டத்தை ஒரு பலமாக மாற்றுவார் என்றும் நாங்கள் நினைத்திருந்தோம். இங்கு பாரம்பரிய அரசியலோடு சம்பந்தப்பட்ட கூட்டம் உள்ளது அதே போல் தமிழ்த்தேசியத்தோடும் தொடர்புடைய சக்தியொன்றும் உள்ளது.எல்லாச் சந்தர்ப்பங்களிலும் தமிழ்த் தேசியத்தைப் பேசுகின்ற அரசியல்தான் எங்களிடத்தே நிலைத்துள்ளது.

பெரும்பான்மைக் கட்சிகளோடு இணைந்து செயற்படுகின்றவர்களை தமிழ்த் தேசியத்தின் தலைவர்களாக மக்கள் ஒரு போதும்ஏற்றுக்கொள்வதில்லை. ஆனால், முதலமைச்சர் தமிழ்த் தேசிய அரசியலை இரண்டு கூறுகளாகப் பிரித்திருக்கிறார். தீர்வுத் திட்டத்தை நோக்கிச் செல்லுகின்ற சமூகத்துக்கு முன்னால் இத்தகைய பிரிவுகள் அவசியமற்றவை. அவர் அதனை மீறுபவர் அல்லர். அவரைச் சார்ந்து இருப்பவர்கள் அவரைப் பிழையாக வழிநடத்தியிருப்பார்கள். முதலமைச்சர் தன்னுடையபாதையைமீள்பரிசீலனை செய்யவேண்டும்.- என்றார்.

இவ்வாறு வடமாகாணசபை உறுப்பினர் அயூப் அஸ்மின் கருத்துத் தெரிவித்துக் கொண்டிருக்கையில் அவைத்தலைவர் அவையிலே குறுக்கிட்டு நீங்கள் திசைமாறிச்செல்கிறீர்கள் எனத் தெரிவித்ததைத் தொடர்ந்து சபையின் ஆளும்கட்சி உறுப்பினர்களான க.சர்வேஸ்வரன், கே.சயந்தன், எம்.கே.சிவாஜிலிங்கம் ஆகியோர் முதலமைச்சரின் தனிப்பட்ட விடயத்தைப் பேசுகிறார், இவ்விடயம் வேறு இடத்தில்பேசவேண்டும்என்றனர்.

இதனை அடுத்து அவைத் தலைவர் சி.வீ.கே.சிவஞானம் மேற்படி நிதி ஒதுக்கீட்டு விடயத்தை மட்டும் பேசுங்கள் என அஸ்மினுக்குத் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (உ-10)

# முன்நிர்மாணிக்கப்பட்ட வீடுகளைப் பெற விரும்பும் வடக்கு, கிழக்கு மாகாண மக்களுக்கான விண்ணப்பம் கோரல்



## முன்நிர்மாணிக்கப்பட்ட வீடுகள்:-

இன்று வடக்கு, கிழக்கு மாகாணங்களில் போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வீடுகள் தேவைப்படுகிறது. அதன் பிரகாரம் முதற்கட்டமாக உடனடியாக பத்தாயிரம் (10,000) **முன்நிர்மாணிக்கப்பட்ட வீடுகளை** மிகவிரைவில் வழங்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது. சர்வதேச நியமங்களுக்கு அமைவான, சூழல் மற்றும் சமூக அங்கீகாரத்துடன் கூடிய வசதியான இவ்வீடுகள், உலகின் பெயர்பெற்ற முன்னணி நிறுவனத்தின் ஊடாக நிர்மாணிக்கப்படவுள்ளது. இந்நிறுவனம் இவ்வீடுகளுக்கு 30 வருடகால உத்தரவாதத்தை அரசாங்கத்துக்கு வழங்கியுள்ளதுடன், குறைந்தபட்சம் 60-70 வருடகால பயன்பாட்டுக்குரியதென்றும் இந் நிறுவனத்தினர் சுட்டிக்காட்டுகின்றனர்.

## அமைப்பு:-

வசிப்பிட அறை, சமையலறை, தனியான கழிவறை மற்றும் இரு அறைகளுடன் கூடிய 550 சதுர அடி பரப்பளவு கொண்ட வீடுகள்.

## வசதிகள்:-

- சூரியகல மின்சார வசதி
- குழாய் நீர்க்கிணறு
- சமையல் எரிவாயு அடுப்பு – சமையலறை அலுமாரி (Pantry Cupboard)
- மின்விசிறி – 03
- இலங்கை மின்சார சபையினால் வழங்கப்படும் மின்சாரத்தைப் பெறுவதற்கான கம்பிகளை (wiring) வீட்டில் பொருத்துதல்.
- சூழல் வெப்பத்தைவிட 3-5 பாகை செல்சியஸ் குறைவான சௌகரியமான வசிப்பிட சூழல் கொண்ட வீடுகள்.

## அழைப்பு:-

ஒஸ்கா ஒழுங்கை, செல்வபுரம், பலாலி வீதி, உரும்பிராய் தெற்கு கோப்பாயில் நிர்மாணிக்கப்பட்டிருக்கும் இவ்வீடமைப்புத் திட்டத்தின் மாதிரி வீட்டினை பார்வையிட அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நிர்மாணிக்கப்படும் முன்நிர்மாணிக்கப்பட்ட வீடுகளை போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு கொடுப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இவ்வீடுகளைப் பெற விரும்புவோர் இந்த விளம்பரத்தில் இருக்கும் விண்ணப்பப்படிவத்தையோ அல்லது உங்கள் பிரதேச செயலகத்தில் கிடைக்கப்பெறும் விண்ணப்பப்படிவத்தையோ பூர்த்திசெய்து 2017ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 15ஆம் திகதிக்கு முன் குறிப்பிட்ட கிராம அலுவலரின் அத்தாட்சியுடனும், பிரதேச செயலாளரின் ஒப்பத்துடனும் உங்கள் பிரதேச செயலகத்தில் நேரடியாகவோ, தபால் மூலமாகவோ சமர்ப்பித்து உறுதிச்சீட்டைப் பெற்றுக்கொள்ளவும். அந்த விண்ணப்பப்படிவத்தின் ஒரு பிரதியை கீழ்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.





## முன்நிர்மாணிக்கப்பட்ட வீடமைப்புத் திட்டத்தின்கீழ் வீடொன்றைப் பெற்றுக்கொள்வதற்கான விண்ணப்பப் படிவம்

1. குடும்பத் தலைவரின் முழுப் பெயர் : ..............................
2. தேசிய அடையாள அட்டை இலக்கம் : ..............................
3. தற்போதைய முகவரி : ..............................
4. கிராம அலுவலர் பிரிவு : ..............................
5. பிரதேச செயலாளர் பிரிவு : ..............................
6. நிரந்தர முகவரியும் வதிவிட முகவரியும் : ..............................
7. குடும்ப அங்கத்தவர்கள் எண்ணிக்கை : ..............................
8. காணி தொடர்பான விபரம்
   - 8.1. காணி அமைந்துள்ள முகவரி : ..............................
   - 8.2. கிராம அலுவலர் பிரிவு : ..............................
   - 8.3. பிரதேச செயலாளர் பிரிவு : ..............................
   - 8.4. உடனடியாக வீடமைக்கும் நிலையில் அக்காணி உள்ளதா? : ஆம் / இல்லை
   - 8.5. நீங்கள் வசிக்கும் காணியில் முன்நிர்மாணிக்கப்பட்ட வீட்டைக்கட்டுவதற்கு அனுமதியை அளிக்கின்றீர்களா? : ஆம் / இல்லை

என்னால் மேலே சமர்ப்பிக்கப்பட்ட அனைத்து விபரங்களும் சரியானவையென்றும் உண்மையானவையென்றும் இத்தால் உறுதிப்படுத்துவதோடு மேற்படி வீட்டுத்திட்டத்தின் கீழ் முன்நிர்மாணிக்கப்பட்ட வீடொன்றை பெற்றுக்கொள்வதற்கு எனது பூரண சம்மதத்தினையும் என்னால் மேலே குறிப்பிடப்பட்ட காணியில் முன்நிர்மாணிக்கப்பட்ட வீட்டை அமைப்பதற்கு எனது பூரண சம்மதத்தினையும் இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

.................... ....................

திகதி விண்ணப்பதாரியின் ஒப்பம்

கிராம அலுவலரின் சான்றுப்படுத்தல்

விண்ணப்பதாரியினால் மேலே சமர்ப்பிக்கப்பட்ட விபரங்கள் உண்மையானவையென்றும் சரியானவையென்றும் அத்தாட்சிப்படுத்துவதுடன் இக்குடும்பம் உள்ளக இடம்பெயர்ந்த ஒரு குடும்பம் என்றும் இக்குடும்பத்திற்கு முன்நிர்மாணிக்கப்பட்ட வீடொன்றை வழங்குவது உகந்ததென்றும் சிபார்சு செய்கின்றேன்.

.................... ....................

திகதி கிராம அலுவலரின் ஒப்பமும் பதவி இலச்சினையும்

பிரதேச செயலாளரின் சான்றுப்படுத்தல்

சிபார்சு செய்கின்றேன்/சிபார்சு செய்யவில்லை.

.................... ....................

திகதி பிரதேச செயலாளரின் ஒப்பமும் பதவி இலச்சினையும்

(சி-132)

செயலாளர்
சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்றம்
மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சு
இல.356 B, காலி வீதி
கொழும்பு-03.

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, editor@kalaikkathir.lk
தொலைநகல் (fax): 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600


## முதல்வர் ஊதும் அபாயச் சங்கு

தமிழ் மக்கள் பேரவையின் ஓராண்டு முடிவை ஒட்டிய நிகழ்ச்சியில், அதன் இணைத் தலைவர்களுள் ஒருவரான வடக்கு மாகாண முதலமைச்சர் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் சில முக்கிய கருத்துக்களை முன்வைத்திருக்கின்றார். எச்சரிக்கையும் தந்திருக்கின்றார்.

*"சாதகமான தீர்வொன்று எமக்கு கிடைக்கும் என்று எதிர்பார்த்திருப்பது புத்திசாலித்தனமாக எனக்குப் படவில்லை."* - என்று குறிப்பிடுவதன் மூலம் ஏதோ ஒரு முக்கிய விடயத்தைக் குறிப்பாக உணர்த்துவதற்கு முதல்வர் விக்னேஸ்வரன் முயல்கின்றார் என்றே தோன்றுகின்றது.

*"ஏதோ தந்ததை எடுப்போம் என்ற மனப்பாங்கு எமக்கு பாரிய பின்னடைவுகளை ஏற்படுத்தும்"* என்று அபாயச் சங்கு ஊதும் முதல்வர், அதனைத் தொடர்ந்து நேர உள்ள அவலங்களையும் பட்டியலிடுகின்றார்.

*"எமது நிலங்கள் பறிபோகும். எமது மொழி புறக்கணிக்கப்படும். தெற்கிலிருந்து வந்து வடக்கு, கிழக்கை ஆக்கிரமிக்கும் செயற்பாடு விரைவாக நடைபெறும்."* - என்று நேரப்போகும் ஆபத்துக்களுக்குக் கட்டியம் கூற முற்படுகிறார் அவர்.

இவை ஒன்றும் இனிமேல்தான் நடக்கப்போகும் அனர்த்தங்கள், அவலங்கள் அல்ல. அவை ஏற்கனவே நடந்து கொண்டு தான் இருக்கின்றன.

இனிமேல் அவை மேலும் தீவிரமடையலாம். அதைத்தான் முதல்வரின் எச்சரிக்கை வெளிப்படுத்துகின்றது.

இதுதான் தீர்வு என்று முடிவு செய்யவேண்டிய காலம் நெருங்கி விட்டமைபோலவே எமது பிரதிநிதிகளும், தென்னிலங்கை அரசியல்வாதிகளும் கருத்துக்களை இப்போது பிரதிபலித்து வருகின்றனர்.

இனப்பிரச்சினைக்கான தீர்வையும் உள்ளடக்கிய புதிய அரசமைப்பு எத்தகைய வடிவத்தில் அமையப் போகின்றது என்பதற்குக் கட்டியம் கூறும் பூர்வாங்க நகல் ஜனவரி மாதத்தில் - அடுத்த மாதத்தில் - வெளியாகிவிடும் என எதிர்பார்க்கும் அளவுக்கு நிலைமை சென்றிருக்கின்றது.

ஆனால், அத்தகைய கால நெருக்கடிக்கு மத்தியிலும் *"எமக்கேற்ற சாதகமான அரசியல் தீர்வொன்று எமக்கு கிடைக்கும் என்று எதிர்பார்ப்பது புத்திசாலித்தனமாக எனக்குப்படவில்லை."* - என்று அதிருப்தியின் உச்சிக்குச் சென்று முதல்வர் வெளிப்படையாக எச்சரிக்கின்றார்.

அதனை நோக்கும்போது இந்தக் கருத்தை அவர் முன்வைப்பதன் பின்புலத்தில் பல அரசியல் நுட்பங்கள், உண்மைகள், யதார்த்தங்கள் பொதிந்து கிடப்பதாகவே தோன்றுகின்றது.

இதோ அரசியல் தீர்வு என்று தென்னிலங்கை ஆட்சித் தலைமையும் அதற்குச் சாமரம் வீசும் நமது அரசியல் தலைமைகளும் கூறும் அளவுக்கு வந்த சூழ்நிலையிலும், அந்தத் தீர்வு குறித்து வடக்கு மாகாண முதல்வர் இவ்வளவு தூரம் அவநம்பிக்கையுடன் கருத்து வெளியிடுகின்றமையைச் சாதாரண விடயமாக எடுத்துக் கொள்ள முடியாது.

அது மாத்திரமல்ல, அடுத்த மூன்று மாதங்களுக்குள் - மார்ச் 31 இற்கு முன்னர் - இவ்விவகாரத்தை ஒட்டி சில நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என்றும் அவர் வலியுறுத்துகின்றார்.

அரசுக்கு சர்வதேச ரீதியில் அழுத்தத்தை ஏற்படுத்தும் சட்ட ரீதியான நெருக்கடிகளைக் கொடுப்பதில் அடுத்த மூன்று மாதங்களும் பேரவை முழுமூச்சில் - மும்முரமாக - ஈடுபட வேண்டும் என அவர் வலியுறுத்தி உள்ளமையும் நோக்கத்தக்கது.

அவருடைய அவநம்பிக்கை, அதைத் தொடர்ந்த எச்சரிக்கை, அதன் பின் வலியுறுத்தும் நடவடிக்கைத் திட்டம் ஆகிய மூன்று விடயங்களையும் தொகுத்து நோக்கும்போது, இப்போது கொழும்பில் பேசப்படும் தீர்வுத்திட்ட எத்தனம் தொடர்பில் சில ஊகங்களைப் பெறமுடிகின்றது.

ஒரு புறம் - நாங்கள் அரசுடன் பேசுகிறோம், அதில் முன்னேற்றம் உள்ளது, தீர்க்கமான கட்டத்தை எட்டியுள்ளோம், விடயங்களைக் குழப்பாதீர்கள், சேர்ந்து பேசி இணக்கம் காண்பதற்கான இடை வெளியைத் தாருங்கள் - என்ற பாணியில் கூட்டமைப்புத் தலைமையின் கோரிக்கை செல்கிறது.

மறுபுறம் - சாதகமான அரசியல் தீர்வு குறித்து அவநம்பிக்கை, வெறுமனே பார்த்திருந்தால் வரும் காலத்தில் பெரும் பின்னடைவு நேரும் என்ற எச்சரிக்கை, ஆகவே சர்வதேச ரீதியில் நெருக்குதல் கொடுப்பது உட்பட பல நடவடிக்கைகளைக் குறுகிய காலத்துக்குள் எடுக்க வலியுறுத்தல் - போன்றவை குறித்தெல்லாம் தமிழ் மக்கள் பேரவையும் அதன் தலைவர்களும் பிரஸ்தாபிக்கின்றார்கள்.

எதை உள்வாங்குவது, எதனை நம்புவது, எதை மனதில் வைத்துச் செயற்படுவது என்று தெரியாமல் குழம்பிப்போய் நிற்கின்றார்கள் தமிழ் மக்கள்.

கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் தீர்வுக்குக் குறிப்பிட்ட காலம் அடுத்த பத்து நாள்களுள் காலாவதியாகின்றது. எது, எப்படியென்றாலும் தீர்வுக்கான தீர்மானங்களை எடுப்பதற்குரிய தீர்க்கமான கால கட்டம் நெருங்கிவிட்டது.

காலம் நெருங்க, நெருங்க எதிர்பார்த்தபடி குழப்பங்களும் தீவிரமடையும். அது தவிர்க்க முடியாததே.

# தீர்வு உடன் வழங்காவிடில் தொழிற் சங்கப் போராட்டம்

## அரச ஆசிரியர், அதிபர்கள் சம்மேளனம் அரசுக்கு எச்சரிக்கை

கொழும்பு, டிசெ.22

நீண்டகாலமாக நிலவி வரும் தங்களது பிரச்சினைகளுக்கு உடனடியாகத் தீர்வுகள் வழங்க வேண்டும். இல்லாவிடில் நாடு தழுவிய ரீதியில் பெரிய தொழிற் சங்கப் போராட்டத்தில் ஈடுபடுவோம் என்று அரச ஆசிரியர் அதிபர்கள் சம்மேளனம் அரசுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளது.

ஆறு வருடங்களுக்கு முன்பு அதிபர் பதவிகளில் நியமிக்கப்பட்டவர்களுக்கும் 2009 ஆம் ஆண்டு நீதிமன்ற உத்தரவின் பேரில் நியமனம் பெற்ற ஏழாயிரம் அதிபர்களுக்கும் இதுவரை எந்த வித நியமனக் கடிதங்களோ, பதவி உயர்வுகளோ வழங்கப்படவில்லை.

இது தொடர்பில் பலமுறை அரசுக்கு எடுத்துக் கூறியும் இதுவரை எந்தப் பலனும் கிடைக்காததால் தங்களுக்கு தொழிற்சங்கப் போராட்டத்தில் ஈடுபடுவதைத் தவிர வேறு வழியில்லை என்றும் அரச ஆசிரியர் அதிபர் சம்மேளனம் தெரிவித்துள்ளது.

இந்தச் சம்மேளனத்தின் பிரதிநிதிகள் அண்மையில் கல்வி அமைச்சில் நடைபெற்ற கலந்துரையாடலின் போது மேற்கூறிய பிரச்சினைகளைச் சுட்டிக்காட்டியதுடன், அதிபர் பதவியில் இரண்டாம், முதலாம் தரத்தினரின் சம்பள முரண்பாடுகளும் இதுவரை தீர்க்கப்படவில்லை என்பதையும் சுட்டிக் காட்டினர்.

தங்களது பிரச்சினைகள் தொடர்ந்தும் இழுபறியில் இருந்தால் தாங்கள் நாடளாவிய ரீதியில் பெரிய தொழிற்சங்கப் போராட்டத்தில் ஈடுபடப்போவதாக அவர்கள் அரசுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளனர். (எ)

# இலங்கையில் உள்ள பள்ளிவாசல்களை சர்வதேச நிலைக்கு உயர்த்த நடவழக்கை

## கொழும்பு பள்ளிவாசல்கள் சம்மேளனம் தீர்மானம்

கொழும்பு, டிசெ.22

இலங்கையிலுள்ள பள்ளிவாசல்களை எதிர்வரும் 10 வருட கால எல்லைக்குள் ஐ.எஸ்.ஓ. சர்வதேச தரம் உயர்த்தத் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கான திட்டம் ஒன்றை கொழும்பு மாவட்ட பள்ளிவாசல்கள் சம் மேளனம் தயாரித்துள்ளது.

இதன் அடிப்படையில் பள்ளிவாசல்களின் சூழல், சுத்தம், அடிப்படை வசதிகள், ஜமா அத்தார்களின் வாழ்க்கைத் தரம், தலைமைத்துவம் என்பனவற்றில் அதிக கவனம் செலுத்தப்படவுள்ளதுடன் இது தொடர்பில் ஜமா அத்தார்கள் மற்றும் பள்ளிவாசல்களின் நிர்வாகிகள் தெளிவுபடுத்தப்படவுள்ளனர்.

அண்மையில் கொழும்பில் நடைபெற்ற 12 பள்ளிவாசல் சம்மேளனங்கள் உள்ளடங்கிய கொழும்பு மாவட்ட பள்ளிவாசல்களின் சம்மேளனத்தின் பிரதிநிதிகள் கலந்து கொண்ட ஒன்றுகூடலின் போதே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக கொழும்பு மாவட்ட பள்ளிவாசல்கள் சம்மேளனத்தின் தலைவரும் இலங்கை முஸ்லிம் மத உரிமைகள் சங்கத்தின் தலைவருமான எம்.அஸ்லம் ஒத்மான் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

''ஐ.எஸ்.ஓ.தரச்சான்றிதழ் ஒரு சர்வதேச தரச் சான்றிதழ் இதுவரை காலம் நாட்டிலுள்ள பிரபல நிறுவனங்களே ஐ.எஸ்.ஓ.தரச் சான்றிதழைப் பெற்று தமது நிறுவனங்களின் தரத்தை உயர்த்தியுள்ளன.

இதற்காக நாம் பல வேலைத் திட்டங்களை முன்னெடுக்க வேண்டியுள்ளது. சமூகத்தையும் பள்ளிவாசல் நிர்வாகிகளையும் விழிப்புணர்வூட்ட வேண்டியுள்ளது. அதனாலேயே நாம் 10 வருட வேலைத் திட்டத்தை முன்னெடுக்கவுள்ளோம்.

நாட்டிலுள்ள அனைத்துப் பள்ளிவாசல்களையும் இந்தத் திட்டத்தினுள் உள்வாங்கவுள்ளோம். தற்போது பள்ளிவாசல்களின் நிர்வாகிகள் பள்ளிவாசல்களுக்கு நிறம்பூசுவது, சுத்தம் செய்வது போன்றனவற்றையே தங்களது கடமையாகக் கருதுகிறார்கள். இந்த நிலை மாற வேண்டும். இதனை மாற்றியமைக்கவே நாம் விரும்புகிறோம்.''- என்றார். (எ)

# 4 புதிய தொழிற்சாலைகள் வடக்கில் நிறுவ நடவழக்கை

## கைத்தொழில் அமைச்சு ஏற்பாடு



கொழும்பு, டிசெ.22

வடமாகாணத்தில் 4 தொழிற்சாலைகளை புதிதாக ஆரம்பிப்பதற்கு கைத்தொழில், வணிகத் துறை அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

இதுதொடர்பில் கைத்தொழில் வணிகத் துறை அமைச்சர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

''முல்லைத்தீவு மாவட்டத்தில் கரும்புச் செய்கையை மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் 5 ஆயிரம் ஹெக்ரேயர் நிலப்பரப்பில் இந்த கரும்புச் செய்கையை மேற்கொள்ள முதலீட்டாளர்கள் பலர் விருப்பம் கொண்டுள்ளனர்.

கரும்புச்செய்கை செயற்றிட்டத்தில், உள்நாட்டு முதலீட்டாளர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படவுள்ளது. கரும்புச் செய்கையின் பின்னரான அறுவடைக்காக நிலையான விலையை நிர்ணயிப்பதற்கும் எமது அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

இதனிடையே, வடமாகாணத்தில் 4 தொழிற்சாலைகளை புதிதாக ஆரம்பிப்பதற்கு எமது அமைச்சு நடவடிக்கை எடுத்து வருகின்றது.

அத்துடன், ஆனையிறவு உப்பளம், பரந்தன் இரசாயன தொழிற்சாலை, காங்கேசன் துறை சீமெந்துத் தொழிற்சாலை என்பவற்றை மீள ஆரம்பிப்பது தொடர்பிலும் ஆரம்பக் கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.''- என்றார். (எ)

### ரயில் விபத்துகளால் இவ்வருடத்தில் 347 பேர் உயிரிழப்பு

கொழும்பு, டிசெ.22

ரயில் விபத்துக்களில் 2016 ஆம் ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் 347 பேர் உயிரிழந்தனர் என்று ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அந்தத் திணைக்களம் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

''பயணித்துக் கொண்டிருக்கும் ரயிலில் இருந்து விழுந்தமையால் 58 பேரும், ரயில் பாதையில் இடம் பெற்ற விபத்தில் 14 பேரும், ரயில் முன் பாய்ந்து தற்கொலை செய்து கொண்டவர்களில் 31 பேரும் இதில் அடங்குவர்.

கடந்த வருடத்துடன் ஒப்பிடும் போது இந்த வருடத்தில் ரயில் விபத்துக்களின் மூலம் ஏற்படும் உயிரிழப்புக்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.

### நாளை

23.12.2016
வெள்ளிக்கிழமை
திதி :தசமி பின்னிரவு 3.25 வரை
நட்சத்திரம்: சித்திரை பின்னிரவு 12.21 வரை
சுபநேரம் : 6.25 - 7.55
இராகுகாலம் : 10.55 - 12.25








சாவகச்சேரி, புவேந்தன் பாலர் பகல் பராமரிப்பு நிலைய 22 ஆம் ஆண்டு கலைவிழாவில் மாணவர்களது கலை நிகழ்வையும் மாணவர்கள் கௌரவிக்கப்படுவதையும் யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர் பா.செந்தில்நந்தனன் கௌரவிக்கப்படுவதையும் காணலாம். (இ)

## வடக்கின் சுகாதார நிலைமை தொடர்பில்

# கனடாவில் சர்வதேச மாநாடு ஜனவரியில்

### வடக்கு மாகாண சபை உருவான பின் முதலாவது மருத்துவ கலந்துரையாடல்



யாழ்ப்பாணம்,டிசெ.22

வடக்கின் சுகாதார நிலைமைகள் மற்றும் மேம்பாடு தொடர்பில் ஜனவரி மாதம் கனடாவில் சர்வதேச மாநாடு ஒன்று நடைபெறவுள்ளது.

கனேடியத் தமிழ்க் காங்கிரஸின் ஏற்பாட்டில், வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் ஒழுங்கமைப்பில் இந்தச் சர்வதேச மருத்துவக் கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது என வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் தெரிவித்தார்.

வடக்கு மாகாண சபை உருவாக்கப்பட்ட பின்னர் நடைபெறும் முதலாவது சர்வதேச கலந்துரையாடல் இதுவாகும்.

கனடாவின்ரொறன்ரோ நகரில் ஜனவரி 16ஆம், 17ஆம் திகதிகளில் நடைபெறும் இந்த மாநாட்டில் பங்குபற்றுவதற்கு வடக்கு, கிழக்கு மாகாணங்களின் சுகாதார மற்றும் கல்வி அமைச்சர்கள் உள்ளிட்ட 22 பேர் பயணமாகவுள்ளனர்.

வடக்கு மாகாண சுகாதார அமைச்சால் மூன்று ஆண்டு கால மூலோபாய அபிவிருத்தித் திட்டம் தயாரிக்கப்பட்டது. 16 விடயப்பரப்புக்கள் அடையாளப்படுத்தப்பட்டன.

பின்னர் 10 விடயங்களாக அவை தொகுக்கப்பட்டன. பத்து விடயங்களிலிருந்து 5 விடயங்கள் முன்னுரிமைப் படுத்தப்பட்டன.

உள சுகாதாரம், சிறப்புத் தேவைக்குரியவர்களின் நீண்ட காலப் பராமரிப்பு, விபத்துக்கள் மற்றும் காயம் ஏற்படுதலைத் தவிர்த்தலும் அவசர சிகிச்சையும், சுகாதாரத் தகவல்களை இலத்திரனியல் மயப்படுத்தல், மனிதவள அபிவிருத்தி ஆகியவையே முன்னுரிமைப்படுத்தப்பட்டுள்ளன.

இவற்றை முன்னெடுப்பதற்கு இலங்கை அரசின் நிதி உதவி மாத்திரம் போதாது. வெளிநாட்டு உதவிகளும் தேவை. கனடா, அமெரிக்கா, பிரிட்டன், நோர்வே, ஆஸ்திரேலியாவில் உள்ள மருத்துவ நிபுணர்கள், துறைசார்ந்த நிபுணர்கள் இந்தக் கலந்துரையாடலில் பங்கேற்கவுள்ளனர்.

உலக சுகாதார நிறுவனம், நிதி வங்கிகள் பலவற்றில் தமிழர்கள் மிகப் பெரிய பதவிகளில் உள்ளனர். அவர்களும் இந்தக் கலந்துரையாடலுக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

எமது மருத்துவக் குழுவினர் வடக்கின் தேவைகள் தொடர்பில் தெரியப்படுத்துவர். அதன் பின்னர் அதற்கு எவ்வாறான உதவிகளை வழங்கலாம் என்பது தொடர்பில் ஆலோசனை முன்வைக்கப்படும்.

இதன் மூலம் வடக்கின் சுகாதார அபிவிருத்தியை முன்னெடுக்க முடியும். இதற்கு வடக்கு ஆளுநர், மத்திய அரசின் அனுமதிகள் கிடைத்துள்ளன என வடக்குச் சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் மேலும் தெரிவித்தார். (இ)

# வடக்கு போக்குவரத்துச் சேவையில் ஜனவரி முதல் புதிய நேர அட்டவணை

### தனியார்- இ.போ.சபையினர் இணக்கப்பாட்டில்; மீறும் எந்தத் தரப்பு மீதும் கடும் நடவடிக்கை





யாழ்ப்பாணம்,டிசெ.22

வடக்கின் போக்குவரத்து தொடர்பில் தனியார் மற்றும் போக்குவரத்துச் சபையினர் இணக்கப்பாட்டுக்கு வந்துள்ளதால், அடுத்து ஜனவரி முதல் புதிய இணைந்த நேர அட்டவணை நடைமுறைக்கு வருகிறது. இந்தப் புதிய அட்டவணை நடைமுறையை மீறுவோர் மீது கடும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று வடக்கு மாகாணபயணிகள்போக்குவரத்து அதிகார சபை அறிவித்துள்ளது.

இது தொடர்பில் மாகாண போக்குவரத்து அமைச்சர் பா.டெனிஸ்வரனும் எச்சரித்துள்ளார்.

நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நடந்த சந்திப்பில் இந்த முடிவுகள் எட்டப்பட்டன.

வடக்கு மாகாண பயணிகள் போக்குவரத்து அதிகாரசபையின் நான்காவது அமர்வு போக்குவரத்து அமைச்சர் பா.டெனிஸ்வரன் தலைமையில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணம் குருநகரில் அமைந்துள்ள மாகாண வீதி அபிவிருத்தித் திணைக்கள மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த அமர்வில் அதிகார சபையின் தலைவர் அ.நிக்கொலஸ்பிள்ளை, மற்றும் சபையின் உறுப்பினர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

அங்கு பல விடயங்கள் கலந்துரையாடப்பட்டாலும், விசேடமாக தற்போது வடக்கில் அதிகரித்துள்ள வீதி விபத்துக்கள் தொடர்பில் உள்ள பிரச்சினைகளில் ஒருசில பிரதான காரணங்களில் தனியார் மற்றும் இலங்கைப் போக்குவரத்துச் சபை ஆகிய பேருந்து சேவைக்கான இணைந்த நேர அட்டவணை சரியான முறையில் பின்பற்றப்படாமையும் ஒரு காரணியாக இருக்கிறது.

ஏற்கனவே தயார்செய்யப்பட்டு அமுல்படுத்த முற்பட்ட வேளையில் ஒரு சில குறைபாடுகள் காணப்பட்டதால் அது அமுல்படுத்தப்படவில்லை. அந்தக் குறைபாடுகள் தனியார் மற்றும் இலங்கை போக்குவரத்து சபையினர் ஆகிய இரு தரப்பினராலும் திருத்தியமைக்கப்பட்டு மீண்டும் எதிர்வரும் தை மாதம் புதிய இணைந்த நேர அட்டவணையை அமுல்படுத்துவதாக சபையினால் ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இது தொடர்பில் அமைச்சர் கருத்துத் தெரிவிக்கையில்:-

புதிய இணைந்த நேர அட்டவணை அமுல்படுத்திய பின்னர் அதனை மீறுகின்ற எந்தத் தரப்பினராக இருந்தாலும் கடுமையான சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும், எனவே அதனைக் கருத்தில் கொண்டு எமது மாகாணத்தின் மக்களது உயிர்களில் அக்கறையுள்ளவர்களாகச் சகல சாரதிகளும் நடத்துநர்களும் நடந்து கொள்ளவேண்டும் என்றும் தெரிவித்தார்.

அத்தோடு குறித்த அமர்வில் இலங்கை போக்குவரத்துச் சபையின் வடமாகாண பிரதம பிராந்திய முகாமையாளர் மற்றும் வட இலங்கை தனியார் பேருந்து சங்கங்களின் தலைவர் ஆகியோர் சபையின் உறுப்பினர்களாக உள்ளனர். அவர்கள் குறித்த இணைந்த நேர அட்டவணையை அமுல்படுத்த தமது ஆதரவை வழங்கியுள்ளனர். (இ)

## இராக அளிக்கை

கொழும்பு,டிசெ.22

கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் 'இராக அளிக்கை' என்னும் சங்கீத நிகழ்வு நடைபெற்று வருகின்றது.

இந்த நிகழ்வில் எதிர்வரும் 28 ஆம் திகதி புதன்கிழமை மாலை 6.00 மணிக்கு அமிர்தவர்சினி என்னும் இராகத்தில் 'இராக அளிக்கை' நடைபெறவுள்ளது. ஒவ்வொரு மாதமும் ஓர் இராகம் அறிமுகப்படுத்தப்படும்.

புதனன்று இடம்பெறவுள்ள இந்நிகழ்வுக்கு, பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரி, இசை ஆசிரியர் திருமதி ஜெகதாம்பிகை கிருபானந்தமூர்த்தி தலைமையில் நடைபெறவுள்ளது.

தமிழ் வாழ்த்தை செல்வி பௌர்ணமி ஆதவன் இசைப்பார். இராக அளிக்கையை செல்வி மதுஜா சிவநாதன் நிகழ்த்தவுள்ளார்.

குயிலுவக் கலைஞர்களாக வயலின் - செல்வி ஜோர்ஜ் பிறிசில்லா, மிருதங்கம்-ச.பிரணவன், கெஞ்சிரா - அ.சண்முகப்பிரியன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளார்கள். (இ)

# கொடுவாமடுவில் திண்மக்கழிவு நிலையம் திறக்கப்பட்டும் இதுவரை செயற்பாடுகள் எவையும் நடைபெறவில்லையே!

## ஏறாவூர்ப்பற்றுபிரதேச ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தில் விசனம்

மட்டக்களப்பு,டிசெ.22

காத்தான்குடி பிரதேசத்தில் சேகரிக்கப்படும் கழிவுகளை ஆற்றில் கொட்டுவதால் அயல் கிராமங்களிலுள்ள மக்கள் சுகாதாரச் சீர்கேடுகளைச் சந்திக்கின்றனர். மாவட்டத்தில் கழிவு கொட்டுவது தொடர்பில் ஏற்பட்டுள்ள சுகாதாரப் பிரச்சினைக்குத் தீர்வாகக் கொடுவாமடு திண்மக் கழிவு முகாமைத்துவ நிலையம் அவசரமாகத் திறக்கப்பட்டது. ஆனால் இதுவரை செயற்பாடுகள் எதுவும் நடைபெறவில்லை என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஞா.ஸ்ரீநேசன் விசனம் தெரிவித்தார்.

மட்டக்களப்பு - ஏறாவூர்ப் பற்று பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

செங்கலடி கொடுவாமடுவில் ஐக்கிய நாடுகள் சபையின் நிதியுதவியுடன் அமைக்கப்பட்ட திண்மக்கழிவு முகாமைத்துவ நிலையம் உத்தியோகபூர்வமாக திறக்கப்பட்ட போதிலும் அதன் செயற்பாடுகள் இன்னும் ஆரம்பிக்கப்படவில்லை. இதனால் மாவட்டத்தில் திண்மக்கழிவுகள் கொட்டுவதில் பிரச்சினைகள் அதிகரித்துள்ளன.

எல்லாக் கழிவுகளும் ஒரே இடத்தில் கொட்டப்பட்டால் இந்நிலையம் அமைக்கப்பட்டதற்கான நோக்கம் நிறைவடையாது. சூழல்பாதுகாப்பு தொடர்பாக வருங்காலத்தில் ஏற்படும் பிரச்சினைகள் தொடர்பாக முன்கூட்டியே அனுமதிப்பத்திரம் பெறப்பட்டதா? என்றும் கேள்வி எழுப்பினார் அவர்.

அதனைத் தொடர்ந்து ஐக்கிய நாடுகள் சபை சேவைத் திட்ட மட்டக்களப்பு மாவட்ட முகாமையாளர் சி.சிவகுமாரன் பதிலளித்தார்.

அவர் கூறியவை வருமாறு:-

கொடுவாமடு திண்மக் கழிவு முகாமைத்துவ நிலையத்தில் கழிவுகளைக் கொட்டுவதற்கான தளம் தயார்படுத்தப்பட்டுள்ளது. இங்கு மீள் சுழற்சி முறைக்கு உட்படுத்த



முடியாத கழிவுகளை மாத்திரம்தான் கொட்ட முடியும். மாவட்டத்திலுள்ள சகல உள்ளூராட்சி மன்றங்களுக்கும் திண்மக்கழிவு முகாமைத்துவம் வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. அவர்கள் சரியான முறையில் செயற்பட்டு தரம் பிரிக்கப்பட்ட கழிவுகளை மாத்திரம் இங்கு கொட்டவேண்டும்.

மாவட்டத்தில் மூன்று நிலை நிரப்புத் தளங்கள் அமைப்பதற்கான தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் காணிப் பிரச்சினை காரணமாக 275 மில்லியன் ரூபா செலவில் இந்தப் பகுதியில் மட்டும் இந்த நிலையம் தற்போது அமைக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையம் கிழக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. எப்போது இயங்கும் என்பது எங்களது கைகளில் இல்லை. கிழக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சிடம் நாங்கள் கையளித்துவிட்டோம். சுற்றாடல் பாதுகாப்பு தொடர்பாக கட்டம் அமைப்பதற்காக அனுமதி ஏற்கனவே பெறப்பட்டுள்ளது. நிலையத்தின் அனுமதிக்கான வேலைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. இது உள்ளூராட்சி அமைச்சிடம் கையளிக்கப்பட்டதன் காரணமாக செயற்பாடுகளில் நாங்கள் எதுவித தலையீடுகளும் செய்ய முடியாது-செய்யமாட்டோம் - என்றார்.

பிரதியமைச்சர் எம்.எஸ். எஸ்.அமீர் அலி தெரிவித்தவை வருமாறு:-

மட்டக்களப்பு மாவட்டத்தில் பல மில்லியன் செலவில் முன்னெடுக்கப்பட்ட திட்டங்கள் பல கைவிடப்பட்ட நிலையில் காணப்படுகின்றன. இந்நிலையில் இந்தத் திட்டத்திற்கும் அவ்வாறான நிலை ஏற்படக் கூடாது. கிழக்கு மாகாணசபை இதனை சிறந்த முறையில் முன்னெடுக்க வேண்டும்.-என்றார்

(ச)

## தங்கச் சங்கிலியைப் பறித்த நபரை துரத்திப் பிடித்தனர் பொலிஸார்!

கல்முனை,டிசெ.22

கல்முனையில் பெண் ஒருவரின் தங்கச் சங்கிலியைப் பட்டப்பகலில் பறித்துச் சென்ற நபர் ஒருவரைப் பொலிஸார் துரத்திச் சென்று பிடித்துள்ளனர்.

நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை .இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் சேனைக் குடியிருப்பைச்சேர்ந்த பெண்ணின் தங்கச் சங்கிலியே இவ்வாறு பறித்துச் செல்லப்பட்டுள்ளது.

இதனையடுத்து பாண்டிருப்பு நடமாடும் பொலிஸ் காவலரண் பொறுப்பதிகாரி தலைமையில் 8 கிலோமீற்றர் வரை இந்த நபரை விரட்டிச் சென்று, கோட்டைக் கல்லாற்றில் வைத்துப் பிடித்துள்ளனர்.

சம்பவத்துடன் தொடர்புடைய நபர் நிந்தவூரைச் சேர்ந்தவர் என்று விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

(ச)

## சேதப்படுத்தப்பட்ட விக்கிரகங்கள் தொடர்பில் நடவடிக்கை எடுக்குக!

### கிராமிய பொருளாதார பிரதி அமைச்சர் பொலிஸாருக்கு பணிப்பு!

வாழைச்சேனை வாகனேரி பகுதியில் உள்ள ஸ்ரீ சித்தி விநாயகர் கோயில் இனம் தெரியாத நபர்களினால் உடைத்து சேதப்படுத்தப்பட்டது தொடர்பில் ஜனவரி மாதத்துக்குள் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று கிராமிய பொருளாதார பிரதி அமைச்சர் அமீர் அலி பொலிஸாருக்கு அறிவுறுத்தல் விடுத்துள்ளார்.

மட்டக்களப்பு - கிரான் பிரதேச செயலகத்தில் நேற்று இடம்பெற்ற பிரதேச அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே பிரதி அமைச்சர் இந்த விடயத்தை வலியுறுத்தியுள்ளார்.

கடந்த 18 ஆம் திகதி இரவு இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் ஆலயத்தில் இருந்த சிவலிங்கம் தூக்கி எறியப்பட்டிருந்தது. திரைச்சீலையும் கிழிக்கப்பட்டு கோவிலில் இருந்த ஏனைய பொருள்களும் சேதமாக்கப்பட்டன.

இது தொடர்பில் வாழைச் சேனைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்நிலையிலேயே பிரதி அமைச்சர் வாழைச்சேனை பொலிஸாருக்கு இந்த அறிவுறுத்தலை விடுத்துள்ளார்.

## கட்டுத்துவக்குடன் இளைஞர் கைது

குச்சவெளிப் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட ஜாயா நகர் காட்டுப்பகுதியில் கட்டுத்துவக்குடன் இளைஞர் ஒருவர் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

இது தொடர்பில் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலையடுத்தே இந்தக் கைது இடம்பெற்றது. (ச)

## நுளம்பு பரவும் சுற்றுச் சூழல்: 118 பேருக்கு வழக்குத் தாக்கல்!

நிந்தவூர் மற்றும் காரைதீவுப் பிரதேசங்களில் நுளம்புகள் பெருகக்கூடிய வகையில் சுற்றுச் சூழலை வைத்திருந்த 118 பேருக்கு எதிராக சம்மாந்துறை நீதிவான் நீதிமன்றத்தில் எதிர்வரும் ஜனவரி 2 ஆம் திகதி வழக்குத் தாக்கல் செய்யப்பட உள்ளது.



நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இந்தப் பிரதேசங்களில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களும் பொலிஸாரும் இணைந்து சோதனை மேற்கொண்டனர். இதன் போதே நுளம்புகள் பெருகக் கூடிய வகையில் சுற்றுச் சூழலை வைத்திருந்தவர்கள் அடையாளம் காணப்பட்டனர்.

(ச)

## ஓட்டோ விபத்தில் அறுவர் படுகாயம்!

மட்டக்களப்பு,டிசெ.22

மட்டக்களப்பு புதுப்பாலத்தில் ஓட்டோ ஒன்று வேகக் கட்டுப்பாட்டை இழந்து விபத்துக்குள்ளானதில் வாவிக்குள் விழுந்து 6 பேர் படுகாயமடைந்தனர்.

நேற்று புதன்கிழமை இடம்பெற்ற இந்த விபத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஐவர், ஓட்டோச் சாரதி ஆகியோரே படுகாயமடைந்தவர்கள் ஆவர். ஏறாவூரிலிருந்து மட்டக்களப்புப் போதனா வைத்திய சாலைக்கு இவர்கள் ஓட்டோவில் சென்றுகொண்டிருந்தனர். இதன்போது புதுப்பாலத்தடியில் வைத்து ஓட்டோ வேகக் கட்டுப்பாட்டை இழந்து வாவிக்குள் பாய்ந்துள்ளது.

விபத்துக்குள்ளானவர்கள் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

(ச)






மட்டக்களப்பு மாவட்ட செயலக ஒளிவிழா நிகழ்வுகள் மாவட்ட செயலக வளாகத்தில் நடைபெற்றுள்ளது.

நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற இந் நிகழ்வில் பிரதம அதிதிகளாக மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ், மேலதிக அரசாங்க அதிபர் எஸ்.கிரிதரன் மற்றும் மட்டக்களப்பு மறை மாவட்ட குரு முதல்வர் அருட்தந்தை ஏ.தேவதாசன், அமிர்தகழி மெதடிஸ்த ஆலய அருட் தந்தை கிறேஸ் றொபின் ஆகியோர் கலந்து கொண்டனர்.

கரோல் கீதம் இசைக்கப்படுவதையும், வறிய மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்படுவதையும் படங்களில் காணலாம். (ச)

# இலங்கை – ஜப்பான் இடையே பாதுகாப்பு கலந்துரையாடல்






கொழும்பு, டிசெ.22

ஜப்பான்- இலங்கை இடையே பாதுகாப்பு ஒத்துழைப்புக் கலந்துரையாடல் நேற்று முன்தினம் கொழும்பில் உள்ள பாதுகாப்பு அமைச்சில் இடம்பெற்றுள்ளது.

இலங்கையின் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜேவர்த்தனவின் அழைப்பின் பேரில், ஜப்பானிய பாதுகாப்பு உயர்மட்டக் குழுவொன்று இந்தக் கலந்துரையாடலில் பங்கேற்றது.

இந்தக் கலந்துரையாடலில் இருதரப்பு மற்றும் பரஸ்பர நலன்கள், முக்கியத்துவம் வாய்ந்த பாதுகாப்பு விவகாரங்கள் தொடர்பாக விரிவாக பேசப்பட்டுள்ளது.

இலங்கைத் தரப்பில், பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜேவர்த்தன, பாதுகாப்புச் செயலர் கருணாசேன ஹெட்டியாராச்சி, இராணுவ, கடற்படை, விமானப்படைத் தளபதிகள் இந்தக் கலந்துரையாடலில் பங்கேற்றனர்.

ஜப்பான் தரப்பில், டோக்கியோவில் இருந்து வந்திருந்த, உயர்மட்டக் குழுவினருடன், கொழும்பிலுள்ள ஜப்பானிய தூதரகப் பாதுகாப்பு ஆலோசகர் லெப். அட்சுகிரோ மொரோரேயும் பங்கேற்றுள்ளார்.

இலங்கை- ஜப்பான் இடையே பாதுகாப்பு ஒத்துழைப்புக் கலந்துரையாடல் முதல்முறையாக நடத்தப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

## கடந்த காலங்களில் உள்ளூராட்சி நிறுவனங்கள் அதிகார துஷ்பிரயோக மையங்களாக காணப்பட்டன

*ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவிப்பு*



கொழும்பு, டிசெ.22

கடந்த பல தசாப்தங்களில் சில உள்ளூராட்சி நிறுவனங்களில் அரசியல்வாதிகள் ஊழல், மோசடி முறைகேடுகளை மேற்கொண்டுவந்தனர்.

இவ்வாறு அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்தியதால், அவர்களது அரசியல் கட்சிகளும் பிரதிநிதித்துவப்படுத்திய அரசாங்கமும், அரசியல் தலைவர்களும் மக்களால் வெறுக்கப்பட்டனர் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் பிற்பகல் தாமரைத்தடாக அரங்கில் நடைபெற்ற 'சுவர்ண நகரம் விருது' வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போது ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி பதவிக்கு அடுத்ததாக கூடுதல் நிறைவேற்று அதிகாரமுடையவர்கள் உள்ளூராட்சி நிறுவன தலைவர்கள் ஆவர்.

அவர்கள் எப்போதும் தமது அதிகாரத்தை மக்கள் நலனுக்காகவே பயன்படுத்த வேண்டும்.

தமது அதிகாரங்களை மக்கள் நலனுக்காக பயன்படுத்தும் அனைத்து அரசியல்வாதிகளும் மக்களால் பாராட்டப்படுகின்றனர். அனைத்து உள்ளூராட்சி நிறுவனங்களும் நல்லாட்சியின் மையங்களாக மாறவேண்டும்.

மக்களது பிரச்சினைகளை தேடிச்சென்று அவற்றுக்கு தீர்வு வழங்குவது அரசியல்வாதிகளினதும் அரச அலுவலர்களினதும் பொறுப்பாகும்.

அபிவிருத்தி, நல்லாட்சி, நிதி முகாமைத்துவம், சமூக நலன்புரி செயற்பாடுகள் போன்றவற்றில் உள்ளூராட்சி நிறுவனங்கள் வரையறையற்ற அதிகாரங்களை கொண்டிருக்கின்றன.

இதன் மூலம் தமது சேவை சிறப்பினை காட்டுவதற்கு அனைத்து உள்ளூராட்சி நிறுவன அரசியல்வாதிகளும் அரச அலுவலர்களும் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும்.- என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி நிறுவனங்கள் மூலம் மக்களுக்கு வினைத்திறன், உற்பத்தித்திறன் மிக்க சேவைகளை வழங்கவேண்டும் என்பதற்காக, அந்த நிறுவனங்களை ஊக்குவித்து வலுவூட்டும் நோக்குடன் இந் நிகழ்வு முன்னெடுக்கப்படுகிறது.

உள்ளூராட்சி நிறுவனங்களைப் பாராட்டுவதற்காக மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சினால் வருடாந்தம் 'சுவர்ண நகரம் விருது விழா' ஏற்பாடு செய்யப்படுகிறது.

23 மாநகர சபைகள், 41 நகரசபைகள், 271 பிரதேச சபைகளை உள்ளடக்கிய 335 உள்ளூராட்சி நிறுவனங்கள் உள்ளன.

இந்த நிறுவனங்களின் பல வீனங்கள் மற்றும் சவால்களை இனங்கண்டு, அவற்றை வெற்றிகொள்வதற்கு இத்திட்டத்தின் ஊடாக வழிகாட்டப்படுகிறது.

இந்த நிகழ்வில், மாகாண சபைகள், உள்ளூராட்சி அமைச்சர் பைசர் முஸ்தபா, இராஜாங்க அமைச்சர் பிரியங்கர ஜயரத்ன மற்றும் ஆளுநர்கள், மாகாண அமைச்சர்கள், உள்ளூராட்சி நிறுவன ஆணையாளர்கள் உட்பட பலர் கலந்துகொண்டுள்ளனர்.

## தம்புள்ளையில் துப்பாக்கிச் சூடு; ஒருவர் பலி!

கொழும்பு, டிசெ.22

தம்புள்ளை - கலேவல பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்றுக் காலை இடம்பெற்ற இச் சம்பவத்தில், 34 வயதான ஒருவரே உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவரின் வீட்டிற்கு முன்பாக இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## அமெரிக்காவில் புலிகள் மீதான தடையை நீக்குமாறு ஒபாமாவிடம் கோரிக்கை

கொழும்பு, டிசெ.22

அமெரிக்காவில் தமிழீழ விடுதலை புலிகளுக்கு விதிக்கப்பட்டுள்ள தடையை நீக்குமாறும் ஒபாமாவிற்கான தமிழர்கள் என்ற புலம்பெயர் அமைப்பு அந்த நாட்டு ஜனாதிபதி பராக் ஒபாமாவிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

அமெரிக்க ஜனாதிபதியாக பதவி வகிக்கும் ஒபாமா, இன்னும் ஒரு சில தினங்களில் உத்தியோகபூர்வமாக ஓய்வு பெறவுள்ளார்.

இந்நிலையிலேயே இந்தக் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் அந்த அமைப்பு மேலும் குறிப்பிட்டுள்ளவை வருமாறு:-

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளதால் பல தமிழர்கள் பாதிக்கப்படுகின்றனர்.

தமிழீழ விடுதலை புலிகளை தடைசெய்துள்ளதால், வெளிநாடுகளுக்கு பயணங்களை மேற்கொள்ளும் போதும், அமெரிக்காவிற்கு நாடு திரும்பும் போதும் பல அமெரிக்க தமிழர்களுக்கு சிக்கல்கள் ஏற்படுகின்றன. பல மணி நேர விசாரணைகளின் பின்னரே பயணம் செய்வதற்கு அனுமதிக்கப்படுகிறது.

தமிழீழ விடுதலை புலிகளை தடைசெய்யப்பட்ட அமைப்புக்களின் பட்டியலில் இருந்து நீக்கும் விடயத்தில் ஒபாமா, தீர்க்கமான முடிவொன்றை எடுப்பதற்கு தமக்கு உதவி புரியுமாறு அமெரிக்க தமிழர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தற்போதைய கிறிஸ்மஸ் பண்டிகைக் காலத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கான தடையை நீக்கி, தமிழர்களுக்கு சிறிய நிம்மதியை ஒபாமாவினால் வழங்கமுடியும்.

தமிழீழ விடுதலைப் புலிகள் செயற்படாத ஓர் அமைப்பாக மாறியுள்ளது. கடந்த ஏழு ஆண்டுகளாக தமிழீழ விடுதலை புலிகளின் செயற்பாடுகள் பதிவாகவில்லை.

தடைசெய்யப்பட்ட அமைப்புக்களின் பட்டியலில் தமிழீழ விடுதலை புலிகளை தொடர்ந்தும் நீடிப்பதற்கு எந்தவொரு காரணமும் இல்லை எனவும் ஒபாமாவிற்கான தமிழர்கள் அமைப்பு குறிப்பிட்டுள்ளது.



வெளிநாடுகளில் உயிரிழந்த இலங்கைப் பணியாளர்களின் குடும்பங்களுக்கு நஷ்டஈடு வழங்கும் நிகழ்வு வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் அமைச்சர் மங்கள சமரவீர வெளிநாட்டில் உயிரிழந்த இலங்கைப் பணியாளர் ஒருவரின் குடும்பத்திற்கு நஷ்டஈடு வழங்கியபோது எடுக்கப்பட்ட படம்.

# மன்னார் கடற்றொழிலாளர் நேற்று வீதி மறியல் போர்!

## பட்டிவலை மீன்பிடிக்கான தடையை எதிர்த்து





வீதியின் குறுக்கே படகுகளை வைத்து மறியல்



மன்னார், டிசெ.22

மன்னாரில் பட்டிவலை மீன்பிடித் தொழிலுக்கு இடையூறு விளைவிக்க வேண்டாம் என்று கோரி பனங்கட்டுக் கொட்டு கடற்றொழிலாளர்கள் நேற்று வீதி மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மன்னார் தென்கடலில் முருகைக் கற்பாறைத் தொடருக்கு அண்மையில் பனங்கட்டுக் கொட்டு மீனவர்கள் பட்டிவலைத் தொழிலில் ஈடுபடுவதை நிறுத்துமாறு மன்னார் மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்துறை திணைக்களம் காலக்கெடு வழங்கியிருந்தது.

அதைத் தொடர்ந்து நேற்று பனங்கட்டு கொட்டு மீனவர்களால் தென்கடல் பகுதியில் மேற்கொள்ளப்பட்டிருக்கின்ற பட்டிவலைகளை பொலிஸ் மற்றும் கடற்படையினரின் உதவியுடன் அகற்றுவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

இதனைக் கண்டித்து மன்னார் பனங்கட்டுக் கொட்டுப் பகுதி கடற்றொழிலாளர், சிறுவர் முதல் ஆண்கள், பெண்கள் என நூற்றுக்கணக்கானோர் மன்னார் நகரில் பள்ளிமுனை நாற்சந்தியில் படகுகளை வீதியின் குறுக்கே வைத்து பதாகைகளை ஏந்தியவாறு அமர்ந்திருந்து மறியலில் ஈடுபட்டனர்.

நேற்றுக் காலை 6 மணி முதல் இரு மணித்தியாலங்கள் இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது. பஸ்களை மறித்தும் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. இதன் போது மன்னார் பொலிஸ் அத்தியட்சகர் மற்றும் மன்னார் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஆகியோர் சம்பவ இடத்துக்குச் சென்றனர். அங்கு வீதி மறியல் போராட்டத்தில் ஈடுபட்ட மக்களுடன் பேச்சு நடத்தினர்.

எனினும் உரிய அதிகாரிகள் இந்த இடத்துக்கு வந்து தங்களுடன் பேச்சு நடத்தி தென் கடல் பகுதியில் உள்ள கட்டுவலைகளை அகற்ற மாட்டோம் என்று உறுதிமொழி வழங்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்தனர்.

இந்த நிலையில் மன்னார் கடற்றொழில் திணைக்கள அதிகாரிகள் மற்றும் வட மாகாண சபை உறுப்பினர் ஜீ.குணசீலன் ஆகியோர் சம்பவ இடத்துக்குச் சென்று மீனவர்களுடன் கலந்துரையாடினர்.

அங்கு வருகை தந்த பொலிஸ் அதிகாரிகள் கடற்றொழில் திணைக்கள அதிகாரிகளுடன் மேற்கொண்ட பேச்சு காரணமாக கடலில் உள்ள கட்டு வலைகள் அகற்றப்பட மாட்டா என்று கடற்றொழில் திணைக்கள அதிகாரிகள் கூறினர்.

பனங்கட்டிக்கொட்டு கிராமத்தைச் சேர்ந்த பல நூற்றுக்கணக்கான மீனவர்கள் கட்டுவலைத் தொழிலையே மேற்கொண்டு வருகின்றனர்.

ஆரம்ப காலத்தில் மன்னார் சௌத்பார் தென்கடல் பகுதியில் இரும்புக் குழாய் மூலம் இந்த வலைகள் பாயப்பட்டிருந்தன.

இதனால் அயல் கிராம மீனவர்களின் படகுகளுக்கு சேதம் விளைவிக்கின்றது என்ற கேள்விக்கு அமைவாக இரும்புக் குழாய்கள் மூலம் பாயப்பட்ட வலைகள் இரும்புக் குழாய் இன்றி மிதவை மூலம் பாயப்பட்டு எந்த விதமான பாதிப்புக்களும் இன்றி நாம் கடற்றொழிலில் ஈடுபட்டு வந்தோம்.

அத்துடன் தென்கடல் பகுதியில் பாய்ச்சப்பட்டுள்ள கட்டு வலைகள் அனைத்தையும் அகற்றுமாறு கடந்த மாதம் 9 ஆம் திகதி மன்னார் கடற்றொழில் திணைக்கள உதவிப்பணிப்பாளர் கடிதம் அனுப்பியுள்ளார்.

மேலும் கிராம மக்கள் மன்னார் மாவட்டச் செயலகத்துக்குச் சென்று கடற்றொழில் .நீரியல் வளத்துறை அமைச்சர் மஹிந்த அமரவீரவுக்கு வழங்கப்பட வேண்டிய மனுவை மாவட்ட அரச அதிபர் எம்.வை.எஸ். தேசப்பிரிய விடம் கையளித்துள்ளனர். மேலும் போராட்டத்தில் கலந்து கொண்ட மாகாண சபை உறுப்பினர் வைத்தியர் குணசீலனிடமும் மனுவைக் கையளித்தனர்.

கொழும்பிலிருந்து வரும் குழுவுடன் பனங்கட்டுக் கொட்டு மீனவ பிரதிநிதிகளுடன் பொலிஸ் பொறுப்பதிகாரிகளின் தலைமையில் பேச்சு நடத்தி தீர்வு காண்போம் என்று பொலிஸார் தெரிவித்ததைத் தொடர்ந்தே போராட்டம் கைவிடப்பட்டது. (எ-112)

## மன்னாரில் பொது இடங்களில் புகைத்தோருக்கு அபராதம்!

மன்னார், டிசெ.22


மன்னாரில் பொது இடங்களில் புகை பிடித்தவர்களுக்குத் தலா 500 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

மன்னார் நகருக்குள் பொது இடங்களில் புகைப் பிடித்தவர்களை மன்னார் மதுவரித் திணைக்கள அதிகாரிகள் திடீரென சுற்றி வளைத்ததில் 7 பேர் கையும் மெய்யுமாகப் பிடிபட்டனர்.

மதுவரித் திணைக்கள அதிகாரிகளால் அந்த 7 பேர் மீது தனித் தனியாக வழக்குகள் மன்னார் மாவட்ட நீதிவான் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டன.

இதன்போது மன்னார் பதில் நீதிவான் இம்மனுவேல் கயஸ் பல்டானோ முன்னிலையில் சந்தேக நபர்கள் 5 பேர் மன்றில் முன்னிலையாகி தங்கள் குற்றங்களை ஒப்புக் கொண்டனர். அதைத் தொடர்ந்து தலா ஐநூறு ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. (எ-112)

## இறம்பைக்குளத்தில் மீண்டும் திருச்சொரூபம் நிர்மாணிப்பு



வவுனியா, டிசெ.22

வவுனியா, இறம்பைக் குளத்தில் விஷமிகளால் சேத மாக்கப்பட்ட புனித ஜோசப்வாஸ் திருச்சொரூபம் மீண்டும் அதே இடத்தில் நிர்மாணிக்கப்பட்டது.

புனித ஜோசப்வாஸ் வீதியில் அமைக்கப் பட்டிருந்த புனித ஜோசப்வாஸ் திருச் சொரூபம் விஷமிகளால் அண்மையில்தாக்கி சேதப்படுத்தப்பட்டிருந்தது.

அதையடுத்து புனித அந்தோனியார் ஆலய பங்குத்தந்தைஅருட்பணி எஸ். சத்தியராஜ் அடிகளால் வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டது. தற்போது கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை திருப்பலியின் பின்னர் தாக்கப்பட்டு சேதப்படுத்தப்பட்ட புனித ஜோசப்வாஸ் திருச்சொரூபம் புதிதாக நிர்மாணிக்கப்பட்டு, மீண்டும் அதே இடத்தில் வைக்கப்பட்டுள்ளது. (எ)

## ஒரு தொகை சிகரெட்டுகள் மீட்பு

கொழும்பு, டிசெ.22

கொழும்பு ஊறுகொடவத்தையில் உள்ள கொள்கலன் தளத்தில் சட்டவிரோதமாகக் கடத்தப்பட்ட 75 மில்லியன் பெறுமதியான சிகரெட்டுகளைச் சுங்க அதிகாரிகள் நேற்று மீட்டுள்ளனர். கொள்கலன் தளத்தில் உள்ள கொள்கலன் ஒன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் அவை மீட்கப்பட்டுள்ளன. (எ)

## இலங்கை—சிங்கப்பூர் நேரடி விமான சேவை அடுத்த ஆண்டில்

கொழும்பு, டிசெ.22

இலங்கை-சிங்கப்பூருக்கான நேரடி விமானப் போக்குவரத்தை சிங்கப்பூரின் சில்க் ஏயார் விமான சேவை அடுத்த ஆண்டு ஆரம்பமாகவுள்ளது.

எதிர்வரும் ஏப்ரல் மாதம் 8 ஆம் திகதி முதல் வாரத்தில் இருவழி சேவைகள் மூன்று நாள்கள் இடம்பெறும் என்று சில்க் எயார் சிங்கப்பூர் விமானசேவை அறிவித்துள்ளது.

இந்த விமானசேவை வாரத்தில் புதன், வியாழன், சனி ஆகிய தினங்களில் இடம் பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ)

# போரால் ஏற்பட்ட வடுக்களில் இருந்து மக்கள் மனதளவில் விடுபடவில்லை

## அப்போஸ்தலிக்க பரிபாலகர் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை கவலை

மன்னார், டிசெ.22

இந்த நாட்டில் இடம்பெற்ற கொடுமையான போர் முடிவடைந்து எட்டு வருடங்களாகிய பின்னும் இன்றுவரை போரின் வடுக்களில் இருந்து நமது மக்கள் முற்றாக விடுபடவில்லை. அவர்களின் மனப்புண்கள் ஆறவில்லை. இழப்புக்களைச் சந்தித்தவர்கள் இதய அமைதி பெறவில்லை.

-இவ்வாறு கவலை தெரிவித்துள்ளார் மன்னார் மறைமாவட்ட அப்போஸ்தலிக்க பரிபாலகர் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை.

கிறிஸ்து பிறப்பின் திருவருகைக்காலத்தை முன்னிட்டு ஒவ்வொரு மறை மாவட்ட ஆயர்களும் தங்கள் மறை மாவட்ட இறைமக்களுக்கும் திருவருகைக்கால திருமடல் வரைவது வழமையாகும். இதற்கேற்ப மன்னார் மறை மாவட்ட அப்போஸ்தலிக்க பரிபாலகர் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகையும் மன்னார் மறைமாவட்ட இறைமக்களுக்கு எழுதியிருக்கும் மடலில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அந்த மடலில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு-

காணாமற்போனோர் விவகாரம், அரசியல் கைதிகளின் விடுதலை, அரச படைகளால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள காணிகளை விடுவிப்பது தொடர்பான பிரச்சினை, தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு என்று பல தீர்க்கப்படாத பிரச்சினைகள் தொடர்ந்துகொண்டே இருக்கின்றன. 'விண்ணில் இருந்து விடியல் நம்மைத் தேடிவரும்' இந்த நாள்களில் நாம் நம்பிக்கையில் தளர்வுறாது தொடர்ந்து செயலாற்றுவோம்.

மகிழ்ச்சி நிறைந்த கிறிஸ்மஸ் விழாவை நாம் எதிர்கொண்டிருக்கும் இவ்வேளையில் நமது மக்களின் வாழ்வியல் சூழ்நிலை துன்பம் மிக்கதாக அநீதி நிறைந்ததாக, கவலையளிப்பதாக உள்ளதை நாம் காண்கின்றோம்.

நடைமுறையில் நாம் காணும் இன்றைய அநீதி நிறைந்த சூழ்நிலையை நாம் வெறுமனே பார்த்துக் கொண்டிருக்க முடியாது. அனைத்து வகையான அநீதிகளுக்கு எதிராகக் குரல் கொடுக்கவும், செயற்படவும் நாம் அழைக்கப்படுகின்றோம்.

இந்த நாட்டில் இடம்பெற்ற கொடுமையான போர் முடிவடைந்து ஏழு வருடங்களாகிய பின்னும் இன்றுவரை போரின் வடுக்களில் இருந்து நமது மக்கள் முற்றாக விடுபடவில்லை. அவர்களின் மனப்புண்கள் ஆறவில்லை. இழப்புக்களைச் சந்தித்தவர்கள் இதய அமைதி பெறவில்லை.



இந்த நிலையில் இனங்களின் தனித்துவம், இணக்கப்பாட்டு அரசியல் சமூகங்களிடையேயான புரிந்துணர்வு என்பவற்றை வலியுறுத்தி வெளிவரவிருக்கும் புதிய அரசமைப்பை வரவேற்கின்றோம். புதிய அரசமைப்பை உருவாக்க நன்மனத்துடன் உழைக்கும் இந்த நாட்டின் அரசியல் மற்றும் சட்டத்துறைத் தலைவர்களைப் பாராட்டி நிற்கின்றேன்.-என்றுள்ளது. (ஐ-112)

## சட்டவிரோத செயல்கள் அக்கராயனில் குறைவு

அக்கராயன் பிரதேசத்தில் சட்டவிரோத செயற்பாடுகள் குறைவடைந்துள்ளன என்று அக்கராயன் பொலிஸ் நிலைய அதிகாரி ஹேரத் தெரிவித்தார்.

அக்கராயன் கெங்காதரன் குடியிருப்பில் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற கலைமகள் சனசமூக நிலையத்தின் திறப்பு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

''கசிப்பு, கஞ்சா ஆகியபோதைப்பொருள் பாவனைகள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளன. இதற்காகச் சிவில் பாதுகாப்புக் குழுக்களைக் கிராம ரீதியாக அமைத்துள்ளோம். மணல் அகழ்வும் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது. காடழிப்பு தொடர்பிலும் கவனம் செலுத்தியுள்ளோம். - என்றார். (எ)



## பதிவாளர் அலுவலகம் வவுனியாவில் திறப்பு

வவுனியா, டிசெ.22

வவுனியாவில் பதிவாளர் அலுவலகம் நேற்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இந்த அலுவலகத்தை உள்நாட்டு, அலுவல்கள் அமைச்சர் வஜிர குணவர்த்தன திறந்து வைத்துள்ளார்.

வவுனியா மாவட்ட செயலகத்தில் அமைக்கப்பட்ட இந்தக் கட்டடம் வைபவரீதியாகத் திறந்து வைக்கப்பட்டுள்ளதுடன் இதன் மூலம் இந்த மாவட்டத்தின் பிறப்பு, இறப்பு, காணிகள் பதிவு நடவடிக்கைகள் நவீன மயப்படுத்தப்பட்டுள்ளன.

மேலும் நிகழ்வில் வவுனியா நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவசக்தி ஆனந்தன், கே.கே.மஸ்தான், அரச அதிபர் ரோஹண புஷ்பகுமார, அரச அதிகாரிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (எ-100)

## தொழிற் பயிற்சிகளை பூர்த்தி செய்த பயனாளிகளுக்கு உபகரணங்கள்!





கிளிநொச்சி , டிசெ.22

கிளிநொச்சி மாவட்ட சமூக சேவைகள் திணைக்களம் ஊடாக தொழிற் பயிற்சி நெறிகளைப் பூர்த்தி செய்த பயனாளிகளுக்கு நேற்று முன்தினம் தொழிலுக்கான உபகரணங்கள் வழங்கப்பட்டன. இந்த நிகழ்வு மாவட்ட சமூக சேவைகள் உத்தியோகத்தர் தபேந்திரன் தலைமையில் சமூக சேவைகள் திணைக்கள மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் முதன்மை அதிதியாக காவேரி கலாமன்ற பணிப்பாளர் வணபிதா. ஜோசுவா கலந்து கொண்டார். வடக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தின் நிதிப் பங்களிப்புடன் சமூகசேவைகள் திணைக்களம் ஊடாக வீட்டு மின்னிணைப்பு வாகனத் திருத்துநர் மற்றும் தையல் பயிற்சி நெறிகளைப் பெற்றவர்களுக்கே இந்த உபகரணங்கள் வழங்கப்பட்டன. இந்த நிகழ்வில் தொழிற் பயிற்சி உத்தியோகத்தர் ரமேஸ், மாற்றுவலுடையோர் சங்கத் தலைவர் நேசன், சமூக சேவைகள் திணைக்கள உத்தியோகத்தர்கள், பயனாளிகள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ஐ-70)

# மன்னார் கட்டுக்கரைக்குளத்தை தகுந்த முறையில் திருத்துங்கள்

## நீர்ப்பாசன, நீர் முகாமைத்துவ அமைச்சரிடம் வேண்டுகோள்

மன்னார், டிசெ.22

மன்னார் மாவட்டத்திலுள்ள பிரதான குளமாகிய கட்டுக்கரைக் குளத்தை தகுந்த விதத்தில் புனரமைக்க வேண்டும்.

சரியான முறையில் திருத்தப்பட்டால் இந்தக் குளத்தின் கீழ் விவசாயம் செய்யப்படும் 32 ஆயிரம் ஏக்கர் வரையான விஸ்தீரணத்தில் மேற்கொள்ளப்படும் பயிர்ச் செய்கையைத் திருப்திகரமாக மேற்கொள்ள முடியும்.

இவ்வாறு மன்னார் கட்டுக்கரைக் குளம் திட்ட முகாமைத்துவக் குழு நீர்ப்பாசன நீர் முகாமைத்துவ அமைச்சரிடம் வேண்டுகோள் விடுத்தது.

மன்னார் முருங்கன் பகுதியில் நீர்ப்பாசனப் பணிப்பாளர் அலுவலகத்தைச் சனிக்கிழமை நீர்ப்பாசனம் மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவ அமைச்சர் காமினி விஜயமுனி சொய்சா திறந்து வைத்தார்.

இந்த நிகழ்வில் கலந்து கொண்ட மன்னார் கட்டுக்கரைக் குளம் திட்ட முகாமைத்துவக் குழு அமைச்சரிடம் மகஜர் ஒன்றைக் கையளித்தது.

கட்டுக்கரைக் குளத் திட்டத்துக்கு மேற்கொள்ளப்பட வேண்டிய அத்தியாவசிய வேலைகள் சம்பந்தமாக வேண்டுகோள் விடுக்கும் வகையில் அந்த மகஜர் அமைந்திருந்தது.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

கட்டுக்கரைக் குளத்தின் கீழ் 32 ஆயிரம் ஏக்கர் வரையான விஸ்தீரணத்தில் பயிர்ச்செய்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எனினும் குளத்தினதும் வாய்க்கால்களதும் கொள்ளளவும் நிரந்தரமான கட்டுமானப் பணிகளும் திருப்திகரமானதாக மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

மன்னார் விவசாயிகளின் வாழ்க்கைத் தரம் உயர்த்தப்படும் பொருட்டு முக்கிய வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்படல் வேண்டும். அதாவது கட்டுக்கரைக் குளத்தின் வான் 2 அடி உயர்த்தப்பட வேண்டும். இதன் மூலம் குளத்தின் தண்ணீர் கொள்ளளவு அதிகரிக்கப்படும்.

கட்டுக்கரைக் குளத்துக்குத் தண்ணீர்வரும் உள்ளீட்டு வாய்க்கால் 18 கிலோ மீற்றர் நீளத்துக்கு அகலமாக்கப்படுதல் வேண்டும். இதனால் தண்ணீர் விரயமின்றி விரைவாகக் குளத்தை வந்தடையும்.

கட்டுக்கரைக்குளத்தின் பிரதான பத்து வாய்க்கால்களுக்கும் இரு பக்கமும் தடுப்புச்சுவர் கட்டப்பட வேண்டும். இந்தக் குளத்தின் கீழ்வரும் வாய்க்கால்கள், ஊட்டல் குளங்களுக்கான கட்டுமான வேலைகளும் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.-என்றுள்ளது. (ஐ-112)




பொன்.வேணு கிருஷ்ணா


**சுதந்திர பிரகடனம் செய்தால் இராணுவ வழிமுறைகள் பயன்படுத்தி அது மறுஇணைப்பு செய்துகொள்ளப்படும்**

ஜனவரி மாதம் தாய்வான் ஜனாதிபதி தேர்தலில் சாய் இன் சொந்த வெற்றிக்கு ட்ரம்பும் பாராட்டியதுடன், சீனாவுக்கு ஒரு கூடுதல் அவமதிப்பினைத் தரும் விதமாக அவரது ஜனநாயக முற்போக்கு கட்சி (DPP) தாய்வானிய சுதந்திரம் குறித்துக் கவனமாக ஆதரிக்கின்றது என்றும் தெரிவித்தார். தாய்வான் சீனாவின் மாகாணம் என்பதிலிருந்து பிரிந்துபோக விரும்புவதாக பீஜிங் கருதுவதுடன், எப்போதாவது தாய்வான் முறைப்படியான சுதந்திரப் பிரகடனம் செய்தால் இராணுவ வழிமுறைகள் பயன்படுத்தி அது மறுஇணைப்பு செய்துகொள்ளப்படும் என்றும் அச்சுறுத்தியுள்ளது.

**மைக் பென்ஸ் - "அமெரிக்க நிபந்தனைகளின் அடிப்படையில் தான் இந்த உலகம் இணைக்கப்பட வேண்டும்"**

**ஜோன் போல்டன் - "அமெரிக்கா சீனாவுடனான உறவை கைவிட வேண்டும்"**




அமெரிக்க துணை ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள மைக் பென்ஸ் 04.12.2016இல் பேசுகையில், ட்ரம்பின் தொலைபேசி உரையாடல் ஒரு ''மரியாதை நிமித்தமான அழைப்பு''தான் என்று நியாயப்படுத்தினார், ஆனால் அது ''ஒரே சீனா'' கொள்கை மீதான முறிவிற்குச் சமிக்ஞை செய்கிறதா என்ற கேள்விக்கு விடையிறுப்பதை தவிர்த்தார். எனினும், அவர் ''உலகினை இணைக்கும் ஒரு விருப்பத்தைக் கொண்டுள்ள ஒரு ஜனாதிபதி ட்ரம்பினை நீங்கள் பார்க்கப்போகின்றீர்கள். ஆனால் அமெரிக்க நிபந்தனைகளின் அடிப்படையில்தான் இந்த உலகம் இணைக்கப்படவேண்டும்'' என்றும் குறிப்பிடுகிறார்.

ட்ரம்ப் நிர்வாகத்தின் அரசுத்துறை செயலருக்குப் போட்டியிடவுள்ள முன்னாள் அமெரிக்கத் தூதராக இருந்த ஐ.நா. ஜோன் போல்டன், அப்பட்டமாக பின்வருமாறு அறிவித்தார்: "அமெரிக்கா சீனாவுடனான உறவைக் கைவிட வேண்டும். தென் சீனக் கடல் பகுதிகள் மீது ஆக்ரோஷத் தன்மையிலான உரிமைகோரல்கள் என்ற வகையில், கடந்த பல ஆண்டுகளாக சீனா ஆக்ரோஷத்தையே உருவாக்கி வந்துள்ளது. யாருடன் நாம் பேசலாம் என்று முடிவெடுக்க பீஜிங்கில் யாரும் இல்லை.

ட்ரம்புடனான தொலைபேசி அழைப்பு வேண்டுமென்றே திட்டமிடப்பட்ட மற்றும் ஆத்திரமூட்டலாக இருந்தது என்பதும், அவரது நிர்வாகம் சீனாவை குறைமதிப்பிற்கு உட்படுத்துவதற்கு தன்னிடமுள்ள சகலவழி முறைகளையும் பயன்படுத்தும், மேலும் ஆசியா மற்றும் உலகம் முழுவதிலும் அமெரிக்க ஆதிக்கத்தை தக்கவைத்துக் கொள்ளும் வகையில் பீஜிங்கிற்கு அறிவிக்க விரும்பும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது ஆகியவையே போல்டனின் கருத்துக்களில் உள்ள தெளிவான அறிகுறி ஆகும். அமெரிக்கத் தேர்தல் பிரச்சாரத்தின்போது, ட்ரம்ப், சீனாவை ஒரு நாணய மோசடியாளர் என்று அவர் முத்திரை குத்தப் போவதாகவும், ஒரு வர்த்தகப் போரைத் தூண்டும் ஒரு நடவடிக்கையாக சீனப் பொருள்கள் மீது 45 சதவிகிதம் காப்பு வரி சுமத்தப்படும் என்றும் அறிவித்தார்.

கடந்த ஐந்து ஆண்டுகளாக, ஒபாமா நிர்வாகத்தின் ''ஆசியாவை நோக்கிய முன்னெடுப்பு'' கொள்கையானது, தென்சீனக் கடல் பகுதி தொடர்பானது உட்பட சீனாவை நோக்கிய ஓர் இராஜதந்திர மோதல் நிலைப்பாட்டை உள்ளடக்கியிருந்ததுடன், மேலும் சீனா உடனான ஒரு போர் தயாரிப்புக்கு ஆசியாவில் ஒரு பெரும் இராணுவ கட்டியெழுப்புதலை உருவாக்குவதிலும் ஈடுபட்டுவந்தது. தென் சீனக் கடல் பகுதியில் சீனாவின் உரிமைகோருதல்களுக்கு ஜனாதிபதி பராக் ஒபாமா இன்னும் ஆக்ரோஷமான சவாலாக இல்லை என்று முந்தைய ஜோர்ஜ் W. புஷ் இன் நிர்வாகத்தில் மிகுந்த இராணுவவாத அதிகாரிகளுள் ஒருவரான போல்டன் போன்ற நபர்கள் கடுமையாக விமர்சித்து வருகின்றனர்.

**தாய்வான் உடன் இணைந்து இயங்குவதற்கான ஒரு புதிய மூலோபாயம்பற்றி ட்ரம்பின் ஆலோசகர்கள் மத்தியில் இருந்த பல மாதகால அமைதியான ஏற்பாடுகள்**

04.12.2016 ஞாயிறன்று வொஷிங்டன் போஸ்ட் கட்டுரை, அந்த தொலைபேசிப் பேச்சுக்கள் ஒரு திட்டமிடப்பட்ட ஆத்திரமூட்டும் நடவடிக்கையாகவே இருந்தது என்று உறுதிசெய்தது. ''ட்ரம்ப் குடியரசுக் கட்சி ஜனாதிபதி வேட்பாளராவதற்கு முன்னரே ஆரம்பிக்கப்பட்டதான தாய்வான் உடன் இணைந்து இயங்குவதற்கான ஒரு புதிய மூலோபாயம் பற்றி ட்ரம்பின் ஆலோசகர்கள் மத்தியில் இருந்த பல மாதகால அமைதியான ஏற்பாடுகள் மற்றும் கலந்துரையாடல்களின் விளைவாகவே இந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தொடர்பு இருந்தது,'' என்றும் இது தெரிவித்தது.


**ஒபாமா நிர்வாகம் கடந்த ஆண்டு தாய்வானுக்கு ஆயுத விற்பனை பற்றி அறிவித்ததன் மூலம் பீஜிங்கில் இருந்து ஓர் ஆத்திரமூட்டும் எதிர்விளைவைத் தூண்டிவிட்டது.**



ட்ரம்புடனான தொலைபேசி உரையாடல் குறித்து முன்கூட்டியே வெள்ளை மாளிகைக்கு தகவல் தரப்படாத நிலையில், ''ஒரு சீனா'' கொள்கையில் அங்கு ''மாற்றம் இல்லை'' என்பதை அது வலியுறுத்தி விடையிறுப்பு செய்தது. ''நமது அடிப்படை நலன்கள் அமைதியான மற்றும் நிலையான இருதரப்பு உறவுகளில் உள்ளது (சீனாவுக்கும், தாய்வானுக்கும் இடையில்),'' என்று வெள்ளை மாளிகை செய்தித் தொடர்பாளர் நெட் ப்ரைஸ் அறிவித்தார். ஒபாமா நிர்வாகம் கடந்த ஆண்டு தாய்வானுக்கு, இரண்டு போர்க் கப்பல்கள், கவச வாகன எதிர்ப்பு ஏவுகணைகள் (antitank missiles), கண்காணிப்பு உபகரணங்கள் உட்பட 1.8 பில்லியன் டொலர் மதிப்பிலான ஆயுத விற்பனை பற்றி அறிவித்ததன் மூலம் பீஜிங்கில் இருந்து ஓர் ஆத்திரமூட்டும் எதிர்விளைவைத் தூண்டி விட்டது.

**கடுமையான வெளியுறவுக் கொள்கையைக் குறிப்பாக சீனாவை நோக்கி தொடர முனைவதன் மற்றோர் அடையாளமாக உள்ளது**

தாய்வான் ஜனாதிபதியுடன் ஒரு தொலைபேசி தொடர்பு மேற்கொள்வதற்கான பரிந்துரைப்பு பற்றி அமெரிக்க வெளிவிவகாரத்துறையின் ஆலோசனை எதனையும் ட்ரம்ப் வெளிப்படையாக பெற்றுக்கொள்ளவில்லை, ஆனால் அதற்குப் பதிலாக அவரது சொந்த ஆலோசகர்களை நம்பி இருக்கிறார். வெளிவிவகாரத்துறையை ஒதுக்கிவிடுவது ட்ரம்ப் கடந்தகாலத்துடன் முறித்துக்கொண்டு இன்னும் ஒரு கடுமையான வெளியுறவு கொள்கையை குறிப்பாகச் சீனாவை நோக்கித் தொடர முனைவதன் மற்றோர் அடையாளமாக உள்ளது.




சாய் உடனான ட்ரம்பின் தொலைபேசி கலந்துரையாடலுக்குச் சீன அரசாங்கம் கவனத்துடன் விடையிறுத்தது. ஆனால் அது, அதுபற்றி வியப்படைந்திருந்தது. அமெரிக்காவுடன் ஒரு முறையான எதிர்ப்பு எதனையும் பதிவு செய்யவில்லை, மேலும் ''உலகில் ஒரே ஒரு சீனா தான் உள்ளது'' என்று சீன வெளியுறவு அமைச்சகம் 03.12.2016 சனிக்கிழமை ஒரு அறிக்கை வெளியிட்டது. ட்ரம்பை நோக்கிய ஒரு கூரிய கருத்தில், ''ஒட்டு மொத்த சீன - அமெரிக்க உறவுகளில் தேவையற்ற தலையீடுகள் தவிர்க்கப்படுவதற்காக தாய்வான் தொடர்பான பிரச்சனைகளை எச்சரிக்கையுடனும், கவனத்துடனும் கையாள ''சம்பந்தப்பட்ட தரப்பினரை'' அது வலியுறுத்தியது.

**ட்ரம்ப் குழுவின் ''அனுபவமின்மை'' மற்றும் ''சரியான புரிந்துணர்வு குறைவு''**

04.12.2016 ஞாயிறன்று அரசுக்கு சொந்தமான China Daily பத்திரிகையின் ஒரு தலையங்கம், தொலைபேசி அழைப்பு ஒரு தவறான நிகழ்வு என்றும், சீன-அமெரிக்க மற்றும் இருதரப்பு உறவுகள் குறித்து ட்ரம்ப் குழுவின் ''அனுபவமின்மை'' மற்றும் ''சரியான புரிந்துணர்வுக் குறைவு'' என்பதன் ஒரு அடையாளமாக இருந்தது என்று கருத்து தெரிவித்தது. தொலைபேசி அழைப்பு யாதொரு பலனையும் அளிக்காது. ஆனால் ''அவநம்பிக்கையான பெருமையை'' தான் அளிக்கும் என்று இது சாயினை இன்னும் கடுமையாக விமர்சித்தது. தாய்வான் ஜனாதிபதியின் புகழ் வீழ்ச்சி கண்டுள்ளதைச் சுட்டிக்காட்டி, இந்த தலையங்கம்: ''அவரது மோசமான செயற்பாட்டிலிருந்து பொது மக்களின் கண்டனங்களைத் திசை திருப்ப அவர் முயற்சித்தால், அவரால் வெற்றியடைய முடியாது.'' என்றும் மேலும் தெரிவித்தது.

**சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங் முன்னாள் அமெரிக்க வெளியுறவுத்துறை செயலர் ஹென்றி கிஸ்ஸிங்கருடன் பேசினார்**

எவ்வாறாயினும், திரைக்குப் பின்னால், பதவிக்கு வரவிருக்கின்ற ட்ரம்பின் நிர்வாகம் தொடர்பாக சீன ஆளும் வட்டங்களில் ஆழ்ந்த கவலைகளே நிலவுகின்றன. சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங் 02.12.2016 வெள்ளிக்கிழமை அன்று முன்னாள் அமெரிக்க வெளியுறவுத்துறை செயலர் ஹென்றி கிஸ்ஸிங்கருடன் பேசினார். 1970 களில் இவர்தான் சீன-அமெரிக்க சமரசத்திற்கு காரணகர்த்தாவாக இருந்தார். ஜி, ''பதவி மாற்றமடையும் ஒருகாலகட்டத்தில் என்ன நடக்கிறது?,'' என்று ''நாங்கள் மிக நெருக்கமாக நிலைமையை அவதானித்து வருகிறோம்'' என்றும் கிஸ்ஸிங்கரிடம் அறிவித்தார்.

**சீன விமர்சகர்கள் ஏற்கனவே பழிக்குப் பழி வாங்குவதற்கு ஆலோசனை வழங்குகின்றனர்**

சீன விமர்சகர்கள் ஏற்கனவே பழிக்குப் பழி வாங்குவதற்கு ஆலோசனை வழங்குகின்றனர். Fudan பல்கலைக்கழகத்தில் சர்வதேச உறவுகள் தொடர்பான ஒரு பேராசிரியர் ஷென் டிங்லி, சாய் உடன் தொடர்புகள் ட்ரம்பின் பதவியேற்பிற்கு பின்னரும் தொடருமானால், சீன அமெரிக்கா உடனான இராஜதந்திர உறவுகளைத்துண்டிக்கவேண்டும், மேலும் ஈரான், வட கொரியா மற்றும் காலநிலை மாற்றம் போன்ற பிரச்சினைகள் மீது அமெரிக்காவுடன் கொண்டிருந்த ஒத்துழைப்பு முடிவுகட்டப்படும் என்று நியூயோர்க் டைம்ஸுக்கு தெரிவித்தார்.

தாய்வான் ஜனாதிபதி உடனான ட்ரம்பின் தொலைபேசி உரையாடல் பதவிக்குவரவுள்ள அமெரிக்க நிர்வாகம் உலக அரசியலுக்குள் கொண்டுவரவுள்ள ஆழ்ந்த நிச்சயமற்ற தன்மைக்கு மற்றோர் அடையாளமாக இருக்கின்றது. உலகின் மிகுந்த அபாயகரமான வெடிப்பு புள்ளிகளுள் ஒன்றில் நீண்டகாலமாகவுள்ள இராஜதந்திர உடன்படிக்கைகளை பொறுப்பற்ற முறையில் கிழித்துப்போட தயாராக உள்ள அவரது விருப்பம், அணுஆயுத அரசுகளுக்கு இடையில் அபாயம் அதிகரித்துவருவது குறித்த தெளிவான எச்சரிக்கையாகும்.

(கேள்வி தொடரும்...)

காலைக்கதிர்
Kalaikkathir





# தமிழ்த் தேசிய எழுச்சி



ஈழத் தமிழினத்தின் தேச விடுதலை பற்றி சிந்தனைப் புரட்சியை முன்னெடுத்தவர்களுள் விடுதலைப் புலிகளின் தத்துவ ஆசிரியரான அன்ரன் பாலசிங்கம் மிக முக்கிய மானவர். அரசியல் ஞானம்மிக்க தத்துவ ஆசிரியர்.

ஈழத் தமிழினத்தின் உயரிய வரலாற்றுப் பதிவு ஏடான 'போரும் சமாதானமும்' என்ற நூலை அவர் படைத்திருக்கின்றார். இலங்கைத் தீவில் தமிழ்த் தேசிய எழுச்சி பற்றி அந்நூலில் அவர் குறிப்பிடும் நுட்பமான – நுண்ணியமான – விடயங்களை இக்கட்டுரைத் தொடரில் நாம் அறிந்து கொள்ளலாம்.




03

## தமிழருக்கு எதிரான அரச ஒடுக்குமுறை

சிங்களப் பெரும்பான்மையினரிடம் அரசியல் அதிகாரம் கைமாறியதை அடுத்து சிங்களப் பேரினவாதம் மேலாண்மை பெற்றது. இதனால் தமிழர்களுக்கு எதிரான அரச அடக்குமுறை குரூரமான வன்முறை வடிவம் எடுத்தது. இந்த அரச அடக்கு முறையானது அரை நூற்றாண்டு காலத்துக்கு மேலான நீண்ட வரலாற்றைக் கொண்டது. இலங்கை சுதந்திரம் அடைந்ததை அடுத்து மாறி மாறி ஆட்சி பீடம் ஏறிய சகல சிங்கள அரசுகளும் இந்த ஒடுக்குமுறைக் கொள்கையையே கடைப்பிடித்தன. இந்த ஒடுக்குமுறைக் கொள்கையில் தமிழின ஒழிப்புத் திட்டமும் அடங்கியுள்ளது. அதாவது, தமிழரின் தேசிய வாழ்வுக்கு ஆதாரமான அத்தியாவசிய அடித்தளங்களை படிப்படியாகத் தகர்த்துவிடும் நாசகாரத் திட்டமாகவும் இந்த ஒடுக்குமுறை அமையப்பெற்றது. ஒன்றுபட்ட ஒரு தேசிய இனக் கட்டமைப்பாகத் தமிழ் மக்கள் தழைத்து நிற்பதற்கு என்னென்ன அவசியமோ அவற்றை எல்லாம் பல்வேறு மட்டங்களில் தாக்கியழிப்பதை இவ்வொடுக்குமுறை இலக்காகக் கொண்டது. எனவே, இந்த இனவழிப்பு அடக்குமுறை பல்முனைத் தாக்குதலாக வடிவெடுத்தது. தமிழரின் இருப்புக்கே ஆதாரமான மொழி உரிமை முதலில் பறித்தெடுக்கப்பட்டது. அதனையடுத்துக் கல்வி உரிமைக்கும், வேலைவாய்ப்பு உரிமைக்கும் ஆப்பு வைக்கப்பட்டது. அவர்களுடைய பாரம்பரிய நிலங்கள் மீதான சொத்துரிமையையும் இழக்கச் செய்தது. அவர்களது சமய, பண்பாட்டு வாழ்வுக்கும் ஊறு விழைத்தது. இறுதியாக தமிழர்களது உயிர்வாழும் உரிமைக்கே பங்கம் ஏற்படுத்தும் வகையில் ஒடுக்குமுறையை ஏவிவிட்டது. தமிழ் மக்கள் ஓர் இனமாக ஒருங்கிணைந்து வாழ்வதற்கும், ஓர் இனமாகத் தம்மை அடையாளப்படுத்துவதற்கும் அவசியமான அடித்தளத்தையே அரச ஒடுக்குமுறை தாக்கியது. இத்தமிழின ஒழிப்புத் திட்டத்தின் முக்கிய அங்கமாக சிங்கள அரசால் திட்டமிட்டு செயற்படுத்தப்பட்ட இனக் கலவரங்கள் காலத்துக்குக் காலம் தலைதூக்கின. இதன் விளைவாகப் பெருந்தொகையான தமிழ்மக்கள் கொன்றொழிக்கப்பட்டார்கள்.பெருந்தொகைத் தமிழ்ச் சொத்துக்கள் நிர்மூலமாக்கப்பட்டன. நாட்டுக்குச் சுதந்திரம் கிடைத்தவுடன் சிறீலங்கா நாடாளுமன்றம் பெரும்பான்மைக் கொடுங்கோண்மையின் கருவாகியது. அங்கு இனவாதம் அரசோச்சியது. சிறுபான்மை இனங்களுக்கு எதிரான அடக்குமுறைச் சட்டங்கள் அங்கு யாக்கப்பட்டன. கொடிய சிங்கள இனவாதத் தாக்குதலில் மலையகத் தோட்டத் தொழிலாளர்களே முதல் பலியாகி வீழ்ந்தார்கள். இந்தத் தீவின் சுபீட்சத்துக்காக ஒரு நூற்றாண்டுக்கு மேலாகப் பாடுபட்ட பத்து லட்சம் தமிழ் மக்களின் வாக்குரிமை பறிக்கப்பட்டது. இலங்கை அரசியல் வரலாற்றில் மிகவும் அநீதியாகக் கருதப்படும் குடியுரிமைச் சட்டம் அந்தக் கொடுமையைப் புரிந்தது. இதன் மூலம், மலையகத் தமிழ் மக்களது அடிப்படை மனித உரிமை பறிக்கப்பட்டது. நாடற்றோர் என்ற இழி நிலைக்கு இவர்கள் தரம் இறக்கப்பட்டார்கள். அரசியலில் பங்கெடுக்கும் உரிமை பறிக்கப்பட்ட நிலையில், பெருந்தொகைத் தமிழ்த் தொழிலாளர்களுக்கு அரச நாடாளுமன்றக் கதவுகள் மூடப்பட்டன.

குடியுரிமைச் சட்டம் நிறைவேற்றப்படுமுன், பெருந்தோட்டத் தமிழ்த் தொழிலாளரைப் பிரதிநிதித்துவப் படுத்த ஏழு உறுப்பினர்கள் நாடாளுமன்றத்தில் இருந்தார்கள். அடுத்து வந்த பொதுத் தேர்தல் 1952இல் நடந்தபோது இந்தக் குடியுரிமைச் சட்டத்தின் விளைவாக ஒரு நாடாளுமன்ற உறுப்பினரைக்கூட இந்த மக்களால் தெரிவு செய்ய இயலவில்லை.

குடியுரிமைச் சட்டம் 1948 இலும் இந்திய - பாகிஸ்தானியச் சட்டம் 1949 இலும் நிறைவேற்றப்பட்டன. வழித்தோன்றல்களும் குறித்த காலம் வசித்தவர்களும் பெறக்கூடிய குடியுரிமை தொடர்பாக, மிகக் கடுமையான கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன. பத்து லட்சத்திற்கு கூடுதலானோரிடையே இருந்து ஏறத்தாழ 1 லட்சத்து30 ஆயிரம் மக்கள் மட்டுமே குடியுரிமை பெறத்தக்க வகையில் இந்தச் சட்டங்கள் கடுமையாக நடைமுறைப்படுத்தப்பட்டன. கேடுகெட்ட இச் சட்டங்களின் மொத்த விளைவுகள் மிக பாதகமானவையாக அமைந்தன. அவை இத் தொழிலாள மக்களின் வாழ்க்கை நிலைமைகளை மோசமாக்கின. நாடற்ற நிலைக்குத் தள்ளப்பட்ட ஏறத்தாழ பத்து லட்சம் மக்கள், உள்ளூராட்சித் தேர்தலிலோ, தேசியத் தேர்தலிலோ பங்கெடுக்க முடியவில்லை. அரசுத் துறைகளிலும் தனியார் துறையிலும் இவர்களுக்கு வேலைவாய்ப்பு மறுக்கப்பட்டது. நிலம் வாங்கும் உரிமை மறுக்கப்பட்டது. எவ்வகை வர்த்தகத்தில் ஈடுபடும் உரிமையும் மறுக்கப்பட்டது. இத்தகைய நாடற்ற நிலை இந்தத் தொழிலாளர் சமுதாயத்தை, அதுவும் நாட்டின் முதன்மையான பாட்டாளி வர்க்கமாகத் திகழ்ந்த ஒரு சமுதாயத்தை, உரிமை பறிக்கப்பட்ட, மனிதம் சாகடிக்கப்பட்ட மக்களாக ஆக்கியது. இதனால் இம் மக்கள் இழிவு படுத்தப்பட்டவர்களாக விரக்தியடைந்து, நம்பிக்கையிழந்து, தங்கள் பெருந்தோட்ட இருட்டறைக்குள் முடங்கி வாழ நிர்ப்பந்திக்கப்பட்டார்கள்.

தமிழ் மக்களின் இன அடையாளத்தை அழித்து ஒழிப்பதற்கு திட்டமிடப்பட்ட ஒடுக்கு முறையின் மிகக் கொடூர வடிவமாக, அரச உதவியோடு தீவீவிரமாக நடத்தப்பட்ட சிங்களக் குடியேற்றங்களைக் குறிப்பிடலாம். சுதந்திரம் வழங்கப்பட்டவுடன் தொடக்கப்பட்ட இந்த முயற்சி, தமிழ்ப் பிரதேசத்தில் ஏறத்தாழ மூவாயிரம் சதுரமைல் பரப்பை ஏற்கனவே விழுங்கிவிட்டது. நிலமற்ற பெருந்தொகைத் தமிழ் விவசாயிகள்,தாம் பயிரிடுவதற்கென ஒரு துண்டு காணிக்காக ஏங்கி நிற்கும் அதே தமிழ்ப் பிரதேச நிலப் பகுதிகளில், அரசின் உதவியோடும் ஏவுதலோடும் ஆயிரமாயிரம் சிங்கள மக்கள் அடாத்தாகக் குடியமர்ந்தார்கள். தமிழ் மக்களை, அவர்களுடைய பாரம்பரிய நிலத்திலேயே சிறுபான்மையினராக்கி சனத்தொகை விகிதாசாரத்தைச் சிதைப்பதாகவே இந்தக் குடியேற்ற முயற்சி அமைந்தது. மிக மோசமாகப் பாதிக்கப்பட்ட பகுதிகள் கிழக்கு மாநிலத்திலேயே உள்ளன. கல்ஓயா,மதுறு ஓயா என்ற நதிகள் தொடர்பான பாரிய திட்டங்கள், மட்டக்களப்பு மாவட்ட முஸ்லிம் மக்களின் பெருந்தொகைக் காணிகளைப் பிடுங்கிக் கொண்டன. அல்லை, கந்தளாய் சிங்களக் குடியேற்றத் திட்டங்களும் யன் ஓயா நதித் திட்டமும் திருகோணமலைப் பகுதியை விழுங்கின. தமிழ்ப் பாரம்பரிய நிலத்தை வல்வந்தமாகப் பறித்தொடுக்கும் இந்தத் தொடர்ச்சியான நடவடிக்கை, சிங்கள ஆளும் வர்க்கத்தினருடைய இனவெறிக் கொள்கையின் குரூரத் தன்மையை அம்பலப்படுத்துகிறது.

அரச ஒடுக்கு முறையானது, மொழி, கல்வி, வேலை வாய்ப்பு ஆகிய துறைகளுக்குள்ளும் ஊடுருவியது. பண்டார நாயக்கா தலைமை தாங்கிய ''சிங்களம் மட்டும்'' இயக்கம், 1956இல் அவரை அரசியல் அதிகாரத்துக்குக் கொண்டு வந்தது. நாடாளுமன்றத்தில் அவர் நிறைவேற்றிய முதல் சட்டம், தமிழ் மொழிக்கு இருந்த உத்தியோக தகைமையையும் சம அந்தஸ்து நிலையையும் முடிவுக்குக் கொண்டு வந்து, நாட்டின் ஒரே ஒரு உத்தியோக மொழியாகச் சிங்களத்தை நிலைப்படுத்தியது. அரச நிர்வாக சேவையில் பணிபுரிபவர்கள் சிங்களத்தில் தகைமை பெற்றிருக்க வேண்டும் என்று ''சிங்களம் மட்டும் சட்டம்'' நிர்ப்பந்தித்தது. தமிழ் அரச ஊழியர்களுக்கு ஊதிய உயர்வும் பதவி உயர்வும் மறுக்கப்பட்டு, சிங்கள மொழி கற்காவிட்டால் பதவியில் இருந்து விலக வேண்டும் என்பது விதியாயிற்று. அரச சேவை வேலை வாய்ப்பு வசதிகளுக்கான கதவுகள், தமிழரைப் பொறுத்தவரையில் அடைத்து மூடப்பட்டன.

அரச ஒடுக்கு முறை மிக ஆழமாகத் தாக்கியது கல்வித் துறையையே ஆகும். இளம் தமிழ்ச் சமுதாயத்தில் பெரும்பாலானோருக்கு உயர் கல்வி, வேலை வாய்ப்பு ஆகியவற்றுக்கான கதவுகள் அடைக்கப்பட்டன. தனியாகப் பிரித்து ஒதுக்கும் கொடிய ''தரப்படுத்தல்''முறை 1970இல் அறிமுகப்படுத்தப்பட்டது. பல்கலைக்கழக அனுமதியைப் பெறுவதற்குச் சிங்கள மாணவரை விடத் தமிழ் மாணவர் கூடுதலான புள்ளிகளைப் பெற வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு உள்ளாக்கப்பட்டனர். குறைவான தேர்வுத் தரங்களோடு சிங்கள மாணவர் எளிதாக பல்கலைக்கழகம் புகுந்தனர். இந்தப் பிரித்தொதுக்கும் முறை, பல்கலைக்கழகங்களுக்குச் செல்லும் தமிழ் மாணவர்களின் எண்ணிக்கையைப் பாரதூரமாகக் குறைத்தது. அவர்களுடைய உயர் கல்வி வாய்ப்புக்களையும் தடைப்படுத்தியது.

அரச ஒடுக்கு முறையின் இன்னொரு குரூரப் பரிமாணத்தைப் பொருளாதாரத் துறையில் காணலாம். தமிழ் மக்களின் பொருளாதார வளர்ச்சி குரல்வளையிலேயே நெரிக்கப்பட்டது. சுதந்திரத்தை உடனடுத்த காலங்களில் கட்டப்பட்ட அரசுக்குச் சொந்தமான சில தொழிற்சாலைகளைத் தவிர, ஏறத்தாழ 50 ஆண்டுகளாகத் தேசிய அபிவிருத்தித் திட்டங்களில் தமிழ்ப் பகுதிகள் முற்றாகப் புறக்கணிக்கப்பட்டன. பாரிய அபிவிருத்தித் திட்டங்களோடு சிங்களத் தேசம் செழித்துக் கொழிக்க, ''வேண்டா நிலமாக''தமிழ்த் தேசம் நிராகரிக்கப்பட்டு, பொருளாதாரப் புறக்கணிப்பால் வறண்டு கிடந்தது.

நாட்டிலே அவ்வப்போது தமிழ் மக்களுக்கு எதிராக வெடித்த இனக் கலவரங்களை, இரண்டு இனங்களுக்கும் இடையே நிலவிய இனப்பகைமை உணர்வால் தாமதமாகக் கிளர்ந்த வன்செயல்களாகக் கருதக்கூடாது. தமிழ் மக்களுக்கு எதிரான வன்செயல் தாக்குதல்களில் மிகக் கொடிய வெறியாட்டங்கள் அனைத்துமே சிங்கள ஆட்சியாளர்களால் இன அழிப்பு இலக்கின் அம்சமாகத் திட்டம் தீட்டப்பட்டு ஏவப்பட்டவையாகும்.

இலங்கையிலே தமிழ் மக்களுக்கு எதிரான வன்முறைக் கலவரங்கள் 1956, 1958, 1961, 1974, 1979,

> “தமிழ் மக்களின் இன அடையாளத்தை அழித்து ஒழிப்பதற்கு திட்டமிடப் பட்ட ஒடுக்குமுறையின் மிகக்கொடூர வடிவமாக, அரச உதவியோடு தீவிரமாக நடத்தப்பட்ட சிங்களக் குடியேற்றங்களைக் குறிப்பிடலாம். சுதந்திரம் வழங்கப் பட்டவுடன் தொடக்கப்பட்ட இந்த முயற்சி, தமிழ்ப் பிரதேசத்தில் ஏறத்தாழ மூவாயிரம் சதுரமைல் பரப்பை ஏற்கனவே விழுங்கிவிட்டது.”

1981 ஆகிய ஆண்டுகளிலும் 1983 ஜூலையிலும் நடத்தப்பட்டன. இவ் இனவெறித் தாண்டவங்களில் பெண்கள், பிள்ளைகள் அடங்கலாக ஆயிரம் ஆயிரம் தமிழ் மக்கள் இரக்கமின்றி, மிகக் குரூரமான முறையில் படுகொலை செய்யப்பட்டார்கள். அவர்களுடைய பலகோடி பெறுமதியான சொத்துக்கள் அழித்தொழிக்கப்பட்டன. ஆயிரம் ஆயிரம் மக்கள் அகதிகள் ஆக்கப்பட்டார்கள். தீயிடல், பாலியல் வன்தாக்குதல், கும்பல் கும்பலாக மக்களைப் படுகொலை செய்தல் போன்ற வன்முறை அடாவடி வெறியாட்டங்களில் ஈடுபட்ட காடையருடனும் பாதகருடனும் அரச ஆயுதப் படையினரும் ஒன்று சேர்ந்து கொடுமை புரிந்தனர்.

இந்தப் பல்பரிமாண அரச ஒடுக்குமுறையின் ஒட்டு மொத்தப் பாதிப்பு பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தியது. இது தமிழ் மக்களின் உயிர் வாழ்விற்கே அச்சுறுத்தலாக அமைந்தது. இன முரண்பாட்டை மேலும் கூர்மைப்படுத்தியது. இரு தேசங்கள் மத்தியில் நல்லிணக்கமும், சமரச் சக வாழ்வும் ஏற்படுவதை சாத்தியமற்றதாக ஆக்கியது. தமிழ் மக்களிடையே தீவீரப் போக்கையும் போராட்ட உணர்வையும் வலுப்படுத்தியது. தமிழரின் ஆயுதம் தரித்த எதிர்ப்பு இயக்கம் தோற்றம் கொள்வதற்கான புறநிலையையும் உருவாக்கியது.ஒட்டு மொத்தத்தில் அரச ஒடுக்கு முறையானது பிரிந்து சென்று தனியரசு அமைக்கும் தமிழரின் சுய நிர்ணய உரிமைப் போராட்டத்துக்கு வழிசமைத்தது.

(தொடரும்...)

## 'சின்ன ரோம்' இல் நத்தார் வியாபாரம் அமோகம்



கொழும்பு, டிசெ.22

'சின்ன ரோம்' என்று அழைக்கப்படும் நீர்கொழும்பு நகரில் நத்தார் வியாபாரம் களை கட்டியுள்ளது.

நகர மத்தியில் வர்த்தகக் கடைகள் அமைந்துள்ள வீதிகள், வாராந்தச் சந்தைகள், வார இறுதிச் சந்தைகளில் பெரும் எண்ணிக்கையான பொது மக்கள் பொருள்களைக் கொள்வனவு செய்வதில் ஈடுபட்டுள்ளனர்.

வீதியோரங்களில் தற்காலிகக் கடைகள் அமைக்கப்பட்டுள்ளன.

இந்தக் கடைகள் பலவற்றில் மலிவு விற்பனைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (எ)

## மதுபானசாலையில் தீ விபத்து!

கொழும்பு, டிசெ.22

ஹங்குரன்கெத்த, ரிகில்லகஸ்கட பிரதேசத்தில் அமைந்துள்ள மதுபானசாலை ஒன்றில், கடந்த ஞாயிறு இரவு திடீர் தீ விபத்து ஏற்பட்டது. இதனால் மதுபானசாலைக்குள் இருந்த பொருள்கள் முற்றாக எரிந்து நாசமாகின.

இரவு 10 மணியளவில் ஏற்பட்ட தீ, பிரதேச மக்களது உதவியுடன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது. தீயினால், எவ்வித உயிராபத்தும் ஏற்படவில்லை என்றும் ஏற்பட்டுள்ள பொருள் சேதம் தொடர்பாக மதிப்பீடு இடம் பெற்றுவருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (எ)

## தினசரி ராசி பலன் 22.12.2016

| | |
|---|---|
| சுபநேரம் | : காலை : 10.45 – 11.45 |
| | மாலை : 12.15 – 1.15 |
| ராகு காலம் | : 1.30 – 3.00 |
| குளிகன் | : 9.00 – 10.30 |
| எமகண்டம் | : 6.00 – 7.30 |

ஜோதிட ஜோதி P.ராமன் பட்டாச்சாரியார்
ஸ்ரீ ஜெய மாருதி ஜோதிட நிலையம்
கும்பகோணம், தமிழ்நாடு.
(maruthi_jaya2003@yahoo.co.in)

மேல் நோக்கு நாள்

**மேஷம்:** அச்சம் - எடுத்த காரியங்களில் தளர்வு கண்டு மனம் சோர்வடைவீர்கள்.

**ரிஷபம்:** வெற்றி - செய்யும் காரியங்களில் மேன்மை தந்து வெற்றி நல்கும்.

**மிதுனம்:** பரிசு - எதிர்பாராத பரிசுப் பொருள் சேர்க்கை தரும். நீண்ட நாளைய நண்பர்களைச் சந்திக்கும் நாள்.

**கடகம்:** எதிர்ப்பு - எடுக்கும் காரியங்களில் மறைமுக எதிர்ப்பு உள்ள நாள்.

**சிம்மம்:** புகழ் - செய்யும் காரியங்களில் மேன்மை தந்து புகழ் நல்கும்.

**கன்னி:** நட்பு - நண்பர்களின் அரவணைப்புக் கிடைத்து நலம் ஏற்படும் நன்னாள்.

**துலாம்:** பெருமை - இன்று திடீர் புகழாரம் உங்கள் வாசல் நாடி வரும் நாள்.

**விருச்சிகம்:** குழப்பம் - மனதின் எண்ணங்கள் தடுமாறும் ஆதலால் செயல்களில் சிறப்புகள் குறையும்.

**தனுசு:** நற்செயல் - எண்ணங்களும், செயல்களும் வெற்றியையே தரும் நாள்.

**மகரம்:** இன்பம் - நினைத்த காரியங்கள் நல்ல முறையில் சிறப்புக்கள் பெறும் நன்னாள்.

**கும்பம்:** சோர்வு - உழைப்பினால் மனதாலும், உடலாலும் சோர்வு ஏற்படும்.

**மீனம்:** தாமதம் - இன்று உங்களுக்கு சந்திராஷ்டமம் என்பதால் எண்ணிய எண்ணங்கள் யாவும் தாமதமாகவே நிறைவேறும்.
சந்திராஷ்டமம் : பூரட்டாதி 4ஆம் பாதம், உத்திரட்டாதி

# திருத்தப் பணிகளுக்காக ஏழரை மணிநேரம் கட்டுநாயக்கா விமான நிலையம் மூடப்படும்!

*ஜனவரி 6 முதல் ஏப்ரல் 6 வரை மூன்று மாதங்களுக்கு!!*

கொழும்பு, டிசெ.22

இலங்கையின் சர்வதேச விமான நிலையமான, கட்டுநாயக்கா விமான நிலையத்தின் அனைத்துச் செயற்பாடுகளும், எதிர்வரும் ஜனவரி 6 ஆம் திகதி தொடக்கம் ஏப்ரல் 6 ஆம் திகதி வரை, காலை 8 மணி தொடக்கம் பிற்பகல் 4.30 மணி வரை மூடப்படவுள்ளது.

கட்டுநாயக்க விமான நிலையத்தின் ஓடுபாதையில் விரிவாக்கப் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன. இதனால் மூன்று மாதங்களுக்கு நாளாந்தம், ஏழரை மணித்தியாலங்கள் விமான நிலையம் மூடப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் ஜனவரி 6 ஆம் திகதி தொடக்கம், ஏப்ரல் 6 ஆம் திகதி வரை, கட்டுநாயக்க விமான நிலையத்தின் பணிகள் மட்டுப்படுத்தப்படவுள்ளன.


கடந்த 3 தசாப்தங்களில் கட்டுநாயக்க விமான நிலையத்துக்குச் சுமார் 9 லட்சத்து 50 ஆயிரம் விமானங்கள் வந்து சென்றுள்ளன. எனினும் இங்கு ஒரே ஒரு ஓடுபாதை மாத்திரமே உள்ளது. இந்தக் காலப் பகுதியில் பெரிய ளவில் புனரமைப்புப் பணிகள் ஏதும் மேற்கொள்ளப்படவில்லை.

1980களின் நடுப்பகுதியில், அப்போதைய தேவை கருதி, வடிவமைக்கப்பட்ட ஓடுபாதையே இப்போதும் பயன்பாட்டில் உள்ளது. இதனால், ஓடுபாதை தற்போதைய தேவைகளைக் கருத்தில் கொண்டு புனரமைக்கப்பட்டு விரிவாக்கப்படவுள்ளது.

புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும் போது, விமான நிலையம் மூடப்படவுள்ளது.

இதனால், கட்டுநாயக்க விமான நிலையம் வழியாக சேவைகளை நடத்தும் அனைத்து விமான சேவை நிறுவனங்களையும், பிற்பகல் 4.30 மணிக்கும், காலை 8 மணிக்கும் இடையில் சேவைகளை மாற்றியமைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (எ)

# கழிவுகளை வீசுவதால் மாசடையும் சிவனொளிபாதமலைச் சுற்றாடல்



கொழும்பு, டிசெ.22

சிவனொளிபாத மலை பருவ கால யாத்திரைக்கு பல பாகங்களிலும் இருந்து வருகை தரும் யாத்திரிகர்கள் ஆங்காங்கே குப்பைகளை வீசுவதால் சூழல் மாசடைவதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

சிவனொளிபாதமலை பருவகால யாத்திரை ஆரம்பமாகியுள்ளது. இதனால் பல பாகங்களிலிருந்து உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு யாத்திரிகர்கள் வருகை தருகின்றனர்.

இதேவேளை அந்தப் பகுதியில் உள்ள சுற்றாடலைப் பாதுகாக்க வேண்டிய தேவைகளும் உள்ளன. சிவனொளிபாத மலைக்கு வரும் யாத்திரிகர்கள் பொலித்தீன், வெற்று பிளாஸ்டிக் போத்தல்கள் மற்றும் சுகாதாரத்துக்குச் சீர்கேடான குப்பைக் கழிவுகளைச் சிவனொளிபாதமலை வழியில் ஆங்காங்கே வீசப்படுகின்றன. இதனால் சூழல் மாசடைவதாக அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

இதன் காரணமாகப் பல்வேறுபட்ட சிரமங்களை எதிர்நோக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது. யாத்திரிகர்கள் ஏனையவர்களின் நலன்கருதி குப்பைகளை அந்தப் பகுதியில் வைக்கப்பட்டுள்ள குப்பைத் தொட்டிகளில் போடுமாறு சிவனொளி பாத மலையின் நாயக்க தேரர் பெங்கமுவே தம்மதின்ன மற்றும் அம்பகமுவ பிரதேச சபை அதிகாரிகள், நல்ல தண்ணி பொலிஸார் ஆகியோர் கோரிக்கை விடுக்கின்றனர்.

தற்போது யாத்திரிகர்களின் வருகை குறைவாக இருந்தாலும், இன்னும் சில நாள்களில் பெருந் தொகையான யாத்திரிகர்கள் வரும்போது சூழலைப் பாதுகாக்கும் வகையில் செயற்திட்டங்களை முன்னெடுப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (எ)

## வியாபாரிகள் 15 பேர் மீது வழக்கு

கொழும்பு, டிசெ.22

காலாவதியான உணவு வகைகளை விற்பனை செய்த 15 வியாபாரிகளுக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

ஆராச்சிகட்டுவ பிரதேசத்தில் உணவகங்கள் மற்றும் வியாபார நிலையங்களான 68 நிலையங்களில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளின் போதே அவை கண்டுபிடிக்கப்பட்டு இந்த வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

காலாவதியான உணவுப் பொருள்களை விற்பனை செய்தமை, தம்வசம் வைத்திருந்தமை, இறைச்சி மற்றும் சமைத்த உணவுப் பொருள்களை ஒரே குளிர்சாதனப் பெட்டியில் வைத்திருந்தமை போன்ற குற்றங்கள் காரணமாக அந்த வியாபாரிகளுக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டுள்ளதாக ஆராச்சிகட்டுவ சுகாதார மருத்துவ அதிகாரி யு. எஸ். குமார தெரிவித்தார். (எ)

## புத்தளத்தில் அதி நவீன கடற்கரைப் பூங்கா

புத்தளம், டிசெ.22

வடமேல் மாகாணத்திலேயே அதிநவீன கடற்கரைப் பூங்கா அமைக்கப்படவுள்ளது.

புத்தளம் நகரின் பொழுதுபோக்குத் திடலான கொழும்பு முகத்திடலுக்கு அருகாமையில் இந்த கடற்கரைப் பூங்கா அமைக்கப்படவுள்ளது. இதற்கான வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் புத்தளம் மாவட்ட அமைப்பாளர் ஏ.என்.எம். ஜெகுபர் மரிக்காரின் வேண்டுகோளின் பேரில் நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர் ரவூப் ஹக்கீம், இந்த கடற்கரைப் பூங்காவை அமைப்பதற்கென 5 கோடி ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளார். (எ)

## வாசகர் கருத்து மேடை



### யாழ்.சுகாதார வேலைத்திட்டங்கள் இராணுவ பொறியியல் பிரிவிடமா?

### மருத்துவத்துறையினர் அதிர்ச்சி

மலேரியா, காசநோய் மற்றும் எயிட்ஸ் நோய்களுக்கு எதிரான உலக சுகாதார நிதி உதவி மூலம் 5 வேலைத்திட்டங்களை இராணுவ பொறியியல் பிரிவால் மேற்கொள்ள வடக்கு மாகாண சுகாதார அதிகாரிகள் ஆவன செய்திருப்பது மருத்துவத் துறையினர் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

ஏனெனில் வடபகுதியின் காசநோய் வைத்தியசாலைக் கட்டடங்கள் மயிலிட்டியில் 1990 ஆம் ஆண்டிலிருந்தே இலங்கை இராணுவமே தன் வசம் வைத்து உள்ளது. அக்கட்டடங்கள் மீளவும் சுகாதார அமைச்சிடம் கையளிக்காது 2009 ஆம் ஆண்டுக்குப் பின்பே ஆளுநர் சந்திரசிறி மேற்பார்வையில் இடித்துத்தரை மட்டமாக்கப்பட்டன.

மயிலிட்டி வைத்தியசாலை இராணுவ ஆக்கிரமிப்பில் இருந்து மீட்கும் நடவடிக்கை விழலுக்கு இறைத்த நீராகிய நிலையில் காசநோய் தொடர்பான உலக சுகாதார நிதியத்தையும் இராணுவத்தினர் மூலம் கையாள்வது தவறான அணுகுமுறையாகும். அன்றேல் வடக்கு மாகாண சுகாதார நிர்வாகிகள் மயிலிட்டி காசநோய் வைத்தியசாலையை இத்திட்டம் நடைபெற முன்னர் மீட்க வேண்டும்.

*மருத்துவர் சி. யமுனாநந்தா*

# வியாபார விற்பனை வரியை அறவிடும் அதிகாரம் மாகாண சபைக்குரியதே!

## எதிர்க்கட்சித் தலைவர் தவராசா உரை



வியாபார விற்பனை வரி அறவிடல் தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா முக்கிய கருத்து ஒன்றை முன்வைத்தார். அவர் இது தொடர்பாகக் கூறியவை வருமாறு:-

''வியாபார விற்பனை வரியை (BTT) அறவிடும் அதிகாரம் அரசமைப்பின் படி மாகாண சபைகளுக்கே உரியது. வடமாகாணத்தில் அவ்வாறான வரியை அறவீடு செய்வதற்குரிய சட்டப்படியான வலுவை தரும் வகையில், உரிய நியதிச் சட்டமும் நிறைவேற்றப்பட்டுள்ளது. ஆனால், சில ஆண்டுகளுக்கு முன்னால் இலங்கை நாடாளுமன்றில் 'பட்ஜெட்'சமர்ப்பிக்கப்பட்ட போது அந்த 'பட்ஜெட்'முன்மொழிவுகளுக்குள் சேர்க்கப்படாத விடயம் ஒன்று, நிதி அமைச்சரினால் நாடாளுமன்றில் வாய்மொழி மூலம் சொல்லப்பட்டது. தேசத்தைக் கட்டி எழுப்புதல் வரி இலங்கை முழுவதும் அறவிடப்படுவதால், அவ்வரி அறவீடு மூலம் கிடைக்கும் தேசிய வருமானத்தில் குறிப்பிட்டளவான வீதத்தை மாகாணங்களுக்குப் பகிர்ந்து வழங்க முடியும் என்றும் ஆகையால் மாகாணங்கள் வியாபார விற்பனை வரியை அறவிடுவதைத் தவிர்க்க வேண்டும் என்றும் நிதியமைச்சர் வாய்மொழி மூலம் கூறினார். அவ்வாறு வாய்மொழி மூலம் தெரிவித்தவை சட்டமாகாது.

இந்நிலையில் வியாபார விற்பனை வரியை எமது மாகாணசபை அறவிடுவது பற்றி யோசிக்க வேண்டும். அது பற்றி மதிப்பீடு அல்லது ஆய்வு அவசியம். வியாபார விற்பனை வரி (BTT) அறவிடுவதா அல்லது தேசத்தைக் கட்டி எழுப்பும் வரியின் வருமானப் பகிர்வை ஏற்றுக் கொள்வதா? இலாபகரமானதும் நிலைத்து நீடிக்கும் வருமானமாக வடமாகாணத்துக்கு அமையும் என்பதை ஆராய்ந்து முடிவை நாம் எடுக்க வேண்டும்.'' என்று அவர் கூறினார்.

### மாகாண சபை உறுப்பினர்கள் பத்து மில்லியனில் விடாப்பிடி

மாகாண சபை உறுப்பினர்களுக்கான நன்கொடையில் வழங்கப்படும் ஒதுக்கீடு, உறுப்பினர் ஒருவருக்கு 10 மில்லியனாக இருக்க வேண்டும் எனும் கோரிக்கை தொடர்பில் கடந்த மாகாண சபைக் கூட்டத்தில் கொள்கையளவில் காணப்பட்ட உடன்பாடு செவ்வாயன்று நடைபெற்ற அமர்வில் இடம்பெற்ற முதலமைச்சரின் அமைச்சுக்கான ஒதுக்கீடு விவாதத்தின் உரையில் இடம்பெறாமை குறித்து உறுப்பினர்கள் அதிருப்தி தெரிவித்தனர்.

முன்னரே தயாரிக்கப்பட்ட உரை என்பதால் அதில் அவ்விடயம் சேர்க்கப்படவில்லை என்று அவைத் தலைவர் சி.வீ.கே. சிவஞானம் சமாதானப்படுத்தினார்.

## வடக்கு மாகாண சபையில்...

வடக்கு மாகாண சபையின் 70 ஆவது அமர்வு நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது. அப்போது அங்கு சுவையான சொல்லாடல்களும் இடம் பெற்றன. அவற்றின் சுருக்கக் குறிப்புகள் இங்கே.....

தொகுப்பு- ஏகன் அநேகன்

### மாகாண சபையின் பதவிப் பெயர்களை மாற்றுவது தொடர்பில்

## அவைத் தலைவரின் முன்மொழிவுக்கான பிரேரணையை எதிர்த்தார் சிவாஜிலிங்கம்



வடக்கு மாகாண சபையிலுள்ள பொருத்தமற்ற பதவிப் பெயர்களை மாற்றம் செய்வது தொடர்பாக அவைத் தலைவரினால் அமர்விலே முன்மொழிவுக்காக சமர்ப்பிக்கப்பட்ட பிரேரணையை வடமாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் நிராகரித்து உரையாற்றினார்.

வடமாகாண சபையின் 70 ஆவது அமர்வு நேற்று முன்தினம் மாகாண சபையில் நடைபெற்றது. இதன்போதே அவைத் தலைவரினால் சமர்ப்பிக்கப்பட்ட பிரேரணையை அவர் எதிர்த்தார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

மாகாண சபை முறைகளை மாற்றும் விதத்தில் புதிய அரசமைப்பையே கொண்டுவர வேண்டும் என்று நாங்கள் கேட்கிறபோது மாகாணசபை தொடர்பில் ஏன் இந்தத் திருத்தங்கள்இப்போதுகொண்டு வர வேண்டும்?.

அவை உறுப்பினர்கள் ஏற்கனவே இவ்விடயம் தொடர்பாக குறிப்பிட்டு இருக்கிறார்கள். இவ்விடயம் 'மக்கு' வைத்து வர்ணம் பூசுவதாக அமைந்துள்ளது.

மாகாணங்களுக்கு இடையே உள்ள அவைத் தலைவர்கள் எடுக்கின்ற முடிவுகளையோ செயற்பாடுகளையோ நாம் பிழை என்று கூறுவதில்லை. ஆனால், இன்று இந்த அரசு புதிய அரசமைப்பு ஒன்றைக் கொண்டுவர இருக்கின்ற சூழ்நிலையிலே நாங்கள் மிகவும் கீழே சென்று மண்டியிட்டு ஒரு குறைந்த விடயத்தைச் செய்யும்படி கேட்பதா?.

வடக்கு மாகாண சபையினால் சமர்ப்பிக்கப்பட்ட தீர்வுத் திட்ட யோசனைகளிலே ஒரு மாநில அரசு இருக்க வேண்டுமென்று தெளிவாகச் சொல்லப்பட்டுள்ளது. ஆனால், அவர்கள் மீண்டும் மீண்டும் ஒற்றையாட்சிக்குள்தான் தீர்வு என்று சொல்லுகிறார்கள்.

ஆளுநர் என்ற பதவியே இருக்கக் கூடாது என்பதுதான் எங்களுடைய நிலைமையாகயுள்ளது. இலங்கையின் ஜனாதிபதியின் பதவி அதிகாரங்கள் குறைக்கப்படுகின்ற பொழுது அவரின் பிரதிநிதியாக இருக்கும் ஆளுநரின் அதிகாரம் மட்டும் ஏன் குறைக்கப்படக்கூடாது, ஆகவே ஆளுநர் முறைமையே ஒழிக்கப்பட வேண்டும் என்பது தான் எமது கருத்தாகும்.

அதுமட்டுமின்றி அரசாங்க அதிபர் பதவிநிலை இருப்பது போல வடமாகாணத்தை மத்திய அரசுடன் இணைப்பதற்கு என்று ஒருவர் இருக்கட்டும். ஆகவே, அவைத் தலைவராகிய நீங்கள் மாகாண சபையில் உள்ளவர்களின் பதவிப் பெயர்கள் தொடர்பில் கொண்டு வருகின்ற திருத்தங்களை தற்காலிகமாக இணைப்பதில் எங்களுக்கு ஆட்சேபனை இல்லை என்றார். - அவர்.

## ஜவாகீர் 'சேம் சைட் கோல்' போட்டார்!

''வடமாகாண சபையில் எதிர்க்கட்சி, எதிர்க்கட்சியாகச் செயற்படுவதில்லை. இன்று எதிர்க்கட்சித் தலைவர் நிதி ஒதுக்கீடுகள் மீது ஆற்றிய உரையின் உள்ளடக்கம் எமக்கு அதிர்ச்சி அளிக்கிறது.'' 'சேம் சைட் கோல்' அடித்தார் வடமாகாணசபையின் எதிர்க்கட்சியான பொதுஜன ஐக்கிய முன்னணி (வெற்றிலைச் சின்னம்) கூட்டுக்குள் இருக்கும் ரிசாத் பதியுதீனைத் தலைவராகக் கொண்ட - அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் மாகாண சபை உறுப்பினர் ஜவாகீர்.

''வடமாகாணத்திலுள்ள தமிழர்கள், முஸ்லிம்கள், சிங்களவர்கள், பறங்கியர்கள் என அனைவருக்கும் நீங்கள்தான் ஐயா முதலமைச்சர். ஆகவே அனைவருக்கும் -நீங்கள் சேவை செய்ய வேண்டும்'' என்றும் முதலமைச்சரை விளித்துக் கூறினார் ஜவாகீர்.

எதிர்க்கட்சித் தலைவரின் உரை ஆளும் கட்சித் தரப்பின் உரை போன்று இருந்ததாக அவர் குற்றம் சுமத்தினார்.

சபையின் எதிர்க்கட்சித் தலைவர் யார் என்ற சர்ச்சை எழுந்தபோது, தற்போதைய எதிர்க்கட்சித் தலைவர் தவராசா பக்கம் நின்றிருந்தார். ஆனால் செவ்வாயன்று சபையில் அவர் ஆற்றிய உரை தவராசாவைக் குறைகூறுவது போன்று அமைந்தது.

## 'வாழ்வாதார உதவியெல்லாம் வல்லமையுடையவர்களுக்கே'




''மாகாணத்தில் பெரியளவில் சட்டம் ஒழுங்கு மீறல்களும் குற்றச் செயல்களும் அதிகரிக்கின்றன. இவற்றைக் கட்டுப்படுத்தி ஒழுங்குபடுத்த வேண்டும்'' என அனந்தி கேட்டுக்கொண்டார்.

"இங்கு மயானங்கள் பல எவ்வித அபிவிருத்தியோ பராமரிப்போஇன்றி சீரழிந்து போயுள்ளன. வெளிநாடுகளில் மயானங்கள் பூஞ்சோலைகளாக்கப்பட்டு அழகாகவும் தூய்மையாகவும் பேணப்படுகின்றன. அன்றாட வாழ்வில் கஷ்டப்படும் அனைவரும் இறுதியில் ஓர் அமைதியான அழகான சூழல்மிக்க மயானத்திற்கே செல்ல வேண்டும். இறுதி அடைவிடமும் அலங்கோலமாக இருக்கக் கூடாது'' என்றார் அனந்தி.

''போரினால் பாதிக்கப்பட்டவர்களுக்கான வாழ்வாதார உதவிகளைச் செய்யும்போது திட்டமிட்டு ஒருங்கிணைந்து ஒருமுகப்படுத்தி திட்டங்களை அமுலாக்கவேண்டும்.ஏனெனில் வல்லமையுள்ளவர்கள் - உபாயங்கள் தெரிந்தவர்கள் - உதவிகளை திரும்பத் திரும்ப பெறுகின்றனர். ஆனால் கஷ்டப்பட்டவர்கள் தகவல் தெரியாதவர்கள் உதவிகளைப் பெறமுடியாமலுள்ளனர்''எனச் சுட்டிக்காட்டினார் அனந்தி.

## ஆளும் கட்சியா, எதிர்க்கட்சியா? பரஞ்சோதி'யாருக்கு' குழப்பம்



வரவு - செலவுத் திட்ட விவாதத்தில் பங்குபற்றும் போது நான் எதிர்க்கட்சியா ஆளும் கட்சியா என்பது கூட எனக்குத் தெரியாமல் உள்ளது என விசனம் தெரிவித்தார் பரஞ்சோதி.

''யாழ் மாநகர சபையின் சட்டவிரோத கட்டடங்களுக்கும் வாடகை வாங்குகின்றனர். சட்டபூர்வமாக ஒப்படைக்கப்படாத கட்டடத்துக்கு எப்படி வாடகை வாங்குவது? - எனக் கேள்வி எழுப்பினார் பரஞ்சோதி.

## பொலிஸ் அதிகாரியின் மனைவி மணல் அகழ்வில் பெரும் மோசடி

''பொலிஸ் உயர் அதிகாரியின் மனைவியின் பெயரில் மணல் அகழ்வு அனுமதி முல்லைத்தீவில் கொடுக்கப்பட்டுள்ளது. அங்கு மணற்கொள்ளை, மரக்கடத்தல் ஆகியன அந்த அனுமதி மூலம் செய்யப்படுகிறது. இவ்விடத்தில் எவ்வாறு சட்டம் ஒழுங்கு நிலைநாட்டப்படும். இது ஒரு பெரும் மோசடியாகும்'' - என்றார் ரவிகரன்.

## வெளிநாட்டுக்கு பறந்து விட்டார்!

"நெல்சிப்' திட்ட விசாரணை தொடர்பில் பிரதம செயலரின் அனுமதியைப் பெறாமலே சம்பந்தப்பட்ட அதிகாரி வெளிநாடு சென்றுள்ளார். இது விடயம் தொடர்பில் பொது நிர்வாக அமைச்சருக்கும் சம்பந்தப்பட்ட தூதரகத்துக்கும் பிரதம செயலாளர் கடிதம் எழுதியுள்ளார்.'' என சி.வீ.கே அறிவித்தார்.

''ஒரு நிர்வாக சேவை அதிகாரி அவ்வாறு சென்றால் பதவி நீக்கம் அவருக்கு வழங்கப்பட்டதா?'' என வினவினார் சிவாஜி.

''பிரதம செயலாளர் எதுவும் செய்ய முடியாது. கற்கை நெறிக்கு Online மூலம் விண்ணப்பித்து சென்றுள்ளார். பதவி நீக்கம் வழங்குமாறு மாகாண பொது நிர்வாகத்துக்கு பிரதம செயலாளர் அறிவித்துள்ளார். '' - என்றார் சி.வீ.கே

காலைக்கதிர் Kalaikkathir





இமாச்சலப் பிரதேசத்தின் தலைநகரான சிம்லாவில் நத்தார் பண்டிகை களைகட்டியுள்ளது. இதனையொட்டி கிறிஸ்மஸ் தாத்தா வேடம் அணிந்து வந்தவருடன் ஆடிப்பாடி மகிழ்ந்த குழந்தைகள்.

## ஜெயலலிதாவின் சொத்துக்களை ஏற்கக் கோரிய வழக்கு நிராகரிப்பு

ஹைதராபாத், டிசெ.22

தெலுங்கானா மாநிலத்தில் உள்ள மறைந்த ஜெயலலிதாவுக்குச் சொந்தமான சொத்துக்களை அரசு ஏற்க வேண்டும் என்று தொடரப்பட்ட வழக்கு நீதிமன்றத்தால் நிராகரிக்கப்பட்டது.

ஜெயலலிதா கடந்த 5 ஆம் திகதி காலமானார். அவருக்குத் தெலுங்கானா மாநிலம் ஹைதராபாத்தில் ஏராளமான சொத்துகள் உள்ளன.

தெலுங்கானா மாநிலத்தில் ஜெயலலிதாவின் பெயரில் உள்ள அனைத்து சொத்துகளையும் அந்த மாநில அரசு ஏற்கவேண்டும் என்று கூறிக் 'கைரிப் கைட்' என்ற அமைப்பின் சார்பில் ஹைதராபாத் உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டது. ஜெயலலிதாவுக்கு வாரிசுகள் இல்லாததால் ஹைதராபாத்தில் அவருக்குச் சொந்தமான சொத்துக்களை தெலுங்கானா அரசு ஏற்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. தலைமை நீதிபதி ரமேஷ் ரங்கநாதன் தலைமையிலான அமர்வு முன் இந்த மனு நேற்றுமுன்தினம் விசாரணைக்கு வந்தது.

இந்த வழக்கை விசாரித்த நீதிபதிகள், மனுதாரருக்குக் கடும் கண்டனம் தெரிவித்ததுடன் ஒரு லட்சம் ரூபா அபராதமும் விதித்தும் உத்தரவிட்டனர்.

ஜெயலலிதாவுக்கு அண்ணன் மகன் மற்றும் அண்ணன் மகள் உள்ளனர். அப்படி இருக்கும் பட்சத்தில் அவருக்கு வாரிசு இல்லை என்று கூறி எப்படி வழக்குத் தொடர முடிந்தது என்றும் நீதிபதிகள் வழக்கு விசாரணையின் போது தெரிவித்தனர். (எ)

## மீனவர்களை விடுவிக்கக் கோரி பிரதமருக்கு 'பன்னீர்' கடிதம்



சென்னை, டிசெ.22

இலங்கைக் கடற்படையால் சிறைப்பிடிக்கப்பட்ட தமிழக மீனவர்கள் மற்றும் அவர்களது படகுகளை விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்குத் தமிழக முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் மீண்டும் நேற்று கடிதம் எழுதியுள்ளார்.

அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

"புதுக்கோட்டை மாவட்டம், கோட்டைப் பட்டினம் பகுதியைச் சேர்ந்த 7 மீனவர்கள் மற்றும் இரண்டு படகுகளை இலங்கைக் கடற்படை நேற்றுமுன்தினம் சிறைப் பிடித்துள்ளது.

தமிழகத்தின் பிற மாவட்டங்களைச் சேர்ந்த மீனவர்களும் கடலுக்கு மீன் பிடிக்கச் செல்லும் போது இலங்கைக் கடற்படையால் தாக்கப்பட்டு மிரட்டப்படுகின்றனர்.

நேற்றுமுன்தினம் கைப்பற்றப்பட்டபடகுகள் உட்பட மொத்தம் 109 படகுகள் இலங்கை வசம் உள்ளன.

நீங்கள் வெளியுறவுத்துறையிடம் பேசி இலங்கை வசமுள்ள 22 மீனவர்கள் மற்றும் படகுகளை மீட்க நடவடிக்கை எடுக்க வேண்டும்."-என்றுள்ளது. (எ)

# இந்தியாவில் தாக்குதலுக்கு பாக். ஐ.எஸ்.ஐ. சதித் திட்டம்!

## உளவுத்துறை எச்சரிக்கை

டில்லி, டிசெ.22

இந்தியாவின் பல்வேறு இடங்களில் தாக்குதல் நடத்துவதற்கு பாகிஸ்தான் உளவு அமைப்பான ஐ.எஸ்.ஐ.சதித்திட்டம் தீட்டி வருகின்றது என்று உளவுத்துறை எச்சரிக்கை விடுத்துள்ளது.

இதுதொடர்பில் உளவுத்துறை வட்டாரங்கள் தெரிவித்தவை வருமாறு:

"பாகிஸ்தான் பயங்கரவாதிகளுக்கும், பயங்கரவாத அமைப்புகளுக்கு கட்டளை பிறப்பிப்பவர்களுக்கும் இடையேயான தொலைபேசி உரையாடலை உளவுத்துறை



அதிகாரிகள் சில மாதங்களாக இடைமறித்துக் கேட்டு வருகின்றனர். இதில், இந்தியாவின் முக்கிய பகுதிகளில் பயங்கரவாதத் தாக்குதல் நடத்த பாகிஸ்தான் உளவு அமைப்பான ஐ.எஸ்.ஐ. திட்டமிட்டு வருவது தெரிய வந்துள்ளது.

மேலும், இந்தத் திட்டத்தைச் செயற்படுத்த தலிபான் மற்றும் ஆப்கன் பயங்கரவாதிகளுக்கு பாகிஸ்தானில் உள்ள 'ஸ்வாட்' பள்ளத்தாக்கில் ஐ.எஸ்.ஐ. அமைப்பினர் பயிற்சியளித்து வருகின்றனர் என்ற அதிர்ச்சித் தகவலும் கிடைத்துள்ளது.

இந்தப் பயிற்சியை நிறைவுசெய்த பயங்கரவாதிகள், இந்தியாவில் நுழைவதற்குத் தயாராக, பாகிஸ்தான் எல்லையில் உள்ள முகாம்களில் தங்கியுள்ளனர்."-என்றுள்ளது. (எ)

# கேரளாவில் ஜன.12 முதல் 'சோலார்' படகுச்சேவை!

திருவனந்தபுரம், டிசெ.22

கேரளாவில், முதன் முறையாக சூரிய மின்சக்தி மூலம் சோலார் இயங்கும், படகுச் சேவை எதிர்வரும் 12 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட உள்ளது.

மாக்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த பினராயி விஜயன் கேரள முதல்வராக உள்ளார். அந்த மாநிலத்தில், கோட்டயம், ஆலப்புழா, கொச்சி மாவட்டங்களில் பயணிகள் மற்றும் சுற்றுலாப் பயன்பாட்டுக்குப் படகுகள் இயக்கப்படுகின்றன. இந்தப் படகுகள், பெரும்பாலும் டீசல் அல்லது பெற்றோல் மூலமே இயக்கப்படுகின்றன.

இந்தநிலையில், அந்த மாநில அரசு, மாற்று எரிசக்தியை ஊக்குவிக்க முயற்சித்து வருகிறது.



இதன் ஒருபகுதியாக, சூரிய மின் சக்தியில் இயங்கும், படகுப் போக்குவரத்து ஆரம்பிக்கப்பட உள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதன் முதல் சேவை, கோட்டயம் மாவட்டம் வைக்கத்தில் இருந்து கொச்சிக்கு, 180 கி.மீ. தொலைவுக்கு எதிர்வரும் 12 ஆம் திகதி ஆரம்பிக்கப்படும்.

இதில், 75 பேர் பயணம் செய்ய முடியும் என்று கூறப்படுகின்றது. (எ)

*பொது இடங்களில் கண்டபடி*

## குப்பைகளை கொட்டினால் ரூ. 10 ஆயிரம் அபராதம்!

டில்லி, டிசெ.22

பொது இடங்களில் குப்பை கொட்டுவோரிடம் 10 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்க வேண்டும் என்று தேசிய பசுமைத் தீர்ப்பாயம் உத்தரவிட்டுள்ளது.

டில்லி மாநகராட்சிகளால் குப்பைகள் தவறாக கையாளப்படுகின்றமை, குப்பைக் கூடங்களுக்கு அருகில் வசிக்கும் மக்களுக்கு ஏற்படும் பாதிப்புகள் தொடர்பாக தேசிய பசுமைத் தீர்ப்பாயத்தில் தொடரப்பட்ட பொதுநல வழக்கில் தேசிய பசுமைத் தீர்ப்பாயத் தலைவர் நீதிபதி ஸ்வதந்தர் குமார் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார்.

குப்பைகளைச் சேகரிப்பது, இடம்மாற்றுவது, அவற்றுக்கு தீர்வை ஏற்படுத்துவது ஆகியவற்றை உறுதி செய்வது 'திடக் கழிவு மேலாண்மை விதிகள் 2016' இன் கீழ் அனைத்து அதிகாரிகளின் சட்டபூர்வ கடமை. ஹோட்டல்கள், இறைச்சிக் கூடங்கள், காய்கறிச் சந்தைகள் என குப்பைகள் அதிகம் உருவாகும் இடங்களில் அவற்றை விதிகளின்படி தரம்பிரித்து வழங்க மாநகராட்சிகள் உத்தரவிட வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் குப்பைகள் உற்பத்தியாகும் இடங்களிலேயே தரம் பிரிக்கப்பட வேண்டும். குப்பைகளைத் தரம் பிரித்து வழங்கும் மக்கள் மற்றும் அமைப்புகளை ஊக்குவிக்கும் வகையில் அவர்களுக்குச் சொத்து வரியில் சலுகை வழங்கலாம் எனவும் அவ்வாறு வழங்காதவர்களுக்கு அபராதம் விதிக்கலாம் என்றும் உத்தரவிடப்பட்டது. (எ)

## சர்வதேச நாணயநிதிய தலைவி மீது பிரான்ஸில் வழக்கு



பரிஸ், டிசெ.22

சர்வதேச நாணய நிதியத் தலைவி கிறிஸ்ரின் லகார்தே மீது பிரான்ஸில் வழக்குத் தொடரப்பட்டுள்ளது. நாட்டின் நிதிய மைச்சராகச் செயற்பட்ட காலத்தில் கவணயீனமாக செயற்பட்டதாக அவர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. இந்தக் குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்ட போதிலும் அவருக்குத் தண்டனை எதுவும் வழங்கப்பட வில்லை.

வர்த்தகர் ஒருவருக்கு 404 மில்லியன் யூரோ வழங்குவதற்கு அனுமதியளித்தார் என்று குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. எவ்வாறெனினும் தாம் எந்தவொரு குற்றத்தையும் இழைக்கவில்லை என்று நாணய நிதியத் தலைவி தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இந்த விடயம் குறித்துச் சர்வதேச நாணய நிதியம் கூடிப் பேச்சு நடத்த உள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ)

# பட்டாசு சந்தையில் பெரும் தீ! 29 பேர் துடிதுடித்து கருகிப் பலி!!

## மெக்சிகோவில் பயங்கரம்



மெக்சிகோ நகர், டிசெ.22

மெக்சிகோவில் பட்டாசால் ஏற்பட்ட தீ விபத்தில் 29 பேர் துடிதுடித்து கருகிப் பலியாகினர். 70 பேர் காயம் அடைந்தனர்.

மெக்சிகோ தலைநகரின் புறநகரான துல்டெப்க் பகுதியில் பட்டாசு விற்பனை செய்யும் சந்தையில் ஏராளமான பட்டாசுக் கடைகள் உள்ளன.

பொதுவாக லத்தீன் அமெரிக்க நாடுகளில் கிறிஸ்மஸ், புத்தாண்டு உள்ளிட்ட பண்டிகைக் காலங்களில் பட்டாசுகளை கொளுத்தி வாணவேடிக்கை நடத்துவது வழக்கம்.

தற்போது அந்தப்பண்டிகைகளை முன்னிட்டு அங்கு ஏராளமான ரக பட்டாசுகள் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்தன. இந்த நிலையில் நேற்று முன்தினம் மாலை ஒரு பட்டாசுக் கடையில் திடீரென தீப்பிடித்தது.

அந்தத் 'தீ' வேகமாகப் பரவி அடுத்தடுத்த கடைகளிலும் பிடித்தது. இறுதியில் அந்த சந்தையில் உள்ள அனைத்துக் கடைகளிலும் தீப்பிடித்தது. இதனால் அங்கு விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த பட்டாசுகள் பயங்கர சத்தத்துடன் வெடித்தன.

இதனால் கடும் புகை மூட்டம் ஏற்பட்டது. இந்தத் தீ விபத்து இடம்பெற்ற போது சந்தையில் பட்டாசுகள் வாங்க ஏராளமானோர் குவிந்திருந்தனர். அவர்கள் உயிர் தப்பிக்க அங்குமிங்கும் ஓட்டம் பிடித்தனர்.

தீயை அணைக்க ஏராளமான தீயணைப்பு வாகனங்கள் வரவழைக்கப்பட்டன. இருந்தும் தீவிபத்தில் 29 பேர் உடல் கருகிப் பலியாகினர். 70 க்கும் மேற்பட்டோர் காயம் அடைந்தனர்.

அனைவரும் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் பலரது நிலைமை கவலைக்கிடமாக உள்ளது. எனவே பலியானோர் எண்ணிக்கை உயரும் அபாயம் உள்ளது.

இந்தத் தீவிபத்து மெக்சிகோவில் அனைவரையும் அதிர்ச்சி அடையச் செய்துள்ளது.

தீ விபத்தில் பலியானோர் குடும்பத்தினருக்கு மெக்சிகோ ஜனாதிபதி என்ரிக் பெனாநியடோ ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துள்ளார்.

தீ விபத்து தொடர்பில் விசாரணை நடத்தப்பட்டு வருகின்றது. (எ)

## சிரியாவில் சமாதானத்தை ஏற்படுத்த ரஷ்யா, ஈரான், துருக்கி முன்வந்தன

சிரியாவில் 'மொஸ்கோ பிரகடனம்' என்ற தொனிப் பொருளில் சமாதானத்தை நிலைநாட்டும் முயற்சிகள் இடம்பெற்று வருகின்றன. இதற்கான நடவடிக்கைகளுக்கு ரஷ்யா, ஈரான், துருக்கி ஆகிய நாடுகள் உதவி வழங்கத் தயார் என்று தெரிவித்துள்ளன.

மேலும் அங்கு சமாதானத்தை ஏற்படுத்தும் முயற்சிகளின் முகவராக தொழிற்பட விரும்புவதாக அந்த நாடுகள் கூறியுள்ளன.

இதேவேளை, சிரிய படையினர் அலெப்போவின் எஞ்சிய பகுதிகளையும் கைப்பற்றும் முனைப்புக்களில் தீவிரம் காட்டி வருகின்றனர். அலெப்போவில் கிளர்ச்சியாளர்களுக்கு எதிரான போரில் சிரிய இராணுவப் படையினர் வெற்றியீட்டினால் அது பசர் அல் அசாத்துக்கு பெருமிதம் அளிப்பதாக அமையும்.

மொஸ்கோ பிரகடனம் என்ற தொனிப் பொருளில் சிரியாவில் ஜனநாயகத்தை நிலைநாட்ட முயற்சிக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (எ)



ஜேர்மன் தலைநகர் பெர்ளினில் கிறிஸ்மஸ் சந்தைக்குள் ஊடுருவி நடத்திய லொறித் தாக்குதலில் உயிரிழந்தோருக்கு ஈழத் தமிழர்களும் தமது அஞ்சலியைச் செலுத்தினர். நேற்று முன்தினம் மாலை ஆயிரக்கணக்கான மக்கள் ஒன்று கூடி மலர் வணக்கம் செலுத்தி சுடர் ஏற்றினர். நேற்று முன்தினம் மாலை 6 மணிக்கு கோரமான சம்பவம் நடைபெற்ற இடத்துக்கு அருகில் உள்ள பிரசித்திபெற்ற தேவாலயத்தில் சிறப்புப் பிரார்த்தனையும் நடைபெற்றது. இந்த நிகழ்வில் அரசத் தலைவர்கள் அனைவரும் கலந்து கொண்டு தமது இரங்கலையும் அனுதாபங்களையும் தெரிவித்தனர்.

## மியன்மாரில் மனித உரிமை மீறல்கள்

மியன்மாரில் ரொஹினியா முஸ்லிம்களுக்கு எதிராக மனித உரிமை மீறல் செயற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன என்று சர்வதேச மன்னிப்புச்சபை தெரிவித்துள்ளது.

மியன்மார் இராணுவத்தினர் ரொஹினியா முஸ்லிம்கள் மீது அடக்குமுறைகளைக் கட்டவிழ்த்து விடுவதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. திட்டமிட்ட வகையில் ரொஹினியா முஸ்லிம்கள் இனச் சுத்திகரிப்புச் செய்யப்படுகின்றனரா என்ற சந்தேகம் எழுந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

## ஜேர்மன் தாக்குதலின் எதிரொலி உலக நாடுகளில் பாதுகாப்பு தீவிரம்




பெர்ளின், டிசெ.22

ஜேர்மன் தலைநகர் பெர்ளின் நகர தாக்குதலைத் தொடர்ந்து உலகளாவிய ரீதியில் பல நகரங்களிலும் பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டுள்ளன.

நியூயோர்க்கில் உள்ள முக்கிய சுற்றுலாப் பகுதிகளில் பாதுகாப்பு மிகவும் பலப்படுத்தப்பட்டுள்ளது. மேலும், லண்டன் நகர பாதுகாப்பு ஏற்பாடுகளும் பரிசீலனை செய்யப்பட்டு வருகின்றது.

அதே வேளையில், கனடாவில் உள்ள டொரண்டோ மற்றும் மொன்ரியால் போன்ற நகரங்களில் அமைக்கப்பட்டுள்ள கிறிஸ்மஸ் சந்தைகளில் பாதுகாப்பு ஏற்பாடாக தடுப்புகள் அமைக்கப்பட்டுள்ளன.

முன்னதாக, கடந்த திங்கட்கிழமை இரவு, பெர்ளினில் உள்ள கிறிஸ் மஸ் சந்தைக்குள் லொறியை வேகமாகச் ஓட்டிச் சென்று நடத்தப்பட்ட தாக்குதலில் 12 பேர் கொல்லப்பட்டனர். பலர் காயமடைந்தனர்.

இந்தநிலையில், பெர்ளின் நகர கிறிஸ்மஸ் சந்தையில் ஏற்பட்ட தாக்குதல் தொடர்பாக மக்கள் அமைதி காக்குமாறும், அச்சப்பட வேண்டாம் என்றும் அந்த நகர மேயர் கேட்டுக் கொண்டுள்ளார். (எ)

## 3 மாதச் சிசுவை உயிரோடு தின்ற இராட்சத எலிகள்

தூங்கிக் கொண்டிருந்த 3 மாதப் பெண் குழந்தையை இராட்சத எலிகள் உயிரோடு தின்றுள்ளன. இந்தக்கொடூர சம்பவம் தென் ஆபிரிக்காவின் ஜொஹ்யாநெஸ்பர்க் நகரத்தில் இடம்பெற்றுள்ளது.

கணவனைப் பிரிந்து வாழும் அந்தத் தாய், குழந்தையை இரவு தனியே விட்டு மது விடுதிக்குச் சென்றுள்ளார். குழந்தை கவனிப்பாரற்று இருந்தாகக் குற்றம்சாட்டிக் குழந்தையின் தாயை பொலிஸார் கைது செய்துள்ளனர். இராட்சத எலிகள் குழந்தையின் நாக்கு, கண்கள் மற்றும் விரல்கள் அனைத்தையும் கொடூரமாகக் கடித்து தின்றுள்ளன என்று விசாரணையில் தெரியவந்துள்ளது.(எ)

## 37 ஆண்டுகளின் பின்னர் சகாராவில் பனிப்பொழிவு



உலகின் மிகப்பெரிய பாலைவனமான சகாராவின் காலநிலையில் 37 வருடங்களின் பின்னர் பெரிய மாற்றம் ஏற்பட்டுள்ளதாகச் சர்வதேச ஊடகங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

சகாரா பாலைவனத்தின் பல பகுதிகள் பனியால் மூடப்பட்டுள்ளன என்று குறிப்பிடப்படுகின்றது.

இதன் காரணமாக சகாரா பாலைவனத்தின் எல்ஜூரியாவுக்கு அருகில் உள்ள பகுதி வெள்ளை நிறமாகக் காட்சியளிப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

விஞ்ஞானிகள் வெளியிட்டுள்ள தகவல்களுக்கமைய சகாரா பாலைவனத்தில் மீண்டும் பூமியில் மாற்றமடையக் கூடிய சுற்றாடல் ஏற்படும் பகுதியாக மாறுவதற்கு ஆரம்பமாகியுள்ளது.

இதற்கு 37 வருடங்களுக்கு முன்னர் சகாரா பாலைவனத்தில் ஏற்பட்ட சூறாவளியின் போது பனி விழுந்திருந்தன.

எனினும் தற்போது அவ்வாறான ஒன்றும் ஏற்படாமல் பனி விழுந்துள்ளமை குறிப்பிடத்தக்க ஒரு விடயமாகக் கருதப்படுகின்றது.

அது தொடர்பிலான அரிய புகைப்படங்கள் சில வெளியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர் Kalaikkathir



# பாலசிங்கத்தின் அஸ்தி வேறு எவரிடமும் இல்லை!

## பம்மாத்துக் கதை விடுபவர்களை கண்டிக்கிறார் 'அன்ரி' அடேல்

தமிழீழ விடுதலைப் புலிகளின் மதியுகியும், தனது கணவருமான அன்ரன் பாலசிங்கத்தின் அஸ்தி தற்போது எவரிடமும் இல்லை என்றும், அவரின் அஸ்தியை தாம் வைத்துள்ளதாக கூறுபவர்கள் தொடர்பில் தமிழ் மக்கள் அவதானத்துடன் இருக்க வேண்டும் என்றும் அடேல் பாலசிங்கம் கேட்டுக் கொண்டுள்ளார்.

அன்ரன் பாலசிங்கத்தின் அஸ்தி தம்மிடம் இருப்பதாகவும், அதனை விதைத்து நினைவுத் தூபியொன்றை அமைக்கவுள்ளதாகவும் பிரித்தானியாவைத் தளமாகக் கொண்டியங்கும் உலகத் தமிழர் வரலாற்று மையம் அண்மையில் அறிவித்திருந்தது.

இதனையடுத்தே, அடேல் பாலசிங்கம் கடித வடிவில் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளார். அதிலேயே, அன்ரன் பாலசிங்கத்தின் அஸ்தி தற்போது எவரிடமும் இல்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அடேல் பாலசிங்கத்தின் கடிதம்:

எனது அன்புக்கும் மதிப்புக்குமுரிய தமிழீழ மக்களே!

எனது அன்புக் கணவர் அன்ரன் பாலசிங்கம் அவர்களின் அஸ்தி தம் வசம் இருப்பதாக உலகத் தமிழர் வரலாற்று மையம் அல்லது ''தலைமைச் செயலகம்'' என்ற பெயரில் இயங்கும் அமைப்பைச் சேர்ந்தவர்கள் உரிமை கோரியிருப்பது சமீபத்தில் எனது கவனத்திற்கு வந்துள்ளது.

**எனது கணவரின் அஸ்தி பேழையா?**

அத்தோடு, அவரது அஸ்தியைக் கொண்டுள்ளதாகக் கூறப்படும் பேழையை இங்கிலாந்தின் ஒக்ஸ்போர்ட் பகுதியில் தெரிவு செய்யப்பட்ட இடம் ஒன்றில் விதைத்து, அங்கு அவருக்கான நினைவுத் தூபி ஒன்றைக் கட்டப் போவதாகவும் அந்நபர்கள் அறிவித்துள்ளார்கள். இவ்வாறான உரிமை கோரல்களும், திட்டங்களும் எனக்கு ஆழமான மன உளைச்சலையும், கவலையையும் அளிக்கின்றன.

முதலாவதாக, அந்த அமைப்பினரின் கைகளுக்கு இந்தப் பேழை எவ்வாறு கிட்டியது என்பது பற்றி எந்தவிதமான கதைகள் உலாவினாலும், இவர்களின் வசம் உள்ள பேழையில் எனது கணவரின் அஸ்தி இருப்பதாக இவர்கள் மேற்கொள்ளும் உரிமை கோரலை நான் முழுமையாக நிராகரிக்கின்றேன்.

**பாலாவின் விருப்பப்படியே அது துயில்கின்றது!**

எனது கணவரின் அஸ்தி அவரது ஈம நிகழ்வு நடைபெற்று இரண்டு நாள்களின் பின்னர் என்னிடம் ஒப்படைக்கப்பட்டது, அதனை அவரது விருப்பத்திற்கு இணங்க பூமஞ்சங்களின் நடுவேயும், விசாலமான முதிர்ந்த மரங்களின் கீழேயும், மென்மையாக விரிந்தோடும் அருவியிலும், அணில்கள் விளையாடி மகிழ்வுறும் மரங்களின் உதிர்ந்த இலைகளிடையேயும் சங்கமிக்க வைத்தேன். தனது அஸ்தி எங்கிருக்க வேண்டும் என்று எனது கணவர் விரும்பினாரோ, அங்கு அது துயில்கின்றது; அவர் ஆழ்ந்த காதல் கொண்டிருந்த இயற்கையான சுற்றுச்சூழலோடு அது ஒன்றித்து அமைதி பூண்டுள்ளது.

இதனையொட்டியுள்ள அடுத்த விடயம் வருமாறு:

தனது ஈமக் கிரியைகள் எவ்வாறு நடைபெற வேண்டும் என்று எனது கணவர் விரும்பினார் என்பதை எல்லாம் புறந்தள்ளிவிட்டு, தம்மிடம் அவரது அஸ்தியைக் கொண்ட பேழை இருப்பதாக இந்நபர்கள் கூறிக் கொள்வதற்கு காரணமாக இருந்த செய்கைகளும், என்னிடம் எவ்வித ஆலோசனைகளையும் மேற்கொள்ளாமல் இப்பொழுது இந்நபர்களால் மேற்கொள்ளப்படும் உரிமை கோரல்களும், வெளியிடப்படும் திட்டங்களும் என்னை மிக மோசமாக நோகடித்திருக்கிறது. ஒருவரின் மரணம் தொடர்பிலான சமூக ஒழுங்கு முறைகளில் பேணப்படும் நாகரிக நடத்தைக்கான பண்பியல்புகளுக்கு முரணாகவும் உள்ளன.

**எனக்கு மட்டுமே அந்த உரிமை**

எனது கணவரின் அஸ்தியை வைத்திருப்பதற்கும், கையாள்வதற்குமான உரிமை எனது கணவரின் ஒரேயொரு உரித்துனராகிய எனக்கு மட்டும் உள்ளதே தவிர, அந்த உரிமை வேறு எவருக்கும், அவர்கள் எவராக இருந்தாலும், எந்தவிதமான அதிகார நிலைகளில் அமர்ந்திருந்தவர்களாக அல்லது அமர்ந்திருப்பவர்களாக இருந்தாலும், அவர்களுக்கு கிடையாது; அதுதான் நாகரிகமான நடத்தைக்கான பண்பியல்பாகும்.

**பாலாவுக்கு கற்தூபியா?**

பாலசிங்கம் அவர்களின் நினைவாக ஒரு கற்தூபி கட்டப்பட வேண்டும் என்று எவராவது பரிந்துரை செய்வதென்பது அவரது கொள்கையைக் காலில் போட்டு மிதிக்கும் செயல் என்பதோடு, அதனிலும் அதிர்ச்சியூட்டுவதும், மன உளைச்சலை அளிப்பதும், வேடிக்கையானதும் அவருக்கான நினைவுத் தூபி இங்கிலாந்தில் கட்டப்பட வேண்டும் என்று கூறப்படுவதுதான். இந்த வகையில் இவ்வாறான திட்டங்களைக் கொண்டிருப்பவர்கள் பாலசிங்கம் அவர்களின் நினைவுகளைக் கேலிக்கூத்தாக சிறுமைப்படுத்தியுள்ளார்கள் என்பேன்.

பாலசிங்கம் அவர்களின் அஸ்திப் பேழை தம்வசம் இருப்பதாக உரிமை கோரியவாறு அவருக்கு நினைவுத் தூபியைக் கட்டப் போவதாகக் கூறுபவர்கள், அவர் தனது வாழ்க்கையை அணுகிய விதத்திற்கும், அவரது தனிமனித தத்துவத்திற்கும் முரணாக நடந்து கொள்ளாது, அந்த மனிதனைப் பற்றியும், அவர் எவ்வாறான கொள்கையுடன் வாழ்ந்தார் என்பதைப் பற்றியும் ஆழமாக சிந்தித்து, கடின உழைப்பின் மூலம் மக்கள் வழங்கிய பணத்தை உயிரற்ற, உறைந்து போன கற்களில் செலவழிக்காது, தமது கரிசனைகளை அவதியுறும் தமிழீழ மக்களின் தேவைகளுக்காகவும், அவர்களின் வாழ்வுக்காகவும் செலவிடுவதே பொருத்தமானது.

**பிரபாகரனின் மதிப்பில் நம்பிக்கை**


கடந்து போன மூன்று தசாப்தங்களில் பிரபாகரனுடன் நான் பேணிய உறவின் பொழுது எவ்வாறு எனது கருத்துக்களையும், விருப்பங்களையும் அவர் மதித்து நடந்தாரோ, அவ்வாறே இப்பொழுதும் அவர் நடந்திருப்பார் என்று நான் திடமாக நம்புகின்றேன்.

எனது கணவர் மரணமுற்றதன் பின்னரான கடந்த பத்தாண்டுகளில் அவர் மீது ஆழமான மதிப்பையும், அன்பையும் தமிழீழத்தின் பெரும்பான்மையான மக்கள் கொண்டிருப்பதையிட்டு நான் நன்றி கூறுகின்றேன். அதேநேரத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் உண்மையான, அதிகாரபூர்வ பிரதிநிதிகள் என்றும், பேச்சாளர்கள் என்றும் தான்தோன்றித்தனமாக உரிமை கோருபவர்களைக் கண்மூடித்தனமாக ஏற்றுக் கொள்ளாது, அவர்களை விமர்சனக் கண்ணோட்டத்தில் அணுகுமாறு உங்களை நான் வேண்டிக் கொள்கின்றேன்.

எனது கணவரின் அஸ்தி என்று கூறப்படும் ஒன்று தம்மிடம் இருப்பதாக கூறுபவர்கள், அது விடயத்தில் தமக்கு அதிகாரமும், நியாயமும் இருப்பதாக உரிமை கோருவதையும், அவர்கள் எடுக்கக்கூடிய முடிவுகளையும் நான் முழுமையாக நிராகரிக்கின்றேன்.

இறுதியாக உங்கள் அனைவருக்கும் எனது அன்பையும், பண்டிகைக் கால வாழ்த்துக்களையும் உரித்தாக்குவதோடு, வரும் புத்தாண்டு உங்களுக்கு மகிழ்வாகவும், ஆக்கபூர்வமாகவும் அமைய வாழ்த்துகின்றேன்.

*உங்கள் உண்மையுள்ள,*
அடேல் பாலசிங்கம்.



## சூரியசக்தி மின்னுற்பத்தி பூங்காவை நிறுவ அமைச்சரவை அனுமதி

சூரியசக்தி மின்னுற்பத்தி பூங்காவை நிறுவுவது தொடர்பான யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

தற்போது சூழலுக்கு பாதிப்பு ஏற்படுத்தாத வளங்களைப் பயன்படுத்தி மின்னுற்பத்தி செய்யும் நடைமுறை தொடர்பில் கூடுதல் அக்கறை செலுத்தப்படுகின்றது. இங்கு சூரிய சக்திக்கு முன்னுரிமை கொடுக்கப்படுகின்றது.

11.3 மெகாவோற் அளவிலான சூரிய மின்சாரம் தற்போது இலங்கை மின்சார அமைப்புடன் இணைக்கப்படுகின்றது. இலங்கையில் சூரியசக்தி மின்னுற்பத்தியை மேலும் அதிகரிக்கும் நோக்கில் இதுவரையில் பல வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

100 மெகாவோற் அளவைக் கொண்ட 3 சூரியசக்தி மின்னுற்பத்தி பூங்காக்களை உருவாக்குவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. அதனடிப்படையில் அதன் முதற் கட்டமாக சியபலாண்டுவ பிரதேசத்தில் 100 மெகாவோற் கொள்ளளவைக் கொண்ட சூரியசக்தி பூங்காவை நிறுவுவதற்கான சாத்தியவள அறிக்கையை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சர் ரஞ்ஜித் சியம்பலாப்பிட்டியவினால் முன்வைக்கப்பட்ட யோசனைகளுக்கு அமைச்சரவையின் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. (எ)

# இலங்கை - தென்னாபிரிக்கா டெஸ்ட் சமநிலையில் நிறைவடைந்தது




பொட்சேபிஸ், டிசெ.22

தென்னாபிரிக்கா சுற்றுலாவின் முதலாவது 3 நாள் பயிற்சி போட்டி சமநிலையில் நிறைவடைந்துள்ளது.

பொட்சேபிஸ்ட்ரூம் சென்வெஸ் மைதானத்தில் இடம்பெற்ற போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை அணி தனது முதலாவது இன்னிங்ஸில் 373 ஓட்டங்களைப் பெற்றது.

இரண்டாவது நாளின் இறுதியில் தென்னாபிரிக்கா அழைப்பு பதினொருவர் அணி தனது முதலாவது இன்னிங்ஸில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 289 ஓட்டங்களைப் பெற்றது.

போட்டியின் இறுதி நாளான நேற்றுமுன்தினம் தனது இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பாடிய இலங்கை அணி 4 விக்கெட்டுக்களை இழந்து 212 ஓட்டங்களைப் பெற்று கொண்டது. இதன்படி போட்டி வெற்றி தோல்வியின்றி நிறைவடைந்துள்ளது. அத்தோடு இலங்கை மற்றும் தென்னாபிரிக்காவுக்கு இடையேயான முதலாவது டெஸ்ட் போட்டி எதிர்வரும் 26 ஆம் திகதி போட் எலிசபெத்தில் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஐ.சி.சி. டெஸ்ட் தரவரிசை: முதல் இரு இடங்களிலும் அஸ்வின், ஜடேஜா!

சென்னை, டிசெ.22

டெஸ்ட் போட்டிகளுக்கான தரவரிசையில் இந்திய அணியின் சுழற்பந்து வீச்சாளர்களான அஸ்வின், ஜடேஜா முதல் இரண்டு இடங்களை பிடித்துள்ளனர்.

இங்கிலாந்து அணிக்கு எதிரான டெஸ்ட் கிரிக்கெட் தொடரை இந்திய அணி 4-0 என்ற கணக்கில் வென்று அசத்தியுள்ளது. இந்த தொடரில் இந்திய அணிக்கு வெற்றிக்கு சுழற்பந்துவீச்சாளர்கள் அஸ்வின் மற்றும் ஜடேஜா பெரிதும் உறுதுணையாக இருந்தனர்.

இங்கிலாந்துக்கு எதிரான தொடரில் ஜடேஜா 26 விக்கெட்டுகளையும், அஸ்வின் 28 விக்கெட்டுகளையும் சாய்த்தனர்.

இந்த நிலையில், டெஸ்ட் போட்டிகளுக்கான தரவரிசையில் இந்திய அணியின் சுழற்பந்து வீச்சாளர்களான அஸ்வின், ஜடேஜா முதல் இரண்டு இடங்களை பிடித்துள்ளனர்.




இந்திய அணியின் இரண்டு பந்துவீச்சாளர்கள் தரவரிசையில் முதல் இரண்டு இடங்களை பிடிப்பது மிகவும் அரிதாக நடைபெறுவதாகும்.

887 புள்ளிகளுடன் அஸ்வின் முதல் இடத்திலும், 867 புள்ளிகளுடன் ஜடேஜா இரண்டாவது இடத்திலும் உள்ளனர். அஸ்வின் ஏற்கனவே முதல் இடத்தில் இருந்து வந்தார்.

ஆனால் இந்த தொடரில் ஜடேஜா அதிக விக்கெட்டுகளை வீழ்த்தியதன் மூலம், தரவரிசையில் பல இடங்கள் முன்னேறி உள்ளார்.

குறிப்பாக கடைசி டெஸ்டில் அவர் 10 விக்கெட்டுகளை சாய்த்தார். இரண்டாவது இன்னிங்ஸில் அவர் வீழ்த்திய 7 விக்கெட்டுகள் தான் வெற்றிக்கு பெரிதும் உதவியது.

# இந்திய அணி எங்களை தண்டித்து விட்டது!

## இங்கிலாந்து அணித் தலைவர் அலெஸ்டர் குக் தெரிவிப்பு

சென்னை, டிசெ.22

முக்கியமான வாய்ப்புகளை நாங்கள் தவற விட்டோம். அதற்காக இந்திய அணி எங்களை தண்டித்து விட்டது என்று இங்கிலாந்து அணியின் தலைவர் அலெஸ்டர் குக் தெரிவித்துள்ளார்.


இந்தியாவிற்கு எதிரான தொடரை 0-4 என இழந்ததை தொடர்ந்து, இது குறித்து இங்கிலாந்து அணியின் தலைவர் அலெஸ்டர் குக் தெரிவித்தவை வருமாறு:-

தோல்விகளுக்கு சாக்கு போக்கு கூற விரும்பவில்லை. இந்தியா ஒரு சிறந்த அணி. இந்த தொடரின் வெற்றிக்கு அவர்கள் தகுதியானவர்கள்.

மதிய உணவு இடைவேளை நாங்கள் நல்ல நிலையில் இருந்தோம். ஆனால் போட்டியை சமநிலைக்கு கொண்டு செல்ல முடியவில்லை.

இந்திய அணியின் துடுப்பாட்டத்தின் போது முக்கியமான வாய்ப்புகளை தவற விட்டோம். அதற்காக இந்திய அணியினர் எங்களை தண்டித்து விட்டார்கள். இதனால் அவர்களின் வேகத்தை கட்டுப்படுத் துவது கடினமாகிவிட்டது.

விராட் கோஹ்லிக்குப் பாராட்டுகள். அனைத்து பெருமையும் விராட் கோஹ்லிக்கே. அவர்கள் எங்களை போட்டியில் இருந்தே வெளியேற்றி விட்டனர்.




எங்களைப் பொறுத்தவரை இது தவற விட்ட வாய்ப்புகள், நழுவ விட்ட பிடி எடுப்புகளுக்கான தொடராக அமைந்தது.

போதிய ஓட்டங்கள் அடிக்க முடியாத நிலையில் போதிய விக்கெட்களையும் வீழ்த்த முடியவில்லை. அத்தோடு இந்தியாவில் விளையாடுவது என்பது கடினமானதும் தான்.- என்று கூறியுள்ளார்.

இந்த தோல்வியை தொடர்ந்து இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் தலைவர் பதவியில் இருந்து அலஸ்டர் குக் விலகும் காலம் வந்துள்ளது என்று முன்னாள் தலைவர் மைக்கல் வோகன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

அலெஸ்டர் குக் இந்த டெஸ்ட் தொடரின் தோல்வியை அடுத்து தமது எதிர்காலம் குறித்து தீர்மானிக்க வேண்டிய நிலையில் உள்ளார்.

அத்துடன் இறுதி 3 டெஸ்ட் போட்டிகளிலும் அலஸ்டர் குக்கின் செயற்பாடுகள் விரைவில் அவர் விலகும் தீர்மானத்தில் உள்ளதை உணர்த்துகிறது என்றும் வோகன் தெரிவித்துள்ளார்.

# ரொஸலின் துடுப்பாட்ட மட்டைக்கு தடை விதித்தது ஆஸ்திரேலியா

மெல்போர்ன், டிசெ.22

மேற்கிந்தியதீவு கிரிக்கெட் வீரர் என்று ரொஸலின் துடுப்பாட்ட மட்டைக்கு ஆஸ்திரேலிய கிரிக்கெட் தடை விதித்துள்ளது.

ஆஸ்திரேலியாவில் இடம் பெற்றுவரும் பிக் பேஸ் கிரிக்கெட் லீக்கில் சிட்னி தண்டர்ஸ் அணிக்காக விளையாடிவரும் ரொஸல் கறுப்பு நிறத்திலான துடுப்பாட்ட மட்டையைப் பயன்படுத்தியுள்ளார்.



இந்நிலையில், கறுப்பு நிறத்திலான துடுப்பாட்ட மட்டையால் பந்துக்கு சேதம் ஏற்படுத்தும் என்று தெரிவித்து நடுவர்கள் முறையிட்டுள்ளனர்.

இதனையடுத்து இந்த துடுப்பாட்ட மட்டைக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

இந்த துடுப்பாட்ட மட்டையை பயன்படுத்துவதற்கு ஆரம்பத்தில் அனுமதி வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ஜீவன் நெடுஞ்செழியனுடன் ஜோடி சேர்கிறார் போபண்ணா



சென்னை, டிசெ.22

சென்னை ஓபன் டென்னிஸ் போட்டியில் இரட்டையர் பிரிவில் இந்திய வீரர்கள் போபண்ணா சென்னை வீரர் ஜீவன் நெடுஞ்செழியனுடன் இணைந்து விளையாட உள்ளார்.

# இந்திய அணிக்கு இந்த ஆண்டு சிறப்பானது!



சென்னை, டிசெ.22

இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரை கைப்பற்றியதையடுத்து, இந்திய அணிக்கு இந்த ஆண்டு சிறப்பானது என்று அணித் தலைவர் விராட் கோஹ்லி தெரிவித்துள்ளார்.

இங்கிலாந்துக்கு எதிராக சென்னை சேப்பாக்கம் மைதானத்தில் இடம்பெற்ற 5 ஆவது மற்றும் கடைசி டெஸ்டிலும் இந்தியா வெற்றி பெற்றது.

பரபரப்பான இந்த டெஸ்டில் இன்னிங்ஸ் மற்றும் 75 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றிபெற்றது.

இந்த வெற்றி மூலம் இந்தியா 5 டெஸ்ட் கொண்ட தொடரை 4-0 என்ற கணக்கில் கைப்பற்றியது. ஏற்கனவே 2 ஆவது, 3 ஆவது, 4 ஆவது டெஸ்டில் வென்று இருந்தது. முதல் டெஸ்ட் சமநிலையில் முடிந்தது.

இந்திய அணி டெஸ்ட் தொடரில் 4 போட்டிகளில் வெல்வது இது 2 ஆவது முறையாகும். இதற்கு முன்பு 2013 ஆம் ஆண்டில் ஆஸ்திரேலியாவுக்கு எதிராக 4-0 என்ற கணக்கில் வென்று இருந்தது.

விராட் கோஹ்லி தலைமையிலான இந்திய அணி இங்கிலாந்துக்கு எதிராக முதல் முறையாக 4-0 என்ற கணக்கில் வென்று இருக்கிறது.

இதற்கு முன்பு அசாருதீன் தலைமையிலான அணி 1993 ஆம் ஆண்டு 3-0 என்ற கணக்கில் வென்றதே நல்ல நிலையாக இருந்தது.

## விராட் கோஹ்லி மகிழ்ச்சி

சேப்பாக்கம் டெஸ்டில் பெற்ற வெற்றிக்கு பின்னர் அணித்தலைவர் விராட் கோஹ்லி ஊடகவியலாளர்களிடம் தெரிவித்தவை வருமாறு:-

2016 ஆம் ஆண்டை பொறுத்தவரை இந்திய அணிக்கு சிறப்பானதாக அமைந்துள்ளது.

அனைத்து டெஸ்ட் தொடரையும் கைப்பற்றி இருக்கிறோம். ஆசிய கோப்பை மற்றும் நியூசிலாந்துக்கு எதிரான ஒருநாள் தொடரை வென்றுள்ளோம்.

இந்த ஆண்டில் இரண்டு பின்னடைவுகள் மட்டுமே இருந்தன. ஆஸ்திரேலியாவில் நடந்த ஒருநாள் தொடரிலும், 20 ஓவர் உலகக் கோப்பையிலும் தோற்றதுதான்.

2016 ஆம் ஆண்டு இந்திய அணிக்கு மறக்க இயலாத சிறந்த ஆண்டாகும். இதை நினைத்து நான் மிகவும் பெருமைப்படுகிறேன்.

இது தொடக்கம் தான். இனிவரும் ஆண்டுகளிலும் இதேபோன்று வீரர்கள் முழுத் திறமையுடன் ஆடுவார்கள்.- என்று தெரிவித்துள்ளார்.

# டென்னிஸ் வீராங்கனை கிவிடோவாவுக்கு கத்திக்குத்து!



பிராக், டிசெ.22

விம்பிள்டன் முன்னாள் சம்பியனான செக் குடியரசு டென்னிஸ் வீராங்கனை கிவிடோவாவின் வீட்டுக்குள் புகுந்த மர்மநபர் அவரைக் கத்தியால் குத்தியுள்ளார்.

பெட்ரா கிவி டோவா (வயது 26)கிராண்ட்ஸ்லாம் போட்டிகளில் ஒன்றான விம்பிள்டன் டென்னிஸில் 2011 மற்றும் 2014ஆம் ஆண்டுகளில் ஒற்றையர் பிரிவில் சம்பியன் பட்டம் வென்று சாதனை படைத்துள்ளார்.

உலக தரவரிசையில் 11 ஆவது இடம் வகிக்கும் கிவிடோவா காலில் ஏற்பட்ட காயம் காரணமாக ஓய்வில் இருந்துவந்தார்.

செக் குடியரசின் கிழக்கு பகுதியில் புரோஸ்டெஜோவ் நகரில் உள்ள அடுக்குமாடி குடியிருப்பில் அவர் வசித்து வருகிறார்.

நேற்றுமுன்தினம் காலை அந்த அடுக்குமாடி குடியிருப்புக்குள் புகுந்த மர்மநபர் ஒருவர் கிவிடோவாவின் வீட்டுக் கதவை உடைத்து அதிரடியாக உள்ளே புகுந்துள்ளார்.

அப்போது அங்கு இருந்த கிவிடோவா சத்தம் போட்டார். இதனால், ஆத்திரம் அடைந்த 35 வயது மதிக்கத்தக்க அந்த மர்ம நபர் மறைத்து வைத்து இருந்த கத்தியால் கிவிடோவாவை குத்தியுள்ளார். அதனைத் தடுக்க முயன்ற கிவிடோவாவுக்கு கையில் கத்திக்குத்து விழுதுள்ளது. இதனையடுத்து மர்மநபர் தப்பிச் சென்றுவிட்டார்.

இதில் இடது கையில் பலத்த காயம் அடைந்த கிவிடோவா அருகில் உள்ள மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். காயம் உயிருக்கு ஆபத்தானதாக இல்லாவிட்டாலும், இடது கையால் விளையாடும் பழக்கம் கொண்ட கிவிடோவா காயம் குணம் அடைந்து விரைவில் களம் திரும்புவது கடினம் என்று கூறப்படுகிறது.

கிவிடோவாவின் வீட்டுக்குள் நுழைந்தவர் யார்? என்ன நோக்கத்துக்காக அங்கு வந்தார்? என்பது குறித்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

கிவிடோவா தனது டுவிட்டர் பக்கத்தில் வெளியிட்டுள்ள குறிப்பில்-

'மர்ம நபரிடம் இருந்து என்னைத் தற்காத்துக் கொள்ள எடுத்த முயற்சியில் என்னுடைய இடது கை மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது. இந்தச் சம்பவத்தால் கடும் அதிர்ச்சி அடைந்தேன். நான் உயிரோடு இருப்பதே ஆச்சரியம் தான். காயம் கடுமையானது என்பதால் சிறப்பு மருத்துவரைச் சந்தித்து சிகிச்சை பெற வேண்டியது அவசியமானதாகும். மனதளவில் நான் வலுவானவள்.

காயத்தில் இருந்து போராடி மீண்டும் களம் திரும்புவேன்' என்று குறிப்பிட்டுள்ளார்.

# ஜடேஜாவின் சாதனைகள்

சென்னை, டிசெ.22

இங்கிலாந்துக்கு எதிரான கடைசி டெஸ்டில் இடக்கை சுழற்பந்து வீச்சாளர் ஜடேஜா பந்து வீச்சில் பல சாதனைகளைப் புரிந்துள்ளார்.

இந்த ஆண்டை தித்திப்போடு முடித்துள்ள இந்திய கிரிக்கெட் அணி சென்னையில் நடந்த இங்கிலாந்துக்கு எதிரான கடைசி டெஸ்டில் இன்னிங்ஸ் வித்தியாசத்தில் வெற்றி பெற்று அமர்க்களப்படுத்தியது.

இந்தப் போட்டியில் இடது கை சுழற்பந்து வீச்சாளர் ரவீந்திர ஜடேஜா, இங்கிலாந்து துடுப்பாட்ட வீரர்களுக்கு சிம்ம சொப்பனமாக விளங்கினார்.

ஓட்டப் பெறுதி 103 ஆக உயர்ந்த போது, ஜடேஜாவின் பந்து வீச்சில் குக், ராகுலிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார். ஜடேஜாவின் சுழல் வலையில் குக் சிக்குவது இது 6 ஆவது முறையாகும். அதேபோல், ஜென்னிங்ஸ், ஜடேஜாவின் பந்தில் இறங்கி வந்து ஆட முற்பட்ட போது விக்கெட்டை தாரை வார்த்தார். பந்து அவரது காலின் அடிப்பகுதியில் உரசிய பின்னர் பட்டில் பட்டு நேராக பந்தை வீசிய ஜடேஜாவின் கைக்குச் சென்றது.

அடுத்து வந்த சிறந்த துடுப்பாட்ட வீரர் ஜோரூட்டையும் ஜடேஜா இலாவகமாக வீழ்த்தினார். இவ்வாறு சென்னை டெஸ்ட்டில் ஜடேஜா பந்து வீச்சில் பல சாதனைகளைப் புரிந்தார்.

## அவைத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முதலமைச்சருக்கும் அமைச்சர்களுக்கும் மட்டும்தான் உண்டு. ஏயைனய உறுப்பினர்கள்தங்கள் தனிப்பட்ட கருத்தைக் கூறலாம். ஆனால் அதனை ஒட்டுமொத்த சபையின் கருத்தாக ஊடகங்கள் குறிப்பிடக்கூடாது. ஊடகங்கள் இதனைக் கவனிக்க வேண்டும்." – என்றார் அவைத் தலைவர்.

உறுப்பினர் சயந்தன் 'பட்ஜெட்' விடயங்களோடு இந்த விவாதத்தை மட்டுப்படுத்த வேண்டும். வெளியில் போகக் கூடாது என்றும் அவர் ஒரு கட்டத்தில் சொன்னார்.

பட்ஜெட்டை சார்ந்தே, அவரது அமைச்சில் செய்யப்படாத விடயங்களையே நான் பேசுகிறேன் என்றார் சயந்தன்.

"முதலமைச்சர்தான் ஒத்துழைப்புப் பற்றி பேசியிருக்கின்றார். லண்டனில் போய்க் கூறியிருக்கின்றார். லண்டனால் தானே பிரச்சினை வருகின்றது."– என்றார் சயந்தன்.

அப்போது குறுக்கிட்ட சிவாஜிலிங்கம் "நீங்கள் லண்டன் பற்றி பேசினால் நாங்கள் ஜெனிவாவில் நடந்தவை பற்றிப் பேசுவோம்." – என்றார்.

"சில மாகாண சபை உறுப்பினர்கள் மாகாண சபையை இயங்க விடாது குழப்புகின்றார்கள் என்று முதலமைச்சர்தான் கூறியுள்ளார்." – என்று சயந்தன் குறிப்பிட பலரும் குறுக்கிட்டுப் பதில் கூற முற்பட ஒரே கூச்சலானது.

"பொறுங்கோ. பொறுங்கோ. இந்த விடயத்தை நான் இங்கு பேச முடியாது என்றால் (இந்தச் சபையை குழு நிலையிலிருந்து) சபை நடவடிக்கைக்கு மாற்றுங்கள். அங்கு நான் இதனை சிறப்புரிமைப் பிரச்சினையாகக் கிளப்புகிறேன். அங்கு இது பற்றிப் பேசிவிட்டு பிறகு பட்ஜெட் குறித்து ஆராயலாம்."– என்றார் சயந்தன்.

"இதுசண்டை பிடிக்கும் இடமில்லை. அதை உறுப்பினர் சயந்தன் உணர வேண்டும்." – என்றார் அவைத் தலைவர்.

அப்போது கூட்டமைப்பு உறுப்பினர் கமலேஸ்வரன் குறுக்கிட்டார்.

அதனையடுத்து சபையில் குழப்பம் ஏற்பட்டது. அவைத் தலைவர் சபையை அமைதிப்படுத்த, எதிர்க்கட்சித் தலைவர் தவராசா எழுந்தார்.

"முதலில் சபையை ஒழுங்குபடுத்திக் கட்டுப்படுத்தி வைப்பது உங்கள் கடமை. அதை நீங்கள் செய்ய வேண்டும்."– என்று அவைத் தலைவரைப் பார்த்துச் சொன்னார்.

குறுக்கிட்ட அவைத் தலைவர் "நீங்கள் கட்டுப்பாடாக இருக்காவிட்டால் நான் செய்வது?" – என்று கேள்வி எழுப்பினார்.

"நானும் சொல்லித்தானே பார்க்கிறேன். நீங்கள் கேட்காவிட்டால் என்ன செய்வது?" – என்றும் அவைத் தலைவர் கூறினார்.

அப்போது சிவாஜிலிங்கம் துள்ளி எழுந்தார்.

"உங்களின் கட்டுப்பாட்டில் சபை இல்லாவிட்டால் சபையை ஒத்திவையுங்கள். நீங்கள் இந்திய ரீ.வியில் பார்ப்பதில்லையா, இராஜ்ய சபா மற்றும் லோக சபாவில் இப்படிப் பிரச்சினைகள் வரும்போது ஒத்தி வைக்கப்படுவதில்லையா? அது மாதிரி ஒத்தி வையுங்கள்" – என்று சிவாஜிலிங்கம் குறிப்பிட்டதும் அவைத் தலைவர் சீற்றமடைந்தார்.

"நான் ஒன்று சொல்லுகிறேன் – எச்சரிச்சையாக. எனக்கு ஒன்று தெரியும். பகிரங்கமாக இனிச் சொல்லலாம். இந்தச் சபையை எப்போது கலைக்கலாம், எப்படிக் கலைக்கலாம், ஆரை வைச்சுக் கலைக்கலாம், எந்தத் தேசியத்தை வைத்துக் கலைக்கலாம் என்று பார்த்திருக்கிறார்கள் என்பதெல்லாம் எனக்குத் தெரியும். நாங்கள் இங்கு தெரியாமல் இருக்கவில்லை. நான் கத்துக் குட்டியும் அல்லன். அரசியல் எனக்குத் தெரியும். (அப்படிக் கலைப்பதற்கு) இந்தச் சபை இடம் கொடுக்காது. கடைசிவரையும் இடம்கொடுக்காது. நான் ஒன்றை மட்டும் தெளிவாகச் சொல்லுகிறேன். அரசமைப்புப் பற்றி எனக்குத் தெரியாது. இந்த விடயத்தையும் சொல்லி விடுகிறேன். கௌரவ முதலமைச்சருக்கும் எனக்கும் முரண்பாடு இருக்கின்றது என்பதைப் பகிரங்கமாகச் சொல்பவன் நான்தான். நீங்கள் எல்லாம் ஒளித்து விளையாடுகின்றீர்கள்..." என்று அவைத் தலைவர் கூறுகின்ற போது கூச்சல் எழுந்தது.

சிவாஜிலிங்கம் எழுந்து நின்று சத்தமிட்டார்.

"கலைப்பது என்று கூறி எங்களை அச்சுறுத்த முடியாது. நாங்கள் சாவதற்கும் தயாராகத் தான் அரசியலுக்கு வந்தவர்கள். எனவே எங்களுக்கு கலைப்பதைக் காட்டி மிரட்டாதீர்கள்." – என்று சிவாஜி கூற அவைத் தலைவர் குறுக்கிட்டார்.

"நீர் இரும்" என்ற சாரப்பட அவைத் தலைவர் கூறியமை சிவாஜியைக் கோபப்படுத்திவிட்டது.

"உங்கள் வார்த்தைகளை அளந்து பேசுங்கள். Mind Your Language" என்று சீறினார் சிவாஜிலிங்கம்.

"நீர் கையைக் காட்டிக் காட்டிப் பேசியது எனக்கும் தெரியும். நானும் பேச முடியும்." – என்று பதிலடி தந்தார் அவைத் தலைவர். எனினும் அடுத்த கணம் அவர் நிலைமையைச் சமாளிக்க தணிந்து போனார், ஆனால் அது சிவாஜியிடம் எடுபடவில்லை.

"சும்மா கத்தி பேசுவதில் என்ன பிரயோசனம் சிவாஜி? நாங்கள் எல்லாம் அன்பாக இருக்கத்தானே வேணும்."–என்று அவைத்தலைவர் கூற, சீற்ற நிலையில் இருந்த சிவாஜிலிங்கம், தம் மேசையில் இருந்த 'மைக் ஸ்ராண்ட்டை' உருவினார். அது கையில் வராததை அடுத்து அதைத்தள்ளிவிட்டு எழுந்து வேகமாக சபை மத்தியில் வந்து கையை வீசிக்கொண்டு அவைத் தலைவரை நோக்கிப் பாய்ந்தார்.

"என்ன பிரச்சினைக்கா வாறாய்...? வா, வா, வா..." என்று அவைத் தலைவர் கூறுவதும், அதையடுத்து அதே தொனியில் "போடா...." என்பதோடு தூஷண வார்த்தை ஒன்று ஒலிவாங்கியில் ஒலித்ததையும் கேட்க முடிந்தது. தூஷண வார்த்தையை அடுத்து "சபையை நடத்துகிறது இல்லையா மடையா.... உன்னைப் பற்றித் தெரியாதா...? .... என்ன இவர் கதைக்கிறார்...?" – என்ற சொல்லாடலும் பலத்த சத்தத்துடன் இடம்பெற்றது.

அவைத் தலைவரை நோக்கி பாய்ந்து வந்த சிவாஜிலிங்கத்தை எதிர்கொள்ளத் தயாராக அவைத் தலைவரும் சீற்றத்துடன் பாய்ந்து எழுந்து நின்றமையையும் அவதானிக்க முடிந்தது.

எனினும், அவைத் தலைவருக்கு சில அடி தூரத்தில் வைத்தே சிவாஜிலிங்கத்தை எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசாவும் ஏனையோரும் தடுத்து மறித்து, சமாதானப்படுத்தி திரும்பி அவரை அவரது ஆசனத்துக்குக் கூட்டிச் சென்றனர்.

"இது ஒழுங்கு மீறிய விடயம். இதற்குக் கட்டாயம் நடவடிக்கை எடுக்க வேண்டும். நடவடிக்கை எடுக்காவிட்டால் சபையை நடத்த முடியாது. நடவடிக்கை எடுக்காவிட்டால் சபையை நடத்த நாங்கள் சம்மதிக்க மாட்டோம். இதற்கு ஒழுங்கு நடவடிக்கை எடுத்தேயாக வேண்டும்."– எனப் பரஞ்சோதி தெரிவித்தார்.

குழப்பம் காரணமாக சபையை ஒத்திப்போடும்படி கோரிக்கை முன் வைக்கப்பட்டது. அப்போது சிவாஜிலிங்கத்தின் ரெலோ கட்சியைச் சேர்ந்த விந்தன் கனரட்ணம் குறுக்கிட்டார்.

"இது நாடாளுமன்றத்திலும் நடக்கின்றது. இது பாரதூரமான விடயம் அல்ல. ஆனால் இப்படியான பிரச்சினைகள் வருவதற்குத் தூண்டுகோலாக இருப்பவர்கள் யார்? இதன் பின்னணி என்ன? காரணங்கள் யார்? – இவை எல்லாம் கண்டறியப்பட வேண்டும். அவர் (சிவாஜிலிங்கம்) இவ்வளவு உணர்ச்சிவசப்பட்டு கோபப்படுவதற்கும், அவர் (அவைத் தலைவரை நோக்கிச்) செல்வதற்கும் காரணம், பின்னணி, தூண்டுதல் யாது என்பதை அறிய வேண்டும். இங்கு திட்டமிட்டு அவரைத் தூண்டியுள்ளனர். நாடாளுமன்ற ஜனநாயகத்திலும் தூக்கி எறிகின்றார்கள், அடிபடுகின்றார்கள். சிவாஜியைத் தூண்டிவிட்டவர் யார்?" – என்று விந்தன் கேட்ட போது –

ஓர் உறுப்பினர் " அவருக்கு அது நோய்" – என்றார்.

அதை மறுத்தார் விந்தன். "அவருக்கு நோய் இல்லை. அவரைத் தூண்டியவரைக் கண்டுபிடிப்பது அவைத் தலைவரின் கடமை. கட்சிகளை, போராட்ட இயக்கங்களை கொச்சைப்படுத்தும் விதத்தில் காரியங்கள் அரங்கேற்றப்படுகின்றன." – என்றார் அவர்.

அப்போது ஆர்னோல்ட் குறுக்கிட்டார். "இங்கு யாரும் போராட்டத்தைக் கொச்சைப்படுத்தவில்லை. இது அநாவசியமான, தேவையில்லாத கதை. போராட்டத்தைக் கொச்சைப்படுத்தியவர்கள்தான் அதை இடையிடையே நினைவு படுத்துகின்றனர். எங்களுக்கு அப்படி ஒரு தேவை இருக்கவில்லை." – என்றார் அவர்.

விந்தன் பதிலடி தர முயன்றார்.

"போராட்டத்துக்கு எந்தவித பங்களிப்பும் செய்யாதவர்கள், எந்த வித உதவியும் செய்யாதவர்கள், அதைப்பற்றிக் கதைக்கப்பேச தகுதியற்றவர்கள். அர்ப்பணிப்புச் செய்யாதவர்கள் அது பற்றிப் பேசக்கூடாது" – என்று கத்தினார் விந்தன்.

"ஒட்டுக்குழுவாக இருந்தவர்களுக்கு இங்கு போராட்டம் பற்றிப் பேசுவதற்குத் தகுதி இல்லை. இவர்கள் எந்த நேரமும் எப்படி 'போராட்டம்', 'போராட்டம்' என்று பேசமுடியும்?"–என்று கேள்வி எழுப்பினார் ஆர்னோல்ட்.

பலரும் அப்போது பேச முயன்றதால் கூச்சல் எழுந்தது. அதையடுத்து சபையை ஒத்தி வைத்தார் அவைத்தலைவர்.

இவ்வளவு களேபரங்கள் அரங்கேறிய போதும் முதலமைச்சர் விக்னேஸ்வரன் தமக்குரிய ஆசனத்தில் அமைதியாக அமர்ந்திருந்தர்.

மதிய போசன இடைவேளைக்குப் பின்னர் பிற்பகல் 2.25 மணிக்கு மீண்டும் சபை கூடியது. நடந்த குழப்பகரமான நிலைமைகளில் தான் நடந்து கொண்ட விதம் தொடர்பில் ஏனைய உறுப்பினர்கள் குறை கூறியுள்ளமையுடன் வருத்தம் தெரிவிக்கவேண்டும் எனக் கேட்டுள்ளமையால் தான் வருத்தம் தெரிவிக்கிறார் என கூறினார் சிவாஜிலிங்கம். அவைத்தலைவர் அதை ஏற்றுக்கொண்டார். ஏனைய உறுப்பினர்களும் சிவாஜிலிங்கம் வருத்தம் தெரிவித்தமையைப் பாராட்டினர்.

தான் மதிக்கின்ற சிரேஷ்ட உறுப்பினர் சிவாஜிலிங்கம் என்று குறிப்பிட்ட அவைத் தலைவர் அது உறுப்பினர் சிவாஜிலிங்கத்திற்கும் தெரியும். – என்றார்.

## மாகாண சபையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வடமாகாண சபையின் வரவு – செலவுத் திட்ட விவாத்தில், முதலமைச்சரின் நேரடிப் பொறுப்பிலுள்ள துறைகளுக்கான நிதி ஒதுக்கீடுகளைப் பற்றிய வாதப் பிரதி வாதங்கள் நேற்று இடம் பெற்றன.

மாகாண சபை உறுப்பினர் அஸ்மினைக் கருத்துக்களை முன்வைக்குமாறு அவைத் தலைவர் கேட்டுக்கொண்டார்.

முதல்வரின் துறைகளுக்கான ஒதுக்கீடுகள் – பௌதீக – நிதி முன்னேற்றங்கள் முதலியன பற்றிய தனது கருத்துக்களை முன்வைக்கத் தவறிய அஸ்மின், முதலமைச்சரை அரசியல் ரீதியாக மலினப்படுத்தும் வகையில் தனது உரையை நிகழ்த்தினார்.

அஸ்மினின் உரையைக் குறுக்கிட்டு பல தடவைகள் விமர்சித்த சர்வேஸ்வரன், ரவிகரன், சிவாஜிலிங்கம் ஆகியோர் வரவு – செலவுத் திட்ட விவாதத்தைத் திசைதிருப்பும் வீண் முயற்சியில் அஸ்மின் இறங்கியுள்ளார் எனச் சுட்டிக்காட்டியபடி இருந்தனர்.

அவைத் தலைவர் சி.வீ.கே. சிவஞானம், அஸ்மின் உரையாற்றும் பாணியைக் கேள்விக்குட்படுத்த விரும்பாதவராக உரையைத் தொடர்ந்து அனுமதித்தார். ஆனால் சர்வேஸ், ரவிகரன், சிவாஜி ஆகியோர் காட்டமாகக் கண்டனம் வெளியிட்ட போது, 'சிறு மென்வலுவை' வார்த்தைகளால் பிரயோகித்து அஸ்மினைக் கட்டுப்படுத்த முனைவதாகக் காட்டிக் கொண்டார் அவைத் தலைவர்.

அதேவேளை – பரஞ்சோதி, சுகிர்தன் முதலியோர் அஸ்மினின் உரையை ஆதரித்து 'பக்கப்பாட்டுப் பாடினர்'.

அஸ்மின் ஆற்றிய உரை வடமாகாணசபையின் வரவு – செலவுத் திட்ட விவாதத்தைத் திசை திருப்பியதுடன், சிவாஜிலிங்கம் போன்ற உறுப்பினர்களுக்கு சூடேற்றியும் விட்டது.

அஸ்மின் கிளறிவிட்ட சூட்டை மேலும் கொதி நிலைக்குக் கொண்டுவரும் வகையில், வரவு – செலவுத் திட்ட உரையாக அல்லாமல் முற்றிலுமான அரசியல் விளாசல் உரை ஒன்றை ஆற்றத் தொடங்கினார் சயந்தன்.

அவர் முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரனையும் உறுப்பினர் சிவாஜிலிங்கத்தையும் எள்ளி நகையாடி கேலி செய்து கொண்டிருந்தார். சயந்தனின் உரை நாகரிகமல்லாத முறையில் மாகாணசபையை அவமதிக்கும் வகையில் அமைந்துள்ளதாக சபை உறுப்பினர்கள் பலர் அவைத் தலைவர் சிவஞானத்திடம் முறையிட்ட போதும் அவர் சயந்தனை ஒரு கட்டம் வரை கட்டுப்படுத்தாமல் தொடர்ந்தும் அனுமதித்தார்.

"முதலமைச்சரின் ஒதுக்கீடு தொடர்பில் எல்லாம் நிறைவு என்றால் விவாதம் தேவையில்லை. குறைபாடுகள் உள்ளதால் தான் விவாதம் தேவையாகிறது. போரிலே பாதிக்கப்பட்டவர்களில் மிகவும் நலிவடைந்தவர்களாக போர் விதவைகளையே குறிப்பிடுகிறோம். 3 வருடங்கள் கடந்தும் மகளிர் விவகாரம் தொடர்பில் எதுவித ஆக்க பூர்வமான நடவடிக்கைகளும் முதலமைச்சரால் எடுக்கப்படவில்லை. அது தொடர்பில் ஒரு கொள்கை ஆவணம் முதலமைச்சரிடம் கொடுக்கப்பட்டது. ஆனால் அந்த ஆவணம் எங்கு உள்ளது? அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ வட மாகாண சபைத் தீர்மானத்தை குப்பையில் போட்டுள்ளதாகக் கூறியது போல அதுவும் குப்பைத் தொட்டிக்குள்ளே போடப்பட்டுள்ளதா? மாண்புமிகு முதலமைச்சர் புனர்வாழ்வு, மகளிர்விவகாரம் இரண்டையும் அதற்கு முன்னர் பொறுப்பாக இருந்த அமைச்சரிடமிருந்து பிடுங்கினார்" – எனத் தொடர்ந்தவர் "மாகாண சபையில் சிலர் குழப்புகிறார்கள் என்று லண்டனில் வஞ்சகத்தனமாக முதல்வர் கூறினார்" என்றார் சயந்தன்.

"யாரும் உங்களைக் குழப்புகிறார்களா?" என்று முதல்வரை நோக்கி அவர் உரத்துக் கேட்டார்.

"சயந்தன் விவாதத்தை திசை திருப்புகிறார்" எனக்கூறிய சர்வேஸ், சிவாஜி ஆகியோர் சயந்தனைக் குறுக்கிட்டனர்.

"லண்டன் விடயத்தை மாகாணசபையில் அரசியலாக்காதீர் "என்று சிவாஜி முழக்கமிட்டார்.

"நீங்கள் அமெரிக்காவுக்கு தேங்காய் உடைக்கிறவர். அமெரிக்காவிலும் லண்டனிலும் தான் உங்கள் பிரச்சினை" என்றார் சயந்தன்.

ஆத்திரம் கொப்பளித்த நிலையில் எழுந்தார் சிவாஜி "லண்டனைப்பற்றி நீங்கள் கதைப்பது என்றால் நான் ஜெனிவாவைப்பற்றிக் கதைப்பேன்" என்றார் சிவாஜி. (ஜெனிவாவில் சுமந்திரன் அணியின் செயற்பாடுகளை மறைமுகமாக இப்படிக் குறிப்பிட்டார்)

"சபையைக் கட்டுப்படுத்துங்கள்" என்றார் தவராசா.

வரவு – செலவுத்திட்ட உரையிலிருந்து முற்றாக விலகி நையாண்டி, நக்கல்கள், வசைமாரிகளை முதலமைச்சர் மீதும் சிவாஜிலிங்கம் மீதும் பொழிந்து கொண்டிருந்த சயந்தனைக் கட்டுப்படுத்த அவைத்தலைவர் முனையவில்லை என்று கொதிப்பில் இருந்தார் சிவாஜிலிங்கம். அவைத்தலைவர் செய்வது தவறு என்று சிவாஜி மேசையில் அடித்து உரத்துக் கூறினார்.

இந்நிலையில் அவைத் தலைவர் சிவாஜிலிங்கத்தை கடும் வார்த்தைகளினால் கண்டித்தார்.

இதனால், கோபக்கனல் பறக்க ஆவேச அங்க அசைவுகளை வெளிக்காட்ட ஆரம்பித்தார் சிவாஜி. ஒலிவாங்கியை திருகிப் பிடுங்கி கருவியாகப் பயன்படுத்த விரும்பி, அதைத் தெண்டினார். ஆனால் அது மேசையிலிருந்து பிடுங்கப்பட முடியாத அளவுக்கு பலமாகப் பொருத்தப்பட்டிருந்ததால் ஆவேசத்துடன் அவைத்தலைவரை நோக்கி வேகமாக ஓடினார் சிவாஜி. அதையடுத்து சபை பெருங் களேபரமாயிற்று.

நேற்றைய அமர்வு முழுவதும் பெரும்குழப்பமாக அமைந்தது.

சபையில் அர்த்தமுள்ள விவாதம் நடைபெறவில்லை. ஆளும் தரப்பினரே அணி பிரிந்து நின்று 'அடிபடாத' குறையாக வார்த்தைகளினால் மோதுவதே நடந்தேறியது.

எனினும், நேற்றைய அமர்வின் இறுதியில் முதலமைச்சரின் கீழ்வரும் துறைகள் மீதான ஒதுக்கீடுகள் ஏகமனதாக அங்கீகரிக்கப்பட்டன. (உ)

காலைக்கதிர்
Kalaikkathir

# இன நல்லிணக்கத்துக்காக மட்டக்களப்பில் சந்திப்பு



கொழும்பு, டிசெ.22

இனரீதியானமுரண்பாடுகள் ஏற்படும் போது அவற்றை உடனடியாகப் பேசித் தீர்த்துக் கொள்ள வேண்டும். நல்லிணக்கத்தையும் சமூக ஒற்றுமையையும் ஏற்படுத்த அனைவரும் ஒன்றுபட்டுச் செயற்பட வேண்டும் என நீதி மற்றும் புத்தசாசன அமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நேற்று மட்டக்களப்பு மாவட்டச் செயலகத்தில் நடைபெற்ற இனநல்லிணக்கம் தொடர்பான விசேட கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில் –

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் பணிப்புரையின் பேரில் மட்டக்களப்புக்கு விஜயம் செய்து பொதுபலசேனாவின் தலைவர் ஞானசார தேரர் மற்றும் மட்டக்களப்பு மங்களராமய விகாராதிபதி அம்பிட்டிய சுமணரத்ண தேரர் உள்ளிட்ட பலரைச் சந்தித்துக் கலந்துரையாடினோம்.

நாட்டில்சுமுகமானநிலையை ஏற்படுத்துவதற்கு அவர்கள் தடையாக இருக்க மாட்டார்கள் எனக் கூறியுள்ளனர். இன முரண்பாடுகள் ஏற்படாத வண்ணம் அனைவரும் பார்த்துக் கொள்ள வேண்டும்.

இன நல்லிணக்கத்தைக் கருத்திற்கொண்டு செயற்பட வேண்டும். நமது நாடு ஒரு இலக்கை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கின்றது. அந்த இலக்கை அடைவதற்கு அனைவரும் உதவியாகச் செயற்பட வேண்டும்.

இன முரண்பாடுகள், இன விரிசல்கள் ஏற்படும் போது அவற்றைப்பேசித்தீர்ப்பதற்காகவும் சுமுகமான நிலைமையை ஏற்படுத்துவதற்காகவும் ஜனாதிபதியால் குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது.

அந்தக் குழுவில் நான் மற்றும் அமைச்சர்களான டி.எம். சுவாமிநாதன், ஏ.எச்.எம். ஹஸிம், மனோகணேசன், ஜோன் அமரதுங்க, பிரதியமைச்சர் அமீர்அலி, உள்ளிட்ட பலர் உள்ளனர். – என்றார்.

இந்த விசேட கூட்டத்தில் கிராமியப் பொருளாதார அலுவல்கள் பிரதியமைச்சர் அமீர்அலி, நாடாளுமன்ற உறுப்பினர் சிறிநேசன், அலிஸாஹிர் மௌலானா, மாவட்ட அரசாங்க அதிபர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ், மேலதிக அரசாங்க அதிபர் எஸ். கிரிதரன் உட்படப் பலர் கலந்து கொண்டனர். (உ)

# ஒற்றையாட்சியை நாசப்படுத்த முயன்றால் பெரும் போராட்டம்!

## வெடிக்கும் என்கிறார் தினேஷ்

வவுனியா, டிசெ.22

புதிய அரசமைப்பில் சமஷ்டி அடிப்படையிலான தீர்வைப் பரிசீலனை செய்து ஒற்றையாட்சியை நாசமாக்க அரசு முற்படுமாயின் அதற்கு எதிராகப் பொது எதிரணி, மக்கள் சக்தியைத் திரட்டி பாரிய எதிர்ப்பைத் தெரிவிக்கவுள்ளது என கூட்டு எதிர்க்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

அவ்வாறான ஒரு அரசமைப்பை நிறைவேற்ற ஒரு போதும் இடமளிக்கப்பட மாட்டாது எனவும் அவர் கூறியுள்ளார்.

2017ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் கொண்டுவருவதற்கு அரசு உத்தேசித்துள்ள புதிய அரசமைப்புத் தொடர்பில் அரசுக்குள் இதுவரை உறுதியான தீர்வு எதுவும் எட்டப்படவில்லை.

எனினும், ஐக்கிய தேசியக் கட்சி சமஷ்டி முறையான அதிகாரப்பகிர்வைக்கொடுப்பதற்குத் தயாராகவே உள்ளது. ஐ.தே.கவினர் விடுதலைப் புலிகளுடனும் இதனையே அன்று பேரம் பேசினர்.

எனினும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஒற்றையாட்சியின் அடிப்படையிலேயே தீர்வு என்று அன்று முதல் வலியுறுத்தி வந்துள்ளது. தற்போதைய சூழலிலும் சுதந்திரக் கட்சி எவ்வாறான முறையில் தீர்வை வழங்குவது என்று இன்னமும் தீர்மானிக்கவில்லை என்பது தெளிவாக விளங்குகின்றது.

எவ்வாறாயினும் ஐக்கிய தேசியக் கட்சிக்கு சக்தியைக் கொடுத்துவரும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் கோரிக்கைக்கு அமைய, சமஷ்டி முறையான அரசமைப்பைக் கொண்டுவர முயற்சித்தால் பாரதூரமான விளைவுகளைச் சந்திக்க நேரிடும் எனவும் கூட்டு எதிர்க்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்தன மேலும் தெரிவித்துள்ளார்.

# இரண்டு சிறுவர்கள் பொலிஸாரால் கைது!

கொழும்பு, டிசெ.22

சலூனில் திருட முற்பட்ட சிறுவர்கள் இருவர் யாழ்ப்பாணம் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

அரியாலை மாம்பழம் சந்தியில் உள்ள சலூன் ஒன்றில், நேற்று நண்பகல் சிறுவர்கள் இருவரும் திருட முற்பட்டுள்ளனர். இந்தச் சம்பவத்தை நேரில் கண்டவர்கள் பொலிஸாருக்குத் தகவல் வழங்கியதையடுத்து இரு சிறுவர்களும் சம்பவ இடத்தில்வைத்துக்கைதுசெய்யப்பட்டனர்.

கைதுசெய்யப்பட்ட இருவரிடமும் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் போது, அதே இடத்தில் உள்ள தொலைபேசி விற்பனை நிலையத்தில் கடந்த காலங்களில் 16 ஆயிரம் ரூபா பெறுமதியான கையடக்கத் தொலைபேசி ஒன்றையும், 50 சி.டி.க்களையும் இவர்கள் திருடியமை தெரியவந்தது.

நெடுங்குளம் பகுதியைச் சேர்ந்த 10 வயது மற்றும் 11 வயது உடைய இந்தச் சிறுவர்கள் இருவரையும் சிறுவர் நீதிமன்றி ஆஜர்ப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை யாழ்ப்பாணம் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (உ)

# சபைக்குத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சபைக்கு உங்களை மக்கள் தெரிவு செய்திருக்காவிட்டால் – அல்லது இந்த எம்.பி. பதவியை நீங்கள் இழந்து விட்டால் – ஒரு நாயும் உங்களைத் தேடாது."

– இப்படி நேற்றைய வடக்கு மாகாண சபை அமர்வின் ஒரு கட்டத்தில் விசனத்துடன் குறிப்பிட்டார் அவைத் தலைவர் சி.வீ.கே.சிவஞானம்.

சபையின் உறுப்பினர்கள், சபையின் கௌரவத்தையும் கண்ணியத்தையும் பேண வேண்டும் என்பதை அவர்களுக்கு நினைவுபடுத்தவே அவர் இவ்வாறு குறிப்பிட வேண்டியிருந்தது.

நேற்றைய அமர்வின்போது உறுப்பினர்களைக் கட்டுப்படுத்தக் கஷ்டப்பட்ட அவைத் தலைவர், பல தடவைகள் இப்படி விசனத்தின் உச்சிக்கே சென்று 'வெடிக்க' வேண்டியவரானார்.

'நாய்' என்ற வார்த்தையை அவைத் தலைவர் பயன்படுத்தியமையைக் கடுமையாக ஆட்சேபித்தார் ஆர்னோல்ட். அதனை அவைக் குறிப்புப் புத்தகத்திலிருந்து நீக்கும்படி அவர் வற்புறுத்தினார்.

சிவாஜிலிங்கமோ தமக்கே உரிய பாணியில் அவைத் தலைவரின் சொல்லாடலை மாற்ற முயன்றார்.

"ஒரு நாயும் உங்களைத் தேடாது என்று பன்மையில் கூறாதீர்கள். ஒரு நாயும் 'என்னைத் தேடாது' என்று நீங்கள் ஒருமையில் கூறினால் அது சரியாக இருக்கும் " – என்றார் சிவாஜிலிங்கம்.

# ரத்னசிறி சுகவீனம்

கொழும்பு, டிசெ.22

முன்னாள் பிரதமர் ரத்னசிறி விக்கிரமநாயக்க சுகவீனம் காரணமாககொழும்பில்உள்ளதனியார் வைத்தியசாலை ஒன்றில் சேர்க்கப்பட்டுள்ளார்.

அவரைநலம்விசாரிக்கமுன்னாள் பிரதமர் தி.மு.ஜயரத்ன கடந்த செவ்வாய்க்கிழமை வைத்தியசாலைக்கு சென்றிருந்தார்.

# மயிலிட்டித்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மக்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு மீள் குடியமர்த்தப்பட வேண்டும் என இந்தக் கூட்டத்தில்தீர்மானம்நிறைவேற்றப்பட்டது.

அதன்போது கருத்துத் தெரிவிக்கையிலேயே நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் தொடர்ந்து கூறுகையில் –

நாம் ஒன்றும் தெரியாமல் இங்கு இருக்கிறோம் என நினைப்பவர்கள் நான் கூறுவதைத் தெரிந்து கொள்ள வேண்டும்.

எமது காணிகள் தொடர்பில் நீங்கள் நூறு தடவைகள் பேசினால் நான் ஆயிரம் தடவைகள் பேசுவேன். அதை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். அவ்வாறான நடவடிக்கைகளில் தான் நாம் ஈடுபட்டு வருகிறோம்.

இராணுவத்தின் தேவைக்காக மக்களின் காணிகள் அபகரிக்கப்பட்டு அதற்குப் பதிலாக நட்டஈடு கொடுப்பது என அரசால் அறிவிக்கப்பட்டது. அது எம்மால் நிறுத்தப்பட்டது.

விடுவிக்கப்படாத பல பகுதிகளை எமது முயற்சியால் விடுவித்துள்ளோம். முரணான வகையில் உருவாக்கப்பட்ட வேலைத்திட்டங்கள் பலவற்றை நிறுத்தியுள்ளோம். இவ்வாறு பல செயற்பாடுகளை நாம் மேற்கொண்டு வருகிறோம்.

மயிலிட்டித் துறைமுகத்தையும் அதனை அண்டிய பிரதேசத்தையும் விடுவித்தால் மாத்திரமே மீள்குடியேற்றம் நிறைவு பெறும் என ஜனாதிபதி மற்றும் பிரதமருக்கு ஆணித்தரமாகக் கூறியிருக்கின்றேன். அதற்கு அவர்கள் உடன்பட்டுள்ளனர்.

எமது பகுதியில் உள்ள ஒவ்வொரு அங்குலமும் விடுவிக்கப்படும் வரை எங்களுடைய முயற்சிகளை நாம் எடுத்துக்கொண்டிருப்போம்.

அதேபோன்று பலாலி விமானத்தளம் தொடர்பாக பிரதமரிடமும் இந்திய அரசிடமும் பேசியிருக்கிறோம். விமானத்தளத்தை அண்டிய பகுதிகள் விடுவிக்கப்பட்டுள்ளன.

எங்களுடைய பிரதேசத்தில் முகாமில் இருப்பவர்கள் மட்டும் நிலம் இல்லாமல் இருப்பவர்கள் அல்லர். வெளி இடங்களில் தங்கியுள்ள ஏனையவர்களும் நிலம் இல்லாமல் உள்ளனர்.

காணிகள் தொடர்பான பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக ஜனாதிபதி மற்றும் பிரதமருடனான கலந்துரையாடல் ஒன்று ஜனவரி மாதம் நடைபெற உள்ளது. அதில் சாதகமான தீர்வு வரும் என எதிர்பார்க்கின்றோம். – என்றார்.

# தேசியப் பாதுகாப்பு; ஜனாதிபதி உறுதி

புதிய அரசமைப்பானது நாட்டின்தேசிய பாதுகாப்புக்கு எவ்விதமான பாதிப்பையும் ஏற்படுத்தாது என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதிசெயலகத்தில்நேற்றுப் பிற்பகல் இடம்பெற்ற தேசிய படைவீரர் ஒன்றியத்துடனான கலந்துரையாடலின் போதே ஜனாதிபதி இவ்வாறு கூறினார்.

# கொழும்பில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்ற போதைப் பொருளுடன் சந்தேகநபர் கைது செய்யப்பட்டார்.

. வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட இந்தப்போதைப்பொருளை நண்பர் ஒருவர் தனக்குத் தந்தார் என சந்தேகநபர் விசாரணைகளில் தெரிவித்துள்ளார்.

மினுவாங்கொட நீதிமன்றத்தில் இவரை ஆஜர்ப்படுத்திய போது ஜனவரி 2ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

கைப்பற்றப்பட்ட போதைப் பொருள் 73 லட்சம் ரூபா பெறுமதியானது எனத் தெரிவிக்கப்பட்டது. (உ)

# "அடிப்பன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மணிச் சத்தத்தையும் ஒலிவாங்கியை வெட்டும் கதையையும் கேட்டதும் விசனமும் கவலையும் தொனிக்க எழுந்தார்.

"நேற்றுத் தொடக்கம் இங்கே உரையாற்றியோர் எத்தனை நிமிடங்கள் உரையாற்றினர் என்பதை நேரம் கணித்து குறித்து வைத்திருக்கிறேன்." என்று கூறிய ரவிகரன் "42 நிமிடங்கள், 52 நிமிடங்கள், 39 நிமிடங்கள்...." எனப் பெயரோடு நேரத்தையும் வாசிக்கத் தொடங்கினார்.

"நேற்று (செவ்வாயன்று) அனைத்து உறுப்பினர்களுக்கும் போதிய நேரம் கொடுத்து விட்டு இன்று என் போன்றவர்களை ஏன் கட்டுப்படுத்த வேண்டும்?" – என விசனம் தெரிவித்தார் ரவிகரன்.

நேற்றைய அமர்வு முழுவதுமே அவையின் ஒழுங்கைப் பேணுவதில் மிகவும் சிரமங்களை எதிர்கொண்டார் அவைத் தலைவர்.

யாரோ ஓர் உறுப்பினரின் கைத்தொலைபேசி விவாதம் தொடர்ந்துநடக்கும்போது அலறத் தொடங்கியது. இதனால்பொறுமையிழந்த அவைத் தலைவர் "ஏற்கனவே உள்ளே போன் 'றிங்' பண்ணும்சத்தம்கேட்கக்கூடியதாக வைத்திருக்கவேண்டாம் என்று அறிவித் துள்ளேன். யாருடைய போன்? அதை எறியுங்கோ அல்லது உடையுங்கோ" என்றார்அவர் எரிச்சலுடன்.

பின்னர் பிற்பகல் அமர்வின் போதும் உள்ளே சபா மண்டபத்துள் யாரோ ஓர் உறுப்பினரின் கைத்தொலைபேசி மீண்டும் அலறியது.

"சொல்லச்சொல்ல கேட்காமல் நடப்பது கொஞ்சம் 'ஓவரா'த் தெரியேல்லையா?" என்று இம்முறை அப்பாவித்தனமாகக் கேட்டார் சி.வீ.கே.

# கஞ்சாவுடன் பெண் கைது!

யாழ்ப்பாணம், டிசெ.22

யாழ்.சிறைச்சாலைக்குள் கஞ்சா கொண்டு செல்ல முற்பட்ட பெண் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

50 கிராம் கஞ்சாவை உணவுப் பொதி ஒன்றுக்குள் மறைத்து சிறைச்சாலைக்குள் கொண்டு சென்ற பெண் ஒருவரை சிறைச்சாலை அதிகாரிகள் கைது செய்து யாழ்ப்பாணம் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

அல்லைப்பிட்டி வென்புரவி பகுதியைச் சேர்ந்த பெண் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

அதிரடி சேல் விரையுங்கள்

+ அப்பியாசக் கொப்பிகள் 25% முதல் 30% வரை
+ பாட நூல்கள், உலக பிரசித்தி நாவல்கள், மருத்துவ நூல்கள், அகராதிகள் 10% முதல் 50% வரை
+ பிரமாண்டமான காட்சியறை உங்கள் எண்ணம் போல் தேர்வு செய்திட ஒருமுறை விஜயம் செய்யுங்கள் வித்தியாசத்தை உணர்வீர்கள்.

ஞாயிற்றுக்கிழமைகளிலும் எமது சேவை வழமைபோல் இடம்பெறும்.

ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்

இல. 212, 214, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.:021 222 5542, 021 567 1527, acdil@gmail.com

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 22.12.2016 இல் அச்சிடப்பட்டுவெளியிடப்பெற்றது.